விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 27 வெள்ளிக்கிழமை (11.01.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 023

## பயங்கரவாத சட்டம் நீக்கப்பட வேண்டும்

### பாராளுமன்றில் ஜே.வி.பி வலியுறுத்து

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

பாராளுமன்றில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இவ்வாறு கூறியுள்ளார்.

23 ☛

## பாடசாலைச் சூழலில் போதைக்கு இடமில்லை

### சம்பந்தப்பட்ட தரப்புக்கு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

பாடசாலை பிள்ளைகளை இலக்காகக்கொண்டு பாடசாலை சூழலில் இடம்பெறும் பல்வேறு வகையான போதைப் பொருள் விற்பனை நடவடிக்கைகளை முற்றாக இல்லாதொழிப்பதற்கு முறையான நிகழ்ச்சித்திட்டமொன்றை அனைத்து தரப்பினர்களினதும் பங்களிப்புடன் நடைமுறைப்

23 ☛

## அரசியலமைப்பு சபை இன்று கூடுகின்றது

### பிரதி சபாநாயகர் அறிவிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பு சபையை கூட்டுவதற்கு பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்திய போதிலும் அதனை நிராகரித்த பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரஸ்ரீ, ஏற்கெனவே அறிவித்தபடி அரசியலமைப்பு சபை இன்று வெள்ளிக்கிழமை கூடுமென்பதை உறுதிப்படுத்தினார்.

24 ☛

# போர்க்குற்றவாளி ஒருவர் இராணுவப் பிரதானியாவது

## இலங்கையை கீழ்நிலைக்கு இட்டுச்சென்றுள்ளது
## நீதிக்கான நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா



(கொழும்பு) மிகமோசமான போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள ஒருவரை இராணுவத்தின் பிரதானியாக நியமிப்பது என்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தீர்மானம், இலங்கையை மிகவும் கீழ்நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது என்று சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

2009-ம் ஆண்டு மருத்துவமனைகள், உணவினை பெறுவதற்காக வரிசையில் நின்றவர்கள் மற்றும் முகாம்கள் மீது வேண்டுமென்றே தாக்குதலை மேற்கொண்டு ஒரு சில

23 ☛

## பெற்றோல் மற்றும் டீசல் விலைகள் 2 ரூபாய் குறைப்பு

(கொழும்பு)

பெற்றோல் மற்றும் டீசலின் விலைகள் நேற்று வியாழக்கிழமை நள்ளிரவு முதல் குறைக்கப்படுகிறது என்று நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

பெற்றோல் 92 மற்றும் 95 ஒக்ரைனின் விலை 2 ரூபாயாலும் டீசலின் விலை 2 ரூபாயாலும் சுப்பர் டீசலின் விலை 2 ரூபாயாலும் குறைக்கப்படுகிறது.

24 ☛

## ஆட்சிக் குழப்பம் ஏற்பட்டிருக்காவிடின் கடன் குறைந்திருக்கும் - பிரதமர் ரணில்

(கொழும்பு)

ஆட்சிக் குழப்பம் ஏற்பட்டிருக்காவிட்டால் நாட்டின் பாரிய கடன் சுமைகளில் பெரும்பாலானவை குறைக்கப்பட்டிருக்கும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜனநாயகத்தை வென்றெடுத்தது போல, பொருளாதாரத்தையும் தமது அரசாங்கம் வென்றெடுக்கும் என அவர்

23 ☛

## மயங்கி விழுந்த குடும்பப் பெண் உயிரிழப்பு

(கரணவாய்)

சந்தையில் பொருட்கள் வாங்கிவிட்டு வீடு திரும்பிய குடும்பப் பெண் ஒருவர் மயங்கி விழுந்து மரணமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று வியாழக்கிழமை மதியம் வியாபாரிமூலையில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் உதயகிரி வியாபாரிமூலையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயாரான சாந்தி பாலச்சந்திரன்

23 ☛

## எட்டு இந்திய மீனவர்கள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த எட்டு இந்திய மீனவர்களையும் நிபந்தனையுடன் ஊர்காவற்றுறை நீதிமன்றம் விடுவித்துள்ளது.

எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் கடந்த

23 ☛

### மண்டைதீவில் இளைஞர்கள் படுகொலை-

## காணாமல் போனோர் அலுவலகம் அக்கறை

### சாலிய பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

மண்டைதீவில் உள்ள இரு கிணறுகளில் தமிழ் இளைஞர்களின் சடலங்கள் போடப்பட்டு மூடப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிறீதரன் எம்.பி முன் வைத்துள்ள கருத்து தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளதாகவும், இக்கருத்து தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக்

23 ☛

## இறுதி யுத்தத்தில் பங்கெடுத்தவர்

### மத்தியஸ்தம் வகிக்க முடியாது - சுமந்திரன்

(கொழும்பு)

உள்நாட்டு யுத்தத்தில் பங்கெடுத்த தரப்பாக இலங்கை உள்ள நிலையில், அதில் இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பான விசாரணையில் மத்தியஸ்தம் வகிக்க முடியாதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்

23 ☛

### ஒப்புதல் வாக்குமூல அடிப்படையில்

## இரு அரசியல் கைதிகளுக்கு 5 வருட சிறைத்தண்டனை

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் இருந்த அரசியல் கைதிகள் இருவருக்கு குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அடிப்படையாக கொண்டு அநுராதபுரம் நீதிமன்றால் 5 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி அநுராதபுரம் வில்பத்து காட்டில் இருந்து மேற்கொள்ளப்பட்ட விமானத்தாக்குதலில் 35 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

குறித்த தாக்குதலுடன் சம்பந்தப்பட்டதாக தெரிவித்து

23 ☛

### உதவி பெற்றுக்கொள்வதற்காக

## இந்தியாவிடம் அடகு வைக்கத் தயாரில்லை

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவிடம் பாரிய நிதி உதவியை பெற்றுக் கொள்கிறோம் என்பதற்காக, இந்தியாவிற்கு திருகோணமலை துறைமுகத்தையோ, மத்தள விமான நிலையத்தையோ, காங்கேசன்துறை துறைமுகத்தையோ வழங்க தயாராக இல்லையென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

23 ☛

## போதை மாத்திரை உட்கொண்ட தரம் 9-ல் கற்கும் மாணவர்கள்

### வலி.வடக்கு பாடசாலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு மீள்குடியேற்றப்பகுதிக்குட்பட்ட பாடசாலை ஒன்றில் தரம் ஒன்பதில் கல்வி கற்கும் 14 வயதுடைய மாணவர்கள் மூவர் போதை மாத்திரைகள் உட்கொண்டு போதை ஏறிய நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரியவருகையில்,

நல்லிணக்கபுரத்தில் உள்ள இரு மாணவர்களும் தெல்லிப்பழையை சேர்ந்த ஒரு மாணவனும் இணைந்து நேற்று காலை பாடசாலைக்கு சென்றுள்ளனர். அதில் நல்லிணக்கபுரத்தை சேர்ந்த மாணவர் ஒருவர் தனது சகோதரனிடம் (வயது 16) இருந்து போதை மாத்திரைகளை (20 மாத்திரைகள்) பெற்று வந்துள்ளார்.

04 ☛

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுகள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-5100)

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

## ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

யாழ் மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத்திருக் கோவிலில் தமிழகத்தின் தலைசிறந்த பேராசிரியர்களில் மூத்த பேராசிரியை அருள்நிதி இந்திரா சண்முகசுந்தரம் அவர்களால் பயிற்சிகள் நடாத்தப்பட இருப்பதால் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- எளியமுறை உடற்பயிற்சிகள்
- எளியமுறை தியானப்பயிற்சிகள்
- காயகல்ப்பப் பயிற்சி
- அகத்தாய்வுப் பயிற்சிகள்

காலம் : 12.01.2019 சனிக்கிழமை தொடக்கம் 18.01.2019 வெள்ளிக்கிழமை வரை
நேரம் : மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை
பயிற்சிகளை வழங்குபவர்கள் : மனவளக்கலை பேராசிரியர் ச.இந்திரா
துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன்

அகத்தாய்வு 2ஆம் நிலை 12.01.2019 சனி மற்றும் 13.01.2019 ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9.00 மணிக்கு நடைபெறும். மேலும் திங்கள் தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை காலை 9.00 மணி தொடக்கம் 1.00 மணி வரை அகத்தாய்வு பயிற்சி நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல : 021 222 2772
(C-5103)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07 ❊ 04 ❊ 1995



மறைவு 12 ❊ 01 ❊ 2017

அமரர்

## பாலச்சந்திரன் சுகிந்தன்

(யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர்)

"வானத்தில் இருந்து எங்கள் கண்ணீரை
பாரடா மகனே!"

உயிரோடு உயிராக எம்முடன் வாழ்ந்தீர் அன்று
உம் நினைவோடு உயிர் வாழ்கின்றோம் நாம் இன்று
பல நூறு ஆண்டுகள் சென்றாலும்
பாரினில் நீர் என்றும் எம்மோடு வாழ்வீர்!
பாசத்தோடு உம் உறவுகள் யாவும்
உமது நினைவுகளுடனே என்றும் வாழும்!

(7102)

மூளாய் வேரம்,
[அக்கினிவைரவர்கோவிலடி] மூளாய்.
உமது நினைவுகளுடன் - குடும்பத்தினர்
077 167 3442

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையானதொரு
தனித்துவமிக்க பயிற்சி நிலையம்
யாழ். **கலாலயா** பயிற்சியகம்
இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி
ஆணையத்தால் பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)



## மகளிருக்கான பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!



✌ *கேக் ஐசிங்* - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream, Piping Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
✌ *உணவு தயாரித்தல்* - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங்கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல். ✌ *கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்* 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.







✌ **FACIALS** *(முக அழகுக்கலை)* Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing) ✌ **BRIDAL DRESSINGS** *(மணப்பெண் அலங்காரங்கள்)* இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகளும் பயிற்றுவிக்கப்படும்.

**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**



✌ *பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார்,* மற்றும் மகளிருக்கான ஆடைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற கிழமை நாள் பயிற்சிகள்.

பயிற்சிகள் யாவும் பலவருட அனுபவமிக்க எமது ஆசிரியைகளினால் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்படும்!

**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**19.01.2019 சனி காலை 10.00மணி**
**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**21.01.2019 திங்கள் காலை 10.00 மணி**

(C-5102)

மேலும் விபரங்களை பி.ப 5.30 வரை நேரில் அறிந்து கொள்ளலாம். -இயக்குநர்-

Guru

# 31-ம் நாள் நினைவஞ்சலி அறிவித்தல்



## திருமதி குணநாயகி நாகலிங்கம்

(இல.111, D.10, உருத்திரபுரம்,
கிளிநொச்சி)

02.12.2018 அன்று கனடாவில் சிவபதம் எய்திய எமது குடும்பத் தலைவியின் 31-ம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (12.01.2019) சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் எமது இல்லமான இல.111, D.10, உருத்திரபுரத்தில் நடைபெறும்.

எமது தாயார் எம்மைவிட்டு பிரிந்த துயரச் செய்தி கேட்டு எமது இல்லம் வந்து துயர் பகிர்ந்தும் பல வழிகளில் உதவிகள் புரிந்தும் உதவிய உறவுகள், நண்பர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும், அன்றைய தினம் நடைபெறும் மதிய போசன விருந்திலும் கலந்துகொள்ளுமாறும் இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
கண்ணன் (மகன்)
0776102331
கா.நாகலிங்கம் (கனடா)
01416650079

தகவல்:
கா.நாகலிங்கம்
(ஓய்வுநிலை அதிபர்)
குடும்பத்தினர்

(C-5104)

# மாகாணத் தேர்தல் விகிதாசார முறையில் பிரதான இரண்டு கட்சிகளும் இணக்கம்



## நாடாளுமன்றில் அமைச்சர் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

**மாகாணசபைத் தேர்தல்களை பழைய முறையான விகிதாசார முறையில் நடத்துவதற்கு இரண்டு பிரதான கட்சிகளும் இணங்கி யிருப்பதாக சபை முதல்வர் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான எல்லை நிர்ணய மீளாய்வுக் குழுவின் அறிக்கை இன்னமும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாமை தொடர்பில் ஐ.ம.சு.முவின் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இதனைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் ஆளும் கட்சி எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கிடையில் கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெற்றன. மாகாண சபைகளுக்கான எல்லை நிர்ணய அறிக்கையை பாராளுமன்றம் நிராகரித்துள்ள நிலையில், அதனை மீளாய்வு செய்ய பிரதமர் தலைமையில் குழுவொன்றை சபாநாயகர் நியமித்தார்.

இந்தக் குழுவின் அறிக்கை இன்னமும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லையென பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

"பிரதமர் தலைமையிலான மீளாய்வுக் குழுவுக்கு இரண்டு மாதங்களே கால அவகாசம் வழங்கப்பட்டது. இந்த இரண்டு மாத காலத்துக்குள் மீளாய்வு அறிக்கையை சமர்ப்பிக்க பிரதமர் தவறிவிட்டார். பாராளுமன்ற சட்டத்தின் படி குறித்த மீளாய்வு அறிக்கையை சபாநாயகர் அல்லது பிரதமர், ஜனாதிபதிக்கு அனுப்ப வேண்டும்.

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதாயின் இந்த அறிக்கை நிறைவேற்றப்பட வேண்டும்"என தினேஷ் குணவர்த்தன எம்.பி. தெரிவித்தார்.

இந்த விடயத்தில் ஏன் இன்னமும் காலதாமதம் உள்ளது என சபைக்குத் தலைமை தாங்கிய பிரதிச் சபாநாயகரிடம், தினேஷ் குணவர்த்தன எம்.பி.கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி, இந்த விவகாரம் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், மீளாய்வு அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் அங்கு தீர்மானிக்கப்பட்டது என்றார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சபை முதல்வர் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, இது பற்றிய அறிக்கையை சபாநாயகரே ஜனாதிபதிக்கு அனுப்ப வேண்டும் என்றார்.

இரு தரப்பும் இணங்கும் நிலையில் எல்லைநிர்ணயம் குறித்த மீளாய்வு அறிக்கையை சபாநாயகர், ஜனாதிபதிக்கு அனுப்ப வேண்டும் என அமைச்சர் கிரியெல்ல மற்றும் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் பிரதி சபாநாயகருக்குச் சுட்டிக்காட்டினர்.

சபையில் இடம்பெற்ற கருத்துப் பரிமாற்றத்தின் போது சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சியின் பிரதம கொறடா மகிந்த அமரவீர, சபாநாயகர் நாட்டில் இல்லையென்பதால் அவர் சார்பில் செயற்படுவதற்கான உரிமை பிரதி சபாநாயகருக்கு இருப்பதாகக் கூறினார்.

எனினும், இது தொடர்பில் தனக்கு முழுமையாகத் தெரியாது என்றும், சபாநாயகர் நாடு திரும்பியதும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோருவதாகவும் தெரிவித்தார்.

தாம் தேர்தலை நடத்த அஞ்சவில்லையென்றும், தமக்கும்தேர்தலை நடத்த வேண்டிய தேவை இருப்பதாகவும் சபை முதல்வர் தெரிவித் தார்.

இதேவேளை வாசுதேவ நாணயக்கார எம்.பி. கருத்துத் தெரிவிக்கையில், மீளாய்வு அறிக்கை இரண்டு மாதங்களில் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும். இந்த இணக்கப்பாடு மீறப்பட்டிருந்தால் அதற்கான காரணத்தை மீளாய்வுக் குழுவின் தலைவரான பிரதமர் பாராளுமன்றத்துக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றார்.

ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவும் இந்தக் கருத்தையே வலியுறுத்தினார். மீளாய்வு அறிக்கையை சமர்ப்பிக்காமையால் மாகாணசபைத் தேர்தல்களை நடத்த முடியாத நிலை தோன்றியுள்ளது. எனவே விரைவில் மீளாய்வு அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

மாகாணசபைத் தேர்தலுக்கான எல்லைநிர்ணய அறிக்கையை இரண்டு பிரதான கட்சிகளும் நிராகரித்திருந்தன. அந்த அறிக்கையை சமர்ப்பித்த அமைச்சரே அதனை எதிர்க்கும் நிலை தோன்றியிருந்தது. உரிய நேரத்தில் அறிக்கையை நிறைவேற்றியிருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மீண்டும் கருத்துத் தெரிவித்த சபை முதல்வர் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, ஏற்கனவே நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மாகாணசபைத் தேர்தல்களை பழைய முறையான விகிதாசார முறையில் நடத்துவதற்கு இணங்கியிருப்பதாகவும், பழைய முறையில் தேர்தலை நடத்த எந்த ஆட்சேபனையும் இல்லையென்றார்.

இந்த விவகாரம் குறித்து நீண்ட விவாதம் நடத்த இடமளிக்கமுடியாது எனக் கூறி பிரதி சபாநாயகர் ஆளும் கட்சி- எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கிடையிலான கருத்துப் பரிமாற்றத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார். (இ-7)

---

"யுத்தக்குற்றச்சாட்டுக்கள் மீது சர்வதேச விசாரணைக்கு இணக்கம்"

# பாரிய சவால்களுக்கு மத்தியிலேயே ஜனாதிபதி அரசை வழிநடத்தினார்

## மகிந்த அமரவீர சுட்டிக்காட்டு



(கொழும்பு)

கடந்த நான்கு வருடங்களாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாரிய சவால்களுக்கு மத்தியிலேயே இந்த அரசாங்கத்தை வழிநடத்திச் சென்றாரென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அமரவீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐ.நா. உள்ளிட்ட பல்வேறு சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுத்துள்ளார்.

மேலும் அரசியலுக்கு அப்பால், நாட்டின் இறையாண்மைக்கு அவர் முன்னுரிமை வழங்கியதுடன், வடக்கு- கிழக்கின் ஐக்கியம், அபிவிருத்தி ஆகியவற்றுக்கும் தனது முழு பங்களிப்பையும் வழங்கியுள்ளார்.

இதேவேளை இலங்கையின் பிரதிநிதியாக நான் ஜெனீவாவில் பங்கேற்ற போது, அங்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் அனைத்தும் இலங்கை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் தான் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

ஆனால், இந்த அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட பிரேரணை தொடர்பில் தனக்கே தெரியாதென ஜனாதிபதி கூறியிருந்தார்.

குறிப்பாக, யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள சர்வதேச நீதிபதிகளை இலங்கைக்குக் கொண்டு வர அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருந்ததாக அதில் கூறப்பட்டது.

ஆனால், ஜனாதிபதி இதற்கு கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டிருந்தார். இவ்வாறான பாரிய சவால்களுக்கு அவர் முகம் கொடுத்தே இந்த நான்கு வருடங்களை கடந்து வந்துள்ளார்" என மகிந்த அமரவீர தெரிவித்தார். (இ-7)

---

## 400 மில்லியன் டொலர் நிதி வழங்கி

# இலங்கை ரூபாயின் பெறுமதியை ஸ்திரப்படுத்த இந்தியா உதவி

## பிரதமர் ரணில் அறிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் தொடர்ந்து வீழ்ச்சியடைந்துவரும் ரூபாயின் பெறுமதியை ஸ்திரப்படுத்த இந்தியா உதவி செய்ய வுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் நேற்று வியாழக்கிழமை கூடிய நாடாளுமன்ற அமர்வின் போதே அவர் இந்த விசேட அறிவிப்பை வெளியிட்டார்.

பெரும் பொருளாதார பின்னடைவை எதிர்நோக்கியுள்ள நாட்டை கட்டியெழுப்பும் வகையில் இந்திய மத்திய வங்கி 400 மில்லியன் டொலர் நிதியை வழங்கவுள்ளதாக ரணில் தெரிவித்தார்.

புதிய பிரதமர் நியமனத்தை தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட அரசியல் சதியால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை கடந்த ஒக்டோபர் மாதத்திற்கு முன்பிருந்த நிலையிலும் உன்னத இடத்துக்கு கொண்டு செல்லும் பொறுப்பு தங்களுடையது எனத் தெரிவித்த பிரதமர், ஆனால் அது அவ்வளவு இலகுவான விடயமல்ல என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, மக்களின் நலனை கருத்திற்கொண்ட வகையிலான வரவு-செலவு திட்டமொன்று நாடாளுமன்றில் முன்வைக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

# மேலும் ஐந்து வருடங்கள் பதவியில் இருக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை



(கொழும்பு)

மேலும் ஐந்து வருடங்கள் இலங்கையின் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவை பதவி வகிக்குமாறு, மல்வத்து விகாரையின் அநுநாயக்க தேரர் இம்புல்கும்புரே ஸ்ரீ சரணாங்கர விமலதம்மாஹிதான தேரர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாடளாவிய ரீதிலுள்ள 60 விகாரைகளுக்கு, வணக்கஸ்தல காணி உரித்தை வழங்கும் நிகழ்வு, ஜனாதி பதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்று இடம் பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதி தங்களின் பதவிக்காலத்தில் 4 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. மீதமிருப்பது ஒரு வருடமே.

எனினும் அந்த ஒரு வருடத்தின் பின்னரும் தாங்களே நாட்டை கட்டியெழுப்ப வேண்டும். இதற்காக தங்களுக்கு வல்லமை கிடைக்க வேண்டுமென பிரார்த்திப்பதாக தேரர் தெரிவித்தார். (இ-7)

---

# 11 தமிழர்கள் கடத்தல் 12 ஆவது சந்தேக நபரும் அடையாளம் காணப்பட்டார்

(கொழும்பு)

2008ஆம் ஆண்டு 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கின் 12ஆவது சந்தேகநபர் அணி வகுப்பில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பான வழக்கு கொழும்பு மேலதிக நீதவான் பிரியந்த லியனகே முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு அடையாள அணி வகுப்பும் நடத்தப்பட்டது. இதன்போது காணாமல் போன ஒருவரின் தாய் மற்றும் சகோதரியால் சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை, இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட கடற்படையை சேர்ந்த லெப்டினன் கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி உள்ளிட்ட 3 சந்தேகநபர்களும் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி சந்தேக நபரை மீண்டும் எதிர்வரும் 23 ஆம் திகதி அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதவான் பிரியந்த லியனகே உத்தரவிட்டுள்ளார். (இ-7)

# மன்செஸ்டர் சிட்டி கோல் மழை

'இங்கிலீஷ் புட்பால் லீக்' (இ.எப்.எல்.,) கிண்ண கால்பந்து அரையிறுதிக்கான முதல் 'லெக்' போட்டியில் கோல் மழை பொழிந்த மன் செஸ்டர் சிட்டி அணி 9-0 என, பர்டன் ஆல்பியன் அணியை வென்றது.



இங்கிலாந்தில், உள்ளூர் கால்பந்து கழக அணிக்ள் பங்கேற்கும் 'இங்கிலீஷ் புட்பால் லீக்' (இ.எப். எல்.,) கிண்ண தொடர் நடக்கிறது. மன்செஸ்டர் நகரில் நடந்த அரையிறுதிக்கான முதல் 'லெக்' போட்டியில் மான்செஸ்டர் சிட்டி, பர்டன் ஆல்பியன் அணிகள் மோதின.

இதில் கோல் மழை பொழிந்த மன்செஸ்டர் சிட்டி அணி 9-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

## போதை மாத்திரை...

அதில் ஒருவர் 5 மாத்திரையும் மற்ற மாணவன் 4 மாத்திரைகளையும் மூன்றாவது மாணவன் 3 மாத்திரைகளையும் உட்கொண்டுள்ளனர்.

பின்னர் வகுப்பறையினுள் மயங்கிய நிலையில் கிடந்துள்ளனர். குறித்த விடயத்தை அறிந்த பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியாகள் இணைந்து அவர்களை வெளியே அழைத்து சென்று விசாரணை செய்துள்ளனர். அப்போது அவர்கள் தாறுமாறாக தம்மை அறியாமல் பேசத் தொடங்கியுள்ளனர். நிலைமையை அறிந்த அதிபர் குறித்த மாணவர்களை தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார்.

பின்னர் வைத்தியசாலையில் இருந்து சுகாதார வைத்திய அதிகாரிக்கு குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டு, சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட குழுவினர் வைத்தியசாலைக்கு சென்று மாணவர்களிடம் இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

குறித்த மாத்திரைகள் அவர்களது சுற்றயல்களில் உள்ள மருந்தகங்களில் சாதாரணமாகக் கிடைப்பதாகவும், தற்போது பயன்படுத்திய மாத்திரை தனது சகோதரனிடம் இருந்து பெற்றுக் கொண்டதாகவும் ஒரு மாணவர் விசாரணையில் தெரிவித்திருந்தார்.

அவர்கள் எந்த மருந்தகங்களில் குறித்த மாத்திரைகளை கொள்வனவு செய்பவர்கள் என்ற தகவலை பெற்றுக்கொண்டு மாவட்டபுரத்துக்கு அண்மையில் உள்ள குறித்த இரு மருந்தகங்களுக்கு சுகாதார வைத்திய அதிகாரி குழுவினர் சென்று பரிசோதனை மேற்கொண்டதுடன் அங்கிருந்த மாத்திரைகளையும் கைப்பற்றியுள்ளனர். அத்துடன் குறித்த மருந்தகங்களுக்கு எதிராக வழக்கு பதிவுசெய்யப்படவுள்ளதாகவும் தெரிவித்துச் சென்றுள்ளனர். குறித்த விடயம் நேற்று அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. (ம-9)

# மரண அறிவித்தல்

## இராமலிங்கம் சச்சிதானந்தம்

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - நீர்ப்பாசனத் திணைக்களம் வவுனிக்குளம், வவுனியா)



மண்ணில் 04.03.1955 | விண்ணில் 09.01.2019

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கிருலப்பனை, ஒட்டங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சச்சிதானந்தம் அவர்கள் 09.01.2019 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சம்பந்தர் இராமலிங்கம் - திரவியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கலைச்செல்வியின் அன்புக் கணவரும் நெடுந்தீவைச் சேர்ந்த காலஞ்சென்ற நடராஜா மற்றும் மகேஸ்வரி (UK) தம்பதிகளின் அருமை மருமகனும் அன்புருவனின் (உயர்தர மாணவன் - கொழும்பு இந்துக் கல்லூரி) பாசமிகு தந்தையாரும் செல்வமலர், செல்வராஜா (அவுஸ்திரேலியா), சந்தானமலர், இராமநாதன் (கனடா), ஞானசம்பந்தர் (அவுஸ்திரேலியா), யோகமலர் (சுவிட்சர்லாந்து), யோகலிங்கம் (ஜேர்மனி), காந்தமலர் (அவுஸ்திரேலியா), புஷ்பமலர் (பிரான்ஸ்), காலஞ்சென்ற அன்பழகன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற தெய்வேந்திரம் மற்றும் குலநாயகியம்மா (அவுஸ்திரேலியா), கோபாலசிங்கம், காஞ்சனா (கனடா), மதியரசி (அவுஸ்திரேலியா), திருமுருகானந்தன் (சுவிட்சர்லாந்து), கேசினி (ஜேர்மனி), குகன் (அவுஸ்திரேலியா), உதயச்செல்வன் (பிரான்ஸ்), சுசீந்திரன் (ஜேர்மனி), சுசீஸ்வரன் (நோர்வே), சோதீஸ்வரன் (UK), கலையரசி (UK) இராஜசுசீந்திரன் (கனடா), சுசியானந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (11.01.2019) வெள்ளிக்கிழமை நல்லூர் சட்டநாதர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 2 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

78, சட்டநாதர் வீதி, நல்லூர்.
0212221626, 0778448589, 0779184638

தகவல்:- தெ.பகீரதன்
(C.S.K மருந்துக்கடை கல்வியங்காடு)



# 1ம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி மகேஸ்வரி சர்வேஸ்வரசெவ்வேள்

(ஆசிரியை - மானிப்பாய் மகளிர் கல்லூரி,
சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்,
சுதுமலை வடக்கு தமிழ் வித்தியாலயம்,
முன்னாள் ஆசிரியை - மயிலணி மகா வித்தியாலயம், சுன்னாகம்)

தோற்றம்:- 1958.08.02 | மறைவு:- 2017.12.22

திதி: மார்கழி மாத பூர்வபக்ஷ பஞ்சமி
(11.01.2019 வெள்ளி)

ஓராண்டென்ன ஓராயிரம்
ஆண்டுகள் சென்றாலும்
மறவாது உன் நினைவு.
உன்னை எண்ணி ஏங்கி
உன் வருகைக்காக காத்திருக்கின்றோம்

அன்னாரது இல்லத்தில் இன்று (11.01.2019) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெறும் அன்னாரது முதலாம் ஆண்டு திவச நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புள்ளங்களை தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(5109)

இங்ஙனம்:- குடும்பத்தினர்
மாவடி வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

# 10 இலட்சம் ரூபா பெறுமதியான அல்ராசவுண்ட் ஸ்கானர் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் மகப்பேற்று, பெண் நோயியல் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ந.சரவணபவாவின் வேண்டுகோளுக்கு இணங்க அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த றொட்டேறியன் ஹரன் ராமச்சந்திரனின் ஏற்பாட்டில் றொட்டேறியன் சூ ஓ நீலின் நிதி உதவியுடன் றொட்டறி அவுஸ்திரேலியா உலக சமூக அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் ரூபா 10 இலட்சம் பெறுமதியான மொபைல் அல்ராசவுண்ட் ஸ்கானிங் கருவி தீவுப் பகுதியில் கர்ப்பிணிகளுக்கான நடமாடும் சேவைகளை மேற்கொள்வதற்காக நல்லூர் றோட்டறிக் கழகத்தினால் கடந்த 08 ஆம் திகதி தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகர் வைத்திய கலாநிதி யோ.திவாகரிடம் கையளிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் நல்லூர் றோட்டறி கழகத்தின் தலைவர் றொட்டேறியன் றோய் சத்தியசுதாகர், முன்னாள் ஆளுநர் றொட்டேறியன் ஆ.சம்பத்குமார் (திருவண்ணாமலை), முன்னாள் ஆளுநர் றொட்டேறியன் புஸ்பலிங்கம் பேர்த், முன்னாள் தலைவர் றொட்டேறியன் தனசேகர் (சென்னை), முன்னாள் தலைவர் றொட்டேறியன் ரவிராமன் (சென்னை), முன்னாள் தலைவர் றொட்டேறியன் சுகந்தன் (நல்லூர்), நல்லூர் றோட்டறி கழகத்தின் தெரிவுத் தலைவர் றொட்டேறியன் மருத்துவர் எம்..பிரதீபன் மற்றும் வைத்தியசாலை பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-7)

## சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட

# 170 உள்ளூர் மீனவர்களுக்கு எதிராக 68 வழக்குகள் பதிவு

## 9 இலட்சத்து 91 ஆயிரம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த 2018 ஆம் ஆண்டு சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட 170 உள்ளூர் மீனவர்களுக்கு எதிராக 68 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு நீதிமன்றங்களால் 9 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் உள்ளூர் மீனவர்களின் சட்டவிரோத செயற்பாடுகள் குறித்து கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கையின் போது சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்ட மீனவர்களுக்கு எதிராக அந்தந்தப் பகுதி நீதிமன்றங்களில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அந்த வகையில் டைனமெட் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட 2 மீனவருக்கு எதிராக இரு வழக்கு பதிவு செய்யப்பட்டு அபராதமாக 30 அயிரம் ரூபாவும், தங்கூசி வலையை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட 14 மீனவர்களுக்கு எதிராக 16 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அபராதமாக ஒரு இலட்சத்து 14 ஆயிரம் ரூபாவும், அனுமதி இன்றி கடலட்டை வைத்திருந்த 93 மீனவர்களுக்கு எதிராக 33 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அபராதமாக 6 இலட்சம் ரூபாயும், அனுமதி இன்றி கடலாமையை வைத்திருந்த 7 மீனவர்களுக்கு எதிராக 4 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு அபராதமாக 50 ஆயிரம் ரூபாவும், அனுமதி இன்றி மீன்களை வைத்திருந்த 54 மீனவர்களுக்கு எதிராக 13 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு ஒரு இலட்சத்து 97 ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் 170 மீனவர்களுக்கு எதிராக 68 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு 9 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் நீதிமன்றங்களால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# 'அனைத்து விவசாயிகளுக்கும் இலவச உரம்'



அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக உரத்தை பெற்றுக் கொடுக்கும் திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவித்த விவசாயத்துறை அமைச்சர் பீ. ஹரிசன் நாட்டிலுள்ள சகல விவசாயிகளையும் உற்பத்தியில் ஈடுபடுத்துவதே தனது எதிர்பார்ப்பெனவும் தெரிவித்தார்.லக்கல புதிய பசுமை நகரில் அமைக்கப்பட்ட விவசாய சேவைகள் மத்திய நிலையத்தை மக்கள்வசம் ஒப்படைக்கும் நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் நான்காவது வருட பதவி பூர்த்திக்கு இணைந்ததாக இந்த லக்கல விவசாய மத்திய நிலையம் திறக்கப்பட்டது. அங்கு உரையாற்றிய அமைச்சர், விவசாயிகளுக்கு இலவசமாக உரத்தை வழங்குமாறு நான் பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளேன். அதன் மூலம் அவர்களுக்கு வருமானம் அதிகரிக்கும். அத்துடன் விவசாயம் செய்வதற்கான ஆர்வமும் அதிகரிக்கும்.மாத்தளை, குருநாகல், புத்தளம் ஆகிய இடங்களில் சிறப்பாக பெரியவெங்காயம் பயிரிடப்படுகிறது. ஆனால் அறுவடை செய்யும் போது வெளிநாட்டிலிருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்கின்றார்கள். அதனால் விவசாயிகள் பாதிப்படைகின்றார்கள்.நாட்டின் தேசிய உற்பத்திக்கு பெரும் பங்களிப்பை விவசாயிகள் வழங்குகின்றார்கள். நெல் சந்தைப்படுத்தும் சபை மூலம் சரியான திட்டமொன்றை தயாரிக்கவுள்ளேன் என்றார். இந்த போகத்தில் 38 ரூபாவுக்கு நாட்டரிசி நெல்லையும் 41 ரூபாவுக்கு சம்பா நெல்லையும் விலைக்கு வாங்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

## நிறுத்திய நிதியைப் பெற

# நிதியமைச்சர் மங்கள அமெரிக்காவுக்கு விஜயம்

நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர இன்று வெள்ளிக்கிழமை அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக தவணை அடிப்படையில் கடனைக் கொடுக்க தீர்மானித்த நிலையில் குறித்த கடன் வழங்குவதை திடீரென சர்வதேச நாணய நிதியம் நிறுத்தி விட்டதால் இது தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வதற்காக நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

நிதி அமைச்சரின் செயலாளர் ஆர்.எம்.எச். சமரதுங்க மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி ஆகியோர் நிதியமைச்சருடன் அமெரிக்கா செல்லவுள்ளனர். இதன் போது சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் ஆகியோருடன் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது.கடந்த காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள் காரணமாக அமெரிக்கா கடன் வழங்கும் காலத்தை தவணை அடிப்படையில் வழங்குவதாக கூறிய நிலையில் தற்போது அதை நிறுத்தியுள்ளது.

இந்நிலையில் இலங்கை மத்திய வங்கிக்கு, இந்திய மத்திய வங்கி 400 மில்லியன் அமெரிக்கா டொலரை கடனாக வழங்க இணங்கியுள்ளது. இலங்கையில் வெளிநாட்டின் இருப்புக்களை அதிகரிக்க இலங்கை மத்திய வங்கி, இந்திய மத்திய வங்கியிடம் கோரிக்கை விடுத்துள்ள நிலையில் குறித்த தொகையை இந்திய மத்திய வங்கி வழங்க தீர்மானித்துள்ளது. இது தவிர இன்னும் அமெரிக்க டொலர் பில்லியன் தொகையை பெற்றுக் கொள்ள இந்திய மத்திய வங்கியோடு இரு வழி பரிமாற்றம் மூலம் கையொப்பம் ஒன்றை மேற்கொள்ள எதிர்பார்த்திருப்பதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பிதழ்

கடந்த 13.12.2018 வியாழக்கிழமை சிவபதமெய்திய எமது அன்புத் தந்தையார்

**அமரர் சிவலை சின்னத்தம்பி (மணியம்)**



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 12.01.2019 சனிக்கிழமை காலை 5 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக தயவுடன் ஏற்றுக் கொள்ளவும்.**

கேணியடி, கரணவாய் மேற்கு, கரவெட்டி.

இங்ஙனம்: குடும்பத்தினர்.
077 495 9033, 077 391 4803


# இராசி பலன்

**மீனம்**



வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**மேடம்**



எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் அதிகரிக்கும்.

**இடபம்**



தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள்.

**மிதுனம்**



தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும்.

**கும்பம்**



வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**இராசி பலன்**

கிரகநிலை

செவ் (மேல் இடது) · சந் (இடது) · ராகு (வலது) · கேது (இடது) · சூரி.புத சனி (கீழ் இடது) · குரு.சுக் (கீழ்)

சந்திராஷ்டமம்: பூரம்

**11.01.2019**

மார்கழி 27, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
பஞ்சமி பிற்பகல் 5.31 மணிக்கு
பூரட்டாதி பின்னிரவு 6.24 மணிவரை
சுபநேரம் 6.33-8.03 மணிவரை
இராகுகாலம் 11.03-12.33 மணிவரை
கெர்ப்போட்ட முடிவு

வளவன்

**கடகம்**



மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்**



காணாமல் போன பொருளொன்று மீண்டும் கைக்கு கிடைக்கலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**சிம்மம்**



புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், கனவு பலிதமுண்டு.

**தனுசு**



உடன் பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**விருச்சிகம்**



வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**துலாம்**



எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி**



எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரலாம், தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் இணக்கத்துடன் நடந்து கொள்வர், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

# ஐயாயிரம் ரூபா போலி நாணயத் தாள்களை மாற்ற முற்பட்ட இரு இளைஞர்கள் கைது!

## 20 தாள்கள் பறிமுதல்; புலனாய்வுப் பிரிவு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

ஐயாயிரம் ரூபா போலி நாணயத்தாள்களை கைமாற்ற முற்பட்ட இரு இளைஞர்கள் யாழ்ப்பாண பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று அதிகாலை கைதடி சந்திக்கு அருகில் வைத்து கைது செய்யப் பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத் தைச் சேர்ந்த 23 மற்றும் 26 வயதுடைய இரு இளை ஞர்கள் 5000 ரூபா போலி நாணயத்தாள்கள் 20ஐ யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு கைமாற்று வதற்கு நேற்று அதிகாலை கைதடிக்கு வந்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர் பாக யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வுத்துறை உத்தி யோகத்தர் ரெஜிகேசனுக்கு கிடைத்த இரகசிய தகவ லின் படி புலனாய்வுத்துறை உத்தியோகத்தர்கள் சம்பவ இடத்துக்கு சென்றுள்ளனர். அப்போது போலி நாண யத்தாள்களை மாற்ற முற் பட்ட போது குறித்த இரு வரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இரு இளைஞர்களும் சாவகச் சேரி பொலிஸாரிடம் ஒப்ப டைக்கப்பட்டுள்ளனர். சாவ கச்சேரி பொலிஸார் இரு இளைஞர்களிடமும் விசா ரணை முன்னெடுத்து வரு வதுடன் சாவகச்சேரி நீதி மன் றில் அவர்களை ஆஜர்படுத் துவதற்கான நடவடிக்கைக ளையும் முன்னெடுத்து வரு கின்றனர். (இ-9-30-89-101)

# விசேட நிதியொதுக்கீட்டில் நவாலியில் வீதி புனரமைப்பு





(யாழ்ப்பாணம்)

புளொட் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பின ருமான த.சித்தார்த்தனின் 2018ஆம் ஆண்டிற்கான விசேட நிதி ஒதுக்கீட்டில் நவாலி வடக்கு ஜே/134 கிராம உத்தியோகத்தர் பகுதியிலுள்ள குடத்தனை வீதி புனரமைப்புப் பணி களை கடந்த ஆறாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பார் வையிட்டார்.

இதன்போது 2019ஆம் ஆண்டுக்கான பசுமைப் புரட்சி திட்டத்தின்கீழ் இரு வருடங்களில் பயன்தரக் கூடிய 100 மாங்கன்றுகள் முதல் கட்டமாக நவாலி மருதடி விநாயகர் சனசமூக நிலைய முன்றலில் வைத்து மக்களுக்கு வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் நாடாளு மன்ற உறுப்பினர் த.சித் தார்த்தன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பி னர் பா. கஜ தீபன், வலி. தென்மேற்கு பிரதேசசபைத் தவிசாளர் அ.ஜெபநேசன் மற்றும் நாடாளுமன்ற உறு ப்பினரின் இணைப்பாளர் யுகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-7)

யாழ்.செய்திகள்

# ரூ.ஒருகோடியே 25 இலட்சம் செலவில் மக்கள் நலத்திட்டங்கள் நிறைவேற்றம்

## வேலணை தவிசாளர் தகவல்



(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் மக்கள் நலத் திட்டங்கள் நிறை வேற்றப்பட்டுள்ளதாகத் தவி சாளர் ந.கருணாகரகுரு மூர்த்தி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த வருடம் மத்திய அர சாங்கத்தால் ஒதுக்கப்பட்ட 35 இலட்சம் ரூபா செல வில் புதிதாக அமைக்கப் பட்ட பொதுச் சந்தையில் மரக்கறி வியாபாரம், மீன் வியாபாரம், இறைச்சி வியா பாரம் என்பன மேற்கொள் ளக் கூடிய வசதிகள் ஏற்ப டுத்தப்பட்டுள்ளதாகத் தெரி வித்தார்.

அத்தோடு அமைச்சர் றிசாத் பதியுதீனால் ஒதுக் கப்பட்ட 90 இலட்சம் ரூபா வில் 80 இலட்சம் ரூபா செல வில் ஒரு கிலோமீற்றர் மலை யின் ஐயனார் வீதி புனரமைக் கப்பட்டதோடு 10 இலட்சம் ரூபா செலவில் கடல் தடுப் பணை ஒன்றும் நிர்மாணிக் கப்பட்டதாகவும் இவை அனைத் தும் இம்மாத இறுதியில் மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்படவுள்ளதாக வும் அவர் மேலும் தெரிவித் தார். (இ-10)



மக்கள் விடுதலை முன்னணியும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கமும் இணைந்து யாழ்.சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு நேற்று கற்றல் உபகரணங்கள் வழங்கியபோது...

## நீர் வியாபார விவகாரம்

# சபையின் சட்டத்தை மீறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## காரை.தவிசாளர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் விற்பனை செய்யப்படும் நீருக்கான நிர்ணய விலை யாக லீற்றர் ஒன்றுக்கு அறு பது சதமாக வரையறை செய்யப்பட்டுள்ளதாகவும் இதனை நீர்வியாபாரத்தில் ஈடுபடும் ஒரு தனியார் நிறு வனம் மட்டும் ஏற்க மறுத்த தாகத் தவிசாளர் வி.கேதீஸ் வரதாஸ் தெரிவித்தார்.

வலி.தென்மேற்குப் பிர தேச சபை காரைநகர்ப் பிரதேச சபைக்கு வழங் கிவந்த நீரின் அளவை 45 ஆயிரம் லீற்றராக மட்டுப் படுத்தியதை அடுத்து நீர் வியாபாரம் அதிகரித்த மையை மையமாக வைத் துப் பிரதேச சபைக்கும் பொது மக்களுக்குமிடையே சிலர் முரண்பாடுகளைத் தோற்றுவித்ததாகவும் தவி சாளர் தெரிவித்தார்.

தமது பிரதேச மக்களுக் குத் தேவையான நீரினை 6 வட்டாரங்களுக்கும் காரை நகர் அபிவிருத்திச்சபை 2 வட்டாரங்களுக்கும் பிர தேசசபை 2 வட்டாரத்துக் கும் எவரஸ்ற் நிறுவனம் 2 வட்டாரத்துக்குமாக நீரை பகிர்ந்தளித்த போது எவ ரஸ்ற் நிறுவனம் மட்டும் தமது தீர்மானத்துக்கு உடன் படவில்லையெனத் தெரி வித்தார்.

பிரதேச மக்களின் நலனுக் காகவே நீரின் விலையை மட்டுப்படுத்தியதாகவும் சபையின் தீர்மானத்தை மீறி நீர் வியாபாரத்தில் ஈடு படுவர்கள் மீது சட்ட நட வடிக்கை மேற்கொள்ளப்ப டும் எனவும் தவிசாளர் தெரிவித்தார். (இ-10)

## க.பொ.த உ/த பரீட்சை பெறுபேறு

**யாழ்.அச்சுவேலி மத்திய கல்லூரி**

கணிதப்பிரிவு

சி.துசன்-ஏபிசி, க.நிரோசனா-ஏபிசி, சி.லதுசன்-2பிஎஸ், பொ.சனுஜன்-ஏ2எஸ், தி.கிருசாந்-பிசிஎஸ், சு.திவியா-2பிசி.

விஞ்ஞானப் பிரிவு

சி.சிவலோஜினி-ஏ2பி, இ.ஸ்ரீராம்-ஏபிசி, த. யதுசன்-3சி, க.நிலக்சனா-சி2எஸ், து.கௌதமி-2சிஎஸ், தி.பவித்திரா-சி2எஸ், தே.லக்சனா-3எஸ்

வர்த்தகப்பிரிவு

ஜெ.மதுராங்கன்-2ஏபி, ந.விதுசன்-3பி, ம.மதுசா-3சி, இ.பிரேமலதா-2சிஎஸ், இ.தேவிசூரியா-சி2எஸ்.

கலைப்பிரிவு

சி.கலிஸ்ரியா-2பிசி, ச.தனுபரன்-2பிஎஸ், க.கிரிதரன்-பிசிஎஸ், க.கோகுலன்-பி2எஸ், ப.டயானா-பிசிஎஸ், ச.கலிஸ்ராலினி-பி2சி, செ.வினோஜன்-3சி.



வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், கைதடி முதியோர் இல்லம் மற்றும் நவீல்ட் பாடசாலைக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டுள்ளார் கைதடி முதியோர் இல்லத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஆளுநர் அங்குள்ள முதியவர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டதுடன் உணவுப் பொதிகளையும் வழங்கினார். அதன் பின்னர் கைதடியில் அமைந்துள்ள விசேட தேவையுடையோருக்கான பாடசாலையான நவீல்ட் பாடசாலைக்கு விஜயம் செய்தார். அங்கு கல்வி பயிலும் 130 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களையும் வழங்கினார். (படங்கள்:- சோபிகா)



உலகத் தமிழாராச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின்45 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்றுக்காலை யாழில் அனுஷ்டிக்கப்பட்டது. படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக யாழ்.வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்பாக முற்றவெளி மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் இந் நிகழ்வு இடம்பெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், ஆதரவாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்:-கிஷோர், சோபிகா)

# வடக்கு - மேற்கு மாகாணங்களின் ஆளுநர்கள் சுழியோடி கரைசேர்ந்து,கரைசேர்க்க வேண்டும்

## அமைச்சர் மனோகணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

அசாத் சாலி, சுரேன் ராகவன் ஆகிய என் இரு நெருங்கிய நண்பர்கள், மேல்மாகாணத்துக்கும், வடமாகாணத்துக்கும் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அரசியல் சச்சரவுகளுக்கு அப்பால், இன்றைய நெருக்கடிகளுக்கு மத்தியில், தமிழ் பேசும் இவர்கள் இருவரும் சிறப்பாக சுழியோடி கரைசேர, மக்களையும் கரைசேர்க்க வாழ்த்துகின்றேன் என அமைச்சர்மனோகணேசன் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அமைச்சர் மனோ கணேசன் மேலும் தெரிவிக்கையில்,

அசாத் சாலியும், விக்கிரமபாகு கருணாரத்னவும், நானும் இந்நாட்டின் இருள் சூழ்ந்த நெருக்கடி வேளைகளில் கூட்டாக செயற்பட்டுள்ளோம். மிகவும் மோசமான அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்துள்ளோம்.

சமாதான சுதந்திரம் மீண்டும் நிலைநாட்டப்பட்டபின் இன்று எங்கள் பாதைகள் வெவ்வேறு திசைகளில் பயணித்தாலும், மீண்டும் ஒரு வேளை இந்நாட்டில் இருள் சூளுமானால் நாமே களத்தில் நிற்போம்.

இன்றைய புதிய பயணத்தில் ஆளுநர் அசாத் சாலி தமது பதவி அதிகாரத்தை பயன்படுத்தி, மேல்மாகாணத்து கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்ட தமிழ் பேசும் மாணவரது கல்வி தேவைகளை மேம்படுத்த வேண்டும்.

அதற்கு என் அமைச்சின் பக்கபலத்துடன், எங்கள் கட்சியின் மக்கள் பிரதிநிதிகள் முழுமையாக துணை நிற்பார்கள் என அவருக்கு நான் தெரிவித்துள்ளேன்.

அதேபோல்நண்பர்சுரேன் ராகவன் நானறிந்த ஒரு ஆழ்ந்த சிந்தனையாளர். தமிழ், சிங்கள, ஆங்கில புலமையாளர். முன்னிலை விவகாரங்கள் தொடர்பில் கார்த்திரமான நிலைப்பாடுகளை கொண்டுள்ளவர்.

கொள்கை நிலைப்பாடுகளுக்கும், நடைமுறைக்கும் இடையில் அவர் போராட வேண்டிவரும் சொல்லொணா போர் துன்பங்களை அனுபவித்த வடக்கு தமிழ் மக்கள் தொடர்பில், அவருக்கு எனது அமைச்சின் தேசிய ஒருமைப்பாடு, சமூக மேம்பாடு விவகார அங்கங்கள் கைகொடுக்க தயாராக உள்ளதை அவருக்கு நான் அறிவித்துள்ளேன்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல்வாதிகளுக்கு அரசியலை விட்டு விட்டு, அவர் வடக்கில் சமூக, பொருளாதார மேம்பாட்டை முன்னெடுப்பார் என நம்புகிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# வீதியைப் புனரமைக்க மக்கள் கோரிக்கை



(வரணி)

சாவகச்சேரி பிரதேச சபையின் பராமரிப்பின் கீழ் உள்ள இடைக்குறிச்சி-மாசேரி எல்லை வீதியாகவும் கொடிகாமம்-பருத்தித்துறை வீதியுடன் இணைகின்ற வாழைத் தோட்டம் வீதியானது 50 வருடங்களுக்கு மேலாக எந்த வித புனரமைப்பும் இன்றி குண்டும் குழியுமாகக் காணப்படுவதுடன் கற்கள் சிதைவடைந்து மணல் வீதியாக மாறியுள்ளது.

இந்த வீதி சுமார் 4 கிலோ மீற்றர் நீளம் கொண்டதாகும். யுத்த சூழ்நிலையின் போது இவ்வீதி பற்றைகள் மூடி போக்குவரத்திற்கு ஏற்ற வீதியாக இருக்கவில்லை.

அதுமட்டுமன்றி இராணுவ முகாம்கள் அமைந்திருந்தமையால் இந்த வீதியை மக்கள் பயன்படுத்த அஞ்சி னர். மாற்று பாதைகளின் ஊடாகவே தமது தேவைகளை நிறைவேற்றினார். இரா ணுவத்தினர் இப்பகுதியை விட்டு வெளியேறிய பின்பு தான் மக்கள் இந்த வீதியை போக்குவரத்திற்கு பயன்படுத்தினர்.

மேலும்பற்றைகள் மூடியிருந்தமையால் வாகனங்கள் பயணிக்க முடியாத நிலை காணப்பட்டது. சைக்கிள், மோட்டார் சைக்கிள் போன்றவற்றையே பயணிக்க கூடியதாக இருந்தது.

அதுமட்டுமன்றி வழிப்பறிகளும், திருடர் தொல்லைகளும் அதிகரித்துக் காணப்பட்டன. இந்த நிலைமை தொடர்பாக இப்பகுதி மக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு சென்றமையைத் தொடர்ந்து பிரதேச செயலகத்தின் மூலம் இவ் வீதியை மூடி இருமருங்கிலும் காணப்பட்ட பற்றைகள் ஜே.சி.பி இயந்திரத்தின் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

தற்போதுபாடசாலைமாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், வியாபாரிகள், வாகனச் சாரதிகள், பொதுமக்கள் எனப் பலரும் இவ்வீதியை அதிகம் பயன்படுத்தி வருகின்றனர்.

வீதி புனரமைப்பு செய்யப்படாமையால் அவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இவ் வீதியைப் புனரமைக்குமாறு அரசியல்வாதிகள் மற்றும் உயர் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்தும் எந்தவிதமான நடவடிக்கையும்மேற்கொள்ளப்படவில்லை என மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

எனவே அதிகளவானோர் பயன்படுத்தும் இவ் வீதியை விரைவாக புனரமைப்பதற்கு அரசாங்க அதிபர் நடவடிக்கையெடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-103)

# விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பு- அவிசாவளை வீதியின் மாவத்தகம பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாரவூர்தியொன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியமையாலேயே இந்த விபத்து நேற்றிரவு சம்பவித்துள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த கொஸ்கம மற்றும் வெலிகந்த பகுதிகளைச் சேர்ந்த 19, 20 வயதுடையவர்களே உயிரிழந்தவர்கள் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா:15 1/4<br>உயரம்: 5’4”<br>தகைமை/தொழில்:Elec.EngElectrician, அரசதொழில்<br>எதிர்பார்ப்பு:உத்தியோகம் விரும்பதக்கது<br>தொ.இ: B/9081 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா: 52<br>உயரம்:5’2”<br>தகைமை/தொழில்:பட்டதாரி, அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,அரசதொழில்<br>தொ.இ: G/1896 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>கி.பா:14 3/4<br>உயரம்: 5’8”<br>தகைமை/தொழில்:MSC ,BSCStaticion (Australia)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,Engineer,Dentist,IT<br>தொ.இ: B/9082 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 38 1/4<br>உயரம்: 5’3”<br>தகைமை/தொழில்:பட்டதாரிஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரசஉத்தியோகம்<br>தொ.இ: G/1903 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:<br>கி.பா: 54<br>உயரம்:174cm<br>தகைமை/தொழில்:B.Sc, MLT (தனியார்)<br>எதிர்பார்ப்பு: உள்நாடுமற்றும் வெளிநாடு<br>தொ.இ: B/9085 | பிறப்பு: 1982 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5’5”<br>தகைமை/தொழில்:HNDA ,B.Com, M.Com Assistant Accountant<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி,உத்தியோகம்<br>தொ.இ: G/1914 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்:அனுசம்<br>கி.பா: 34<br>உயரம்:5’4”<br>தகைமை/தொழில்:BBM,அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: B/9086 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா: 15<br>உயரம்: 5’<br>தகைமை/தொழில்:A/Lவாடிக்கையாளர் சேவைஉத்தியோகத்தர் (அரசதொழில்)<br>எதிர்பார்ப்பு:A/Lஅரச,தனியார்உத்தியோகம்<br>தொ.இ: G/1918 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# பாம்புகளை அடையாளம் காண்போம்

## வடமாகாணத்தில் காணப்படும் சில பாம்பினங்கள்

வடமாகாணத்தைப் பொறுத்த மட்டில் நான்கு பாம்பினங்கள் தான் மனிதர்களிற்கு அதிகளவு பாதிப்பை அல்லது மனித இறப்பை ஏற்படுத்தக்கூடியவையாக உள்ளன. அவையாவன கண்டங் கருவளை, நாகபாம்பு/ நல்ல பாம்பு, முத்திரைப்புடையன் மற்றும் சுருட்டை என்பனவாகும். ஆனால் இவை போன்று தோற்றமளிக்கின்ற பல நஞ்சற்ற பாம்புகள் காணப்படுகின்றன. நாம் ஒவ்வொன்றாகப் பார்க்க லாம்.

1. கண்டங் கருவளை - உரு 8: (**Common Indian Krait** - ***Bungaus caeruleus***)

இதனை கண்டங் கரு வளை, கருவளையம், கரு வளையன், கருவேலப்பாம்பு, கருவேரப்பாம்பு என பல பெயர்கள் கொண்டு அழைக் கிறார்கள். இது ஒரு நச்சுப்பாம் பாகும். பிரதானமாக நரம்புத் தொகுதியைத் தாக்குகின்ற நச்சுப்பொருட்களைக் கொண்டது. முதுகுப்புறம் கருமையானது. கருநிறவுடலில் சோடியான மெல்லிய வெண்ணிறக் கோடுகள் காணப்படும். வயிற்றுப்புறம் வெண்மையானது. இது கிட்டத்தட்ட 4 - 5அடிவரை வளரக் கூடிய பாம்பாகும். இளம் நிலைகளில் வெண்ணிறக் கோடுகள் மிகத் தெளிவாகத் தெரியும். வயது செல்லச்செல்ல வெண்ணிறக் கோடுகள் குறுகி முற்பாதியுடலில் வெள்ளைப் புள்ளிகளாகவே எஞ்சியிருக்கும். ஆனால் பிற் பாதியுடலில் தொடர்ந்தும் இக்கோடுகளைக் காணக்கூடியதாகவிருக்கும்.

இதனைத் துல்லியமாக அடையாளம் காண்பதற்கு பக்கச் செதில்களை விட அகன்ற நடு முள்ளந்தண்டுச் செதில்களும் அழுத்தமான செதில்களைக் கொண்ட கருநிறவுடலிலுள்ள சோடியான மெல்லிய வெண்ணிறக் கோடுகளும் போதுமானதாகவிருக்கும். (உரு: 8)

நடத்தை: இவை இராக்கால வழக்கமுடையவை. இரவு நன்றாகக் கடந்த பின்னரே கிட்டத்தட்ட 9 அல்லது 10 மணியிலிருந்து அதிகாலைவரை நடமாடுகின்றன. பகல்வேளைகளில் மரக்குற்றிகள், எலிவளைகள் , கறையான் புற்றுகள் மற்றும் குப்பைகள் போன்றவற்றிற்குக் கீழாக மறைந்து கொள்கின்றன. சொல்லப்போனால் மனிதர்கள் நித்திரைக்குச் சென்றபின்னர் இவை வெளியில் வருகின்றன. மீண்டும் துயிலெழும்பும் நேரத்தில் இப்பாம்புகள் தமது இருப்பிடங்களிற்குத் திரும்பி விடுகின்றன. மரங்களில் ஏறுவது மிகவும் அரிது.





உரு 11: கட்டுவிரியன் / புல்வரியன் ஒன்றின் முதுகுப்புறத் தோற்றம்

இனி கண்டங் கருவளையென மாறியெண்ணப்பட்டு அடிவாங்கி இறந்து போகும் சில நஞ்சற்ற இராக்கால வழக்கமுடைய பாம்பினங்களைப் பார்ப்போம்.

வீட்டுப்பாம்பு / அல்லப்பூ நாகம் - உரு 9: (**Flowery wolf snake** - ***Lycodon osmanhilli***)

இது வடமாகாணத்தில் பொதுவாக காணப்படக்கூடிய நஞ்சற்ற ஒரு பாம்பாகும். இதன் முதுகுப்புறம் மண்ணிறத்திலிருந்து ஆழ்ந்த கபிலநிறம் வரை வேறு பாட்டைக் காட்டும். முதுகில் இடையிடையே ஒரு வரிசையிலுள்ள ஒடுக்கமான மஞ்சள் கோடும் அதன் இரு எல்லைகளிலும கறுப்புப் புள்ளிகளும் சேர்ந்த திட்டுக்கள் காணப்படும். இது ஒரு சிறிய மலர்போன்றிருப்பதால் அல்லப்பூ நாகம் என்ற பெயர் பொருத்தமாகவேயுள்ளது. நாகம் என்பது ஓர் பாம்பைக்குறிக்கின்ற சொல்லே தவிர வேறொன்று மில்லை. முதுகுப்புறச் செதில்கள் யாவும் ஒரே அளவுடையவை. வயிற்றுப் புறம் வெண்மையானது.

நடத்தை: இவை இராக்கால வழக்கமுடையவை. மிக நன்றாக மரத்தில் ஏறக்கூடியவை. பொதுவாக வீடுகள், அலுவலகக் கட்டடங்கள் என்பனவற்றின் கூரைகள், ஓடுகள், கட்டடங்களிலுள்ள வெடிப்புகள் போன்றவற்றில் காணப்பட்டு அங்குள்ள கறையான்கள், சிறிய பூச்சிகள், பல்லிகள் போன்றவைகளை உட்கொள்கின்றன. இப்பாம்புகள் மனிதர்கள் இருக்கும் இடங்களை நாடி வருவதால் இதனை வீட்டுப்பாம்பு என அழைப்பார்கள். ஆனால் ஏன் வீட்டை நாடி வருகின்றன என்பதற்குரிய காரணம் தெரியவில்லை. இரவானதும் மேற்கூரையிலிருந்து வீட்டிற்கு வெளியிலுள்ள தண்ணீர்குழாய் வழியாக கீழிறங்குகின்றன. தற்செயலாக இவை வீட்டினுள் நுழைந்து விடுவதுமுண்டு. இதன்போதே வீட்டிலுள்ளவர்கள் இதனை அடித்து விடுகின்றனர். உண்மையில் இவை மனிதர்களிற்கு நன்மையே செய்கின்றன. கறையான்கள் இவைகளிற்கு மிகவும் பிடித்தமான உணவாகும். வீடுகள் மற்றும் அலுவலகங்களிலுள்ள தொந்தரவு தரும் பூச்சிகள் ,சிலந்திகள் போன்றவற்றினளவைக் குறைப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன. அதேசமயம் தரையிலும் மறைவிடங்கள், உக்கிய சருகுகள் என்பனவற்றின் கீழும் இவை காணப்படலாம். வீட்டினுள் பூச்சிகளைத் தேடியே வருகின்றன. அவை நுழைந்தால் அடிப்பதற்குப் பதிலாக இவற்றினருகில் ஓர் தடியைக் கொண்டுசென்றால் போதுமானது. அத்தடியினைச் சுற்றிக்கொள்ளும். பின்னர் வெளியில் விட்டுவிடலாம். அமைதியாக அவை சென்றுவிடும்.




உரு 8: இருவேறுவயதிலுள்ள கண்டங் கருவளைப்பாம்புகளும், முதுகுப்புறத்திலுள்ள செதில்களும்

வட்டுச்சுத்தி / சங்கிலிப் புடையன் - உரு 10: (**Wolf snake** - ***Lycodon aulicus***)




உரு 9: வீட்டுப்பாம்பு / அல்லப்பூநாகம் ஒன்றின் தலை மற்றும் முதுகுப்புறத் தோற்றம்

இதுவும் வடமாகாணத்தில் பொதுவாக காணப்பட்ட ஓர் நஞ்சற்ற ஒரு பாம்புதான். ஆனால் இப்போது அரிதாகவே இதனைக் காணமுடியும். இதன் தலைப் பகுதியிலிருந்து முற்பாதியுடல் வரை ஆழ்ந்த கருமை கலந்த கபிலநிறமாகக் காணப்பட்டு பின்னர் நிறம் மங்கிச் செல்லும். முதுகுப்புறத்தின் இருமருங்கையும் தொடுகின்ற சங்கிலி போன்ற தடித்த வெண்ணிறப்பட்டைகள் கழுத்துப் பகுதியிலிருந்து ஆரம்பித்து வால்வரை செல்லும். வயிற்றுப்புறம் வெண்மையானது. கண்டங் கருவளையென மாறியெண்ணப்பட்டு அதிகமாகக் கொல்லப்பட்ட பாம்புகளில் இதுவும் ஒன்றாகும். ஒரே அளவுடைய முதுகுப் புறச்செதில்களைக் கொண்டும் ( பார்க்க உரு 8: கண்டங் கருவளையில் நடு முதுகுப் புறச்செதில் அகன்றது ), தனியான வெண்ணிறப்பட்டைகளைக் கொண்டும் இவற்றைக் கண்டங் கருவளையிலிருந்து வேறுபிரித்து அறியலாம்.




உரு 10: வட்டுச்சுத்தி / சங்கிலிப்புடையன் ஒன்றின் முதுகுப்புறத் தோற்றம்

நடத்தை: இவை இராக்கால வழக்கமுடையவை. இவை மிக நன்றாக மரத்தில் ஏறக்கூடியவை. உயர்ந்து வளர்ந்த தென்னை மரங்களின் வட்டுக்கள் மற்றும் பொந்துகளிடையே காணப்படலாம். வீடுகளின் கூரைகளிலும் இவை தங்கலாம். எனினும் பெரும்பாலும் மனித நடமாட்டமுடைய வீடுகளைத் தவிர்த்து வெளியில் இருப்பதையே விரும்புகின்றன. அதேபோல தரையிலும் மறைவிடங்கள், உக்கிய சருகுகள் என்பனவற்றின் கீழ் இவை காணப்படலாம். இவையும் கறையான்கள், சிறிய பூச்சிகள், பல்லிகள் போன்றவைகளை உட்கொள்கின்றன. மற்றைய இயல்புகள் யாவும் வீட்டுப் பாம்புபோலவே காணப்படும்.

கட்டுவிரியன் / புல்வரியன் - உரு 11: (**Kukrisnake** - ***Oligodon arnensis***)

இது வடமாகாணத்தில் காணப்படக்கூடிய நஞ்சற்ற ஒரு பாம்பாகும். இது ஆகக்கூடியது 2 அடிவரை வளரக்கூடியது. மஞ்சளும் கபிலமும் கலந்தவுடல். இதன் தலைப்பகுதியிலுள்ள இரண்டு கரிய கோடுகளில் முதலாவது இரு கண்களிற்கூடாகச் செல்ல இரண்டாவது கோடு அம்புக்குறி போன்றிருக்கும். இதைவிட கழுத்திலிருந்து சற்றே அகன்ற வேல் போன்றதொரு அடையாளம் முதுகுப்புறத்தின் இருமருங்கையும் தொட்டவாறு செல்லும். இதன் பின்னர் சற்றே இடைவெளி கூடியதானமுறையில் கரிய கோடுகள் வால்வரை காணப்படும். முதுகுப்புறச் செதில்கள் சிறுபருக்கைளைக் கொண்டவை.. வயிற்றுப்புறம் வெண்மையானது.

நடத்தை: இவை பெரும்பாலும் பகலில் நடமாடுபவை. நெல்வயல்கள் மற்றும் தோட்ட நிலங்கள், மனிதநடமாட்டம் அதிகமுள்ள பூங்காக்கள், வீட்டுத்தோட்டம் என்பவற்றில் இலை தழைகள், புற்கள் மற்றும் உக்கிய குப்பைகளிற்கு கீழாகவோ அல்லது கற்களிற்கிடையேயோ கூடக் காணப்படலாம். சில வேளை இவை நிலத்தையண்டிக் காணப்படும் மரப்பொந்துகளிலும் இருக்கலாம். அதாவது தரை வாழ்க்கையையே பெரிதும் விரும்புகின்றன. எலிவளைகள், எலிப்பொந்துகள் என்பவற்றிலுள்ள எலிக்குஞ்சுகள், அகழான்கள், சிறிய நகருயிர்கள், அவற்றின் முட்டைகள் போன்றவற்றை உட்கொண்டு கமக்காரர்களிற்கும் சூழல் சமநிலைக்கும் சிறந்த பணியாற்றுகின்றன. எனினும் பகலில் நடமாடுவதாலும் உடலிலுள்ள குறுக்கு வரிகளாலும் தவறுதலாகக் கண்டங் கருவளையென நினைத்து அடிக்கப்பட்டு பல இறந்துவிட்டன. மழைக் காலங்களில் இவை சிலவேளை இரவில் நடமாடலாம். உண்மையில் இவை சாதுவான தன்மையுடையவை. அருட்டப்பட்டால் மாத்திரமே கடிக்க எத்தனிக்கும். கூரான வளைந்த கத்தியைப் போன்ற பற்களுடையவை. இவை சீக்கியர்கள் கொண்டுசெல்லும் கத்தியைப் (**kukri**) போன்றிருப்பதால் குக்ரிப்பாம்பு எனவும் அழைப்பார்கள்.

(வளரும்).

கலாநிதி அபிராமி சிவரூபன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
விலங்கியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

---

**புதிர் 218 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

விமலேந்திரநாதன்
வேணுகரன்.15/4,
தேவாலய வீதி,
ஓட்டுமடம்

**புதிர் 218 க்கான கேள்வியும் விடையும்:**

நாகபாம்பின் நஞ்சு எமது உடலில் எத்தொகுதியை பிரதானமாகத் தாக்கும்?

நரம்புத் தொகுதியை

## வாரத்திற்கு ஒரு புதிர்! 219

முகத்தில் வெப்ப உணரிகளைக் கொண்ட குழிகள் எப்பாம்பினங்களில் காணப்படும்?

**புதிர் 219 இற்கான விடைகளை 21.01.2019 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

Dr. வி.சா.துளசிதா
விலங்கியல்துறை,
விஞ்ஞானபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 219**

சரியான விடை:-.......................................
முழுப்பெயர்:-.......................................
முகவரி:-.......................................
தொ.பே. இல:.......................................
கையொப்பம்:.......................................

# இலங்கையில் படைத்தளம் அமைக்கிறது அமெரிக்கா

## கப்பல்கள் வருகையை சுட்டிக்காட்டி வாசு குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் அமெரிக்கக் கடற்படை தளமொன்று அமைக்கும் நடவடிக்கை இடம் பெற்று வருவதாகவும் அண்மைக்காலமாக இலங்கையின் கடல் எல்லைக்குள் அமெரிக்கக் கப்பல்களுக்கான சேவை வழங்கல்கள் இடம்பெற்று வருவதாகவும் எதிர்க் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார குற்றம் சாட்டியுள்ளார்.



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரசாயன ஆயுதங்கள் சமவாயம் திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் இரசாயன திரவங்களைக் கொண்டுவரத் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனினும் ஒரு சில அமைச்சுக்களின் மூலமாக நாட்டுக்குத் தேவையான சில இரசாயன திரவியங்கள் கொண்டு வரப்படுகின்றன. சில சட்டங்களில் அது அனுமதிக்கவும் பட்டுள்ளது.

குறிப்பாக விவசாயத்துக்கு தேவையான சில இரசாயனத் திரவங்கள், பாதுகாப்பு சார் கண்ணீர்ப்புகைக்கு கலக்கும் இரசாயான திரவியம் என்பன உள்ளடக்கப்படுகின்றன.

இதில் கண்ணீர்ப்புகைக்காக பயன்படுத்தப்படும் திரவம் என்ன என்பது குறித்து எங்கும் சுட்டிக் காட்டப்படவில்லை. இந்த திரவம் உடலில் பட்டதும் தோல் நோய்கள் ஏற்படும் நிலைமையும் ஏற்படுகின்றது. கூட்டங்களை கலைக்க வேண்டும் என்றால் அதற்கு தண்ணீர் தாக்குதலே போதுமானது. ஆனால் கண்ணீர்ப்புகை பிரயோகம் என்பது ஒருவித தண்டனை கொடுக்கும் முறைமையாகவே உள்ளது.

ஆகவே இதனைத் தடுக்கும் நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சட்டத்தின் ஆட்சி, சுயாதீன உறுதிப்பாடு இலங்கையில் ஜனநாயக மாற்றங்கள்

## ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்பு

(கொழும்பு)

இலங்கையின் ஜனநாயகத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றகரமான மாற்றங்கள், குறிப்பாக சட்டத்தின் ஆட்சி மற்றும் ஜனநாயக நிறுவனங்களின் சுயாதீனத்துவ உறுதிப்பாடு என்பன தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் தமது வரவேற்பை வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற உறுப்பினர்களும் ஐரோப்பிய ஒன்றிய இலங்கை நட்புறவுக்குழுவில் அங்கம் வகிக்கும் பிரதிநிதிகளுமான ஜோப்ரே வன் ஓர்டென், வில்லியம் டார்ட்மௌத் ஆகியோர் கடந்த 2 தொடக்கம் 6 ஆம் திகதி வரையிலான ஐந்து நாட்கள் விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்திருந்தனர்.

மேற்படி ஐந்து நாள் விஜயத்தின் போது இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள், எதிர்க்கட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கட்சி பிரதிநிதிகள் உள்ளிட்டோரை சந்தித்து கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தனர்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இலங்கை ஆகிய இருதரப்பிற்கும் இடையிலான பொதுவான பிராந்திய ரீதியிலான செயற்பாடுகள், ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை, அரச நிர்வாகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி, சிவில் சமூக அமைப்புக்கள் சார்ந்த பிரச்சினைகள், மனித உரிமைகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் இக்கலந்துரையாடல்கள் அமைந்திருந்ததாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-7)

# அனைத்து மாணவர்களுக்கும் சிறந்த கல்வி

## ஆளுநர் அசாத் சாலி தெரிவிப்பு

(கொழும்பு)

அனைத்து மாணவர்களுக்கும் சிறந்த கல்வியைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. அதனால் மேல் மாகாண பாடசாலைகளை முன்னேற்ற அர்ப்பணிப்புடன் பணியாற்றுவேன் என மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி தெரிவித்தார்.

மேல் மாகாணத்தின் 8 ஆவது ஆளுநராக கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி நேற்று முன்தினம் தனது கடமையை ராஜகிரியவில் அமைந்துள்ள ஆளுநர் பணிமனையில் பொறுப்பேற்றார்.

பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.



மாகாண ஆளுநர்கள் மற்றும் மாகாணசபை முதலமைச்சர்கள் இணக்கப்பாட்டுடன் இணைந்து செயற்பட்டால்தான் அந்த மாகாண மக்களின் தேவைகளை மேற்கொள்ள முடியும். என்னை பொறுத்த 'வரையில் நான் எப்போதும் சத்தியத்துக்காக குரல் கொடுத்து வருபவன். அதனை மேல் மாகாண முதலமைச்சருடன் இணைந்து செய்ய முடியுமானால் அதற்கும் நான் தயாராகவே இருக்கின்றேன்.

மேலும் மாகாண ஆளுநர் வாசஸ்தலமானது அந்த மாகாண மக்களின் தேவைகளை நிறைவேற்றும் இடமாகும். அதனால் மேல் மாகாண ஆளுநர் வாசஸ்தலத்தில் அரசியல் செய்ய இடமளிக்கமாட்டோம்.

இந்த இடத்துக்குவரும் அனைத்து மக்களுக்கும் சேவை செய்வது எனது கடமையாகும். இதன்போது கட்சி பேதம் பார்க்க முடியாது. அதனை நான் ஒருபோதும் செய்ய மாட்டேன்.

அவ்வாறு நான் செயற்பட்டதும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# குறை'களை' பதிகம் 07



## கடுகதி கடவைகள் அபயமோ? அபாயமோ?

இறுதிவரை இணையாத கோடுகளாய்
இருக்கும் தண்டவாளங்களில்-ஏனோ
நாளும் பொழுதும் நடக்கிறது விபத்துக்கள்

விலைகொடுக்க முடியாத உயிர்களை
ஒருநொடிப்பொழுதில் நொருக்கிவிட
ஒடிந்து போவது உயிருள்ளோர் வாழ்வே!

நூறு வருடங்கள் வாழும் கனவுகளை
நூலிழைக் கோடுகளில் கலைத்துவிட
நாம் செய்த பாவமென்ன?

வீதிகளை உயர்த்தி
வருவதும் போவதும் தெரியாமல்
விதியை முடிக்கும் கடவையாய்...
வந்த கடுகதி தன் வாஞ்சை தீர்க்கிறது

ஒளிரும் விளக்குகள் ஒளிராதிருப்பதும்
ஒளிரும் வேளைகளில் ஒளிராமல்-தொடர்ந்து
ஒளிர்ந்து கொண்டே இருப்பதும்
ஐயகோ!
மனித வேட்டைக்காய் பாயும்
இரும்பு வண்டிகளின் ஒலி என்ன ஒலி
அபயமோ? அபாயமோ?

உயிர்களின் விலைதனை உணர்ந்த உத்தமரே
ஒருகணம் சிந்திப்பீர்!!
அனைத்துக் கடவைகளையும்
ஆபத்தில்லாக் கடவையாக்கிட
ஆழ்ந்து வேண்டுகிறோம்

மாவை நா.கஜேந்திரன்

# ஆவளைப் பகுதியில் மயான விவகாரம் இணக்கப்பாடு இல்லையேல் நீதிமன்றம்

## பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஆவளைப் பகுதியில் மயானம் அமைப்பது தொடர்பாக இணக்கப்பாடு ஏற்படாவிட்டால் நீதிமன்றம் தான் முடிவெடுக்க வேண்டிய நிலை ஏற்படுமென பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், ஆவளைப் பகுதியில் மயானம் ஒன்று இருப்பதாகவும் அதனை தமக்கே வழங்க வேண்டுமென ஒரு பகுதியினரும் இல்லை இது மக்கள் குடியேறிய இடம். இதில் மயானம் அமைக்க முடியாது என இன்னொரு பகுதியினரும் தமது பக்க நியாயங்களை வலியுறுத்தி கருத்து மோதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த விடயம் தொடர்பாக கடந்த மாதம் இரு பகுதியினரையும் அழைத்து அரச அதிபரின் தலைமையில் கூட்டமொன்று தமது செயலக மண்டபத்தில் இடம் பெற்றதாகவும் இதில் பொது இணக்கப்பாட்டுக்கு இரு தரப்பினரும் வராத சூழ்நிலையில் குறித்த எல்லைகளை அடையாளப்படுத்த நில அளவைத் திணைக்களத்துக்கு அறிவுறுத்தப்பட்டதாகத் தெரிவித்தார்.

நில அளவைத் திணைக்களத்தரவின் படி 1930 ஆம் ஆண்டு குறித்த காணி மயானம் என அடையாளப்படுத்தப்பட்டதாகத் தெரிவித்த நிலையில் மயானம் அமைப்பதற்கு 10 பரப்புக் காணியையும் மக்கள் பயன்பாட்டிற்கு 6 பரப்புக் காணியையும் வழங்கும் தீர்மானத்தை இரு தரப்புக்கும் தெரியப்படுத்தியதாகவும் அவர்கள் உடன்பாடொன்றிற்கு வராவிட்டால் தாம் இனி இப்பிரச்சினையில் தலையிடப் போவதில்லை எனவும் நீதிமன்றம் தான் முடிவெடுக்குமென செயலாளர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# எங்களின் உறவுகள் புதைக்கப்பட்ட இடம்;

# இராணுவத்திற்கு வழங்க இடமளிக்க மாட்டோம்

## அளம்பில் மாவீரர் துயிலுமில்ல காணி சுவீகரிப்பு நடவடிக்கை தடுத்து நிறுத்தம்




(பனிக்கன்குளம்)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாவீரர் துயிலுமில்லங்களில் ஒன்றான அளம்பில் மாவீரர் துயிலுமில்ல காணி அளவீட்டு பணிகள் மக்களால் நேற்று தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.**

குறித்த மாவீரர் துயிலுமில்ல காணியை இராணுவம் சுபீகரித்து வைத்துள்ள நிலையில் இராணுவம் அந்த காணியில் விவசாய செய்கையை மேற்கொண்டு வருகிறது.

இந்தக் காணியை விடுவிக்குமாறு மக்கள் கோரிவரும் நிலையில் இராணுவம் விவசாயம் செய்துவருவதோடு இந்த காணியை கையகப்படுத்த பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டு வந்துள்ளது.

தனியார் ஒருவருக்கு சொந்தமான இந்தக்காணியில் விடுதலைப்புலிகள் காலத்தில் மாவீரர் துயிலுமில்லம் உருவாக்கப்பட்டு பல ஆயிரக்கணக்கான மாவீரகளது வித்துடல்கள் விதைக்கப்பட்டு இறுதி யுத்த காலப் பகுதியில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு துயிலுமில்லம் இடித்து தரைமட்டமாக்கப்பட்டு காணி சுபீகரிக்கப்பட்டது.

தொடர்ந்து இராணுவத்திடம் இருந்து காணியை மீட்க மக்கள் போராடிவரும் நிலையில் இந்த காணி மற்றும் இதனோடு இணைந்த காணியை காணி உரிமையாளர் சம்மதத்தோடு அளவிட்டு சுபீகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அந்த வகையில் நிலத்தை அளவீடு செய்ய நில அளவை திணைக்களத்தினர் அந்த இடத்துக்கு வருகை தந்திருந்தனர்.

இந்நிலையில் இந்த இடத்தில் ஒன்றுகூடிய மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் நில அளவீட்டை செய்யவிடாது தடுத்து நிறுத்தியுள்ளனர்.

குறித்த காணி உரிமையாளருக்கு பல ஏக்கர் காணிகள் இருக்கிறது. இது அவருடைய காணியாக இருந்தாலும் எங்களுடைய உறவுகள் புதைக்கப்பட்ட நிலம் இதனை அளவிட்டு இராணுவத்துக்கு வழங்க இடமளிக்க மாட்டோம். எமது பிள்ளைகள் புதைக்கப்பட்ட இடத்தில் விவசாயம் செய்கின்றனர். எந்தத் தேவையும் இல்லாது விவசாயம் செய்ய எமது பிள்ளைகள் புதைக்கப்பட்ட இடத்தை பயன்படுத்துகின்றனர்.

இந்தக் காணியை துயிலுமில்லத்துக்காக இராணுவத்திடம் இருந்து மீட்டு வழங்க வேண்டும். இராணுவத்துக்கு வழங்க முடியாது என மக்கள், தெரிவிக்கின்றனர்.

மக்களின் எதிர்ப்பையடுத்து காணி அளவீட்டு பணிகள் நேற்று தற்காலிகமாக கைவிடப்பட்டது. (2-281)




# ஐந்து நாட்களுக்கு ஒரு தடவை

# இரணைமடு நீர்த்தேக்கத்திற்கு அதிகாரிகள் சென்று கண்காணிப்பில் ஈடுபட வேண்டும்

## அதிகாரிகளுக்கு வடக்கு ஆளுநர் பணிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் செய்த வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் நண்பகல் வேளை இரணைமடு நீர்தேக்கத்திற்கு திடீர் கண்காணிப்பு விஜயம் ஒன்றைமேற்கொண்டிருந்தார்.

இதன்போது இரணைமடு நீர்தேக்கத்தின் வான் கதவுகளில் சில குறைபாடுகள் உள்ளதாகவும் அது தொடர்பில் உரிய அதிகாரிகள் சரியான கண்காணிப்புக்களை மேற்கொள்ளாது அசமந்தப்போக்குடன் செயற்படுவதாகவும் அதனாலேயே அண்மையில் கிளிநொச்சி மக்கள் பாரிய வெள்ள அனர்த்தத்திற்கு முகம்கொடுத்ததாகவும் மக்களிடமிருந்து கிடைத்திருந்த முறைப்பாடு தொடர்பில் ஆளுநர் ஆராய்ந்தார்.

இதுதொடர்பில் உடனடியாக கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு அவசியமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இரணைமடு நீர்த்தேக்கத்தின் வான் கதவுகளில் காணப்பட்ட குறைபாடுகள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டிய இரு நிறுவனங்கள் இன்னமும் இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதனை அறிந்துகொண்ட ஆளுநர் சம்பந்தப்பட்டவர்களை உடனடியாகவே தொடர்புகொண்டு உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

அத்தோடு ஐந்து நாட்களுக்கு ஒருதடவை உரிய அதிகாரிகள் இரணைமடு நீர்த்தேக்கத்திற்கு விஜயம் மேற்கொண்டு கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அத்தோடு இரணைமடு நீர்த்தேக்க அனர்த்தம் தொடர்பில் உண்மையை கண்டறியும் விசாரணைக்குழுவினை பொறியியலாளர் ரகுநாதன் தலைமையில் உடனடியாக மீளவும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநருடைய செயலாளர் எல்.இளங்கோவனுக்கு உத்தரவிட்டார். ஆளுநருடைய செயலாளர் எல். இளங்கோவன் உள்ளிட அரச அதிகாரிகள் இதன்போது உடனிருந்தார்.

இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி யாழ்.மாவட்ட பிரதி நீர்பாசன பணிப்பாளர் என்.சுதாகரன் கருத்து தெரிவிக்கையில்,

இரணைமடுக்குள விவகாரம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டால் அதற்கு தாம் தயாராக உள்ளதாக தெரிவித்தார். குறிப்பிடப்படுகின்றவாறு எவ்வித பாதகமான செயற்பாடுகளும் இடம்பெறவில்லை எனவும், விசாரணை குழுவிற்கு விளக்கமளிக்கும் வகையில் சகல விபரங்களும் திரட்டப்பட்டு கைவசம் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (2)

### சந்திப்பு முல்லையில்

(முல்லைத்தீவு)

வடமாகாண அதிபர் சங்கத்தினருக்கும் முல்லைத்தீவு வலய அதிபர்களுக்குமிடையிலான சந்திப்பு இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் முல்லைத்தீவு வலயத்தின் கேட்போர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக வட மாகாண அதிபர் சங்கத் தலைவர் வி.ரி.வேந்தன் அறிவித்துள்ளார். (2)

# மக்களுக்கு சேவையாற்ற உத்தியோகத்தர்கள் றக்பி வீரர்கள் போன்று இருக்க வேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் கிளிநொச்சியில் தெரிவிப்பு

(பரந்தன்)

மக்களுக்கு சேவையாற்ற உத்தியோகத்தர்கள் றக்பி வீரர்கள் போன்ற நல்ல கோல்ப் விளையாட்டு வீரர்கள் போன்று நாகரிகமாக உடையணிந்து கணவான்கள் போன்று இருந்தால் மக்களுக்கு பணியாற்ற முடியாது என வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் வெள்ளத்தினால் ஏற்பட்ட பாதிப்பின் பின்னர் ஏற்பட்டுள்ள சவால்கள் மற்றும் கள நிலைமைகள் தொடர்பில்நேற்று முற்பகல் 10 மணியளவில் வடக்கு மாகாண ஆளுநர் கிளிநொச்சியில் விசேட கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். குறித்த கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கிளிநொச்சியில் இராணுவம், அதிகாரிகள், பொது மக்கள் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட பணிகள் காரணமாக உயிரிழப்புக்கள் மற்றும் பாரிய அழிவுகளில் இருந்து மக்களை காப்பாற்ற முடிந்திருக்கிறது. அதற்காக அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

கிளிநொச்சிக்கான சவால்கள் இன்னும் தீர்ந்துவிடவில்லை. அவற்றை நாம் எதிர்கொள்ள வேண்டும். அத்தோடு எல்லாத் திணைக்கள அதிகாரிகளுக்குமிடையே ஒருங்கிணைப்பு ஒத்துழைப்பு இருக்கவேண்டும். ஒருவர் செய்கின்ற பணி இன்னொருவருக்கு தெரியாது இருக்கிறது. இது கவலைக்குரிய விடயம்.

தமிழ் மொழி எங்கள் அடையாளம். பத்தாயிரம் வருடங்கள் பழைமைவாய்ந்த மொழி உலகில் உள்ள மூத்த பத்து மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று. இதனை ஹவார்ட் பல்கலைகழகமும் ஆராய்ச்சி மூலம் உறுதி செய்திருக்கிறது.

மேலும் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையிலான குழுவினர் பன்னங்கண்டி பிரதேசத்திற்த சென்று அங்கு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நிலைமைகளையும் நேரில் ஆராய்ந்துள்ளனர்.

இக் கலந்துரையாடலில் மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை தவிசாளர்கள், திணைக்கள் அதிகாரிகள், பொலிஸ் அத்தியட்சர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-312-315)

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

## சகோதர பாடசாலை நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் பாடசாலையில் இடம்பெற்ற சகோதர பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தார். இதன்போது மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களையும் அவர் வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதியுடன் அமைச்சின் அதிகாரிகள், முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன், முல்லைத்தீவு வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி. உமாநிதி புவனராஜா உள்ளிட்ட அரச அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (2-281)

### ஒரு கோடியே 84 இலட்சம் ரூபா பெறுமதியான

# 184 கிலோ கேரள கஞ்சாப்பொதிகளுடன் வங்காலையில் ஒருவர் கைதானார்

## நேற்று அதிகாலை வேளையில் சம்பவம்

(மன்னார்)

**மன்னார் வங்காலை கடற்பகுதியில் வைத்து ஒரு கோடியே 84 இலட்சம் ரூபாய் பெறுமதியான 184 கிலோ 200 கிராம் எடைகளைக் கொண்ட கேரள கஞ்சாப் பொதிகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.**



மன்னார் வங்காலை கடற்பகுதியில் வைத்து நேற்று அதிகாலை சுமார் ஒரு கோடியே 84 இலட்சம் ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சாப் பொதிகளுடன் நபர் ஒருவரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

வங்காலை கடற்பகுதியில் பொதி செய்யப்பட்ட நிலையில் 184 கிலோ 200 கிராம் எடை கொண்ட கேரள கஞ்சாப்பொதிகளுடன் உயிலங்குளம்பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாப்பொதிகள் மற்றும் கைது செய்யப்பட்ட நபர் வங்காலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் வங்காலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-285)

# வடக்கு ஆளுநர் கிளிநொச்சிக்கு விஜயம்

## வெள்ள அனர்த்தம் தொடர்பில் ஆராய்ந்தார்





(கிளிநொச்சி)

வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டார்.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் பணிமனைக்கு சென்ற ஆளுநரை அரசாங்க அதிபர் உள்ளிட்ட பணிக்குழாமினர் வரவேற்றனர்.

நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக கடமைகளைப்பொறுப்பேற்றுக்கொண்ட வடக்கு ஆளுநர் கிளிநொச்சிக்கு விஜயம் செய்யும் முதலாவது சந்தர்ப்பம் இது என்பதோடு, இதன்போது கிளிநொச்சி மாவட்ட நிலைமைகள் தொடர்பிலும் அரச அதிகாரிகளுடன் ஆராய்ந்தார்.

இதில் முக்கியமாக கிளிநொச்சியில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின், பின்னரான நிலைமைகள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்ததுடன் கிளிநொச்சி மாவட்டத்தின் ஏனைய பல விடயங்கள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

ஆளுநருடைய செயலாளர் எல்.இளங்கோவன் கிளிநொச்சி விஜயத்தில் உடனிருந்தார். (2-281)




# கருவேப்பமுறிப்பு குளத்தை மக்களின் பாவனைக்கு கையளித்தார் சந்திரிகா





(பனிக்கன்குளம்)

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முல்லைத்தீவு மாவட்டத்துக்கான விஜயம் ஒன்றை நேற்று முன்தினம் மேற்கொண்டிருந்தார்.

அந்த வகையில் அவருடைய தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்துக்கு மான அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் ஒன்றான கருவேப்பமுறிப்பு குளத்தை நேற்று முன்தினம் மக்களின் பாவனைக்காக கையளித்துள்ளார்.

அன்றைய தினம் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்ட அவர் இறுதியாக பிற்பகல் 4 மணியளவில் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட கருவேப்பமுறிப்பு குளத்தை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டார்.

சுமார் 45 ஏக்கர் விவசாயம் மேற்கொள்ளக்கூடிய இந்தகுளம் நல்லிணக்கத்தை நிலைபேறாக கட்டியெழுப்புவதற்காக தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத் துக்குமான அலுவலகத்தின் 59 8378ரூபா நிதிபங்களிப்பில் புனரமைக்கப்பட்டு 190 ஏக் கர் விவசாயம் மேற்கொள்ளக் கூடிய நிலையில் தற்போது கையளிக்கப்பட்டுள்ளது. (2-281)

# பூநகரி ப.நோ.கூ.சங்கத்தின் 18 கிளைக்குழுக்களுக்கு தேர்தல்

(பூநகரி)

பூநகரி பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தின் எல்லைப் பரப்பினுள் உள்ளடங்கும் 18 கிளைக்குழுக்குமான தேர்தல் எதிர்வரும் 12 ஆம் திகதி முற்பகல் நடைபெறவுள்ளதாக சகல உறுப்பினர்களுக்கும் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கிளைக்குழுக்களும் தேர்தல் நடைபெறும் இடங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

மட்டுவில் நாடு கிளை-பூநகரி மத்திய கல்லூரி, வில்லடி கிளை-பரமன்கிராய் அ.த.க.பாடசாலை, ஞானிமடம் கிளை-ஞானிமடம் அ.த.க.பாடசாலை, செட்டியகுறிச்சி கிளை-ஞானிமடம் அ.த.க.பாடசாலை, கறுக்காய்த்தீவு கிளை-பொது நோக்கு மண்டபம், தம்பிராய் செல்விபுரம் அ.த.க.பாடசாலை, செல்விபுரம் கிளை-செல்விபுரம் அ.த.க. பாடசாலை, நல்லூர் கிளை-முக்கொம்பன் பொ.நோ.மண்டபம், கௌதாரி முனைகிளை-கௌதாரிமுனை அ.த.க. பாட சாலை, கிராஞ்சி கிளை-கிராஞ்சி அ.த.க. பாடசாலை, வேரவில் கிளை-பொது நோக்கு மண்டபம், வலைப்பாடு கிளை- பொது நோக்கு மண்டபம், முழங்காவில் கிளை-பொது நோக்கு மண்டபம், இரணைதீவுகிளை-றோ.க.பாடசாலை, பல்லவராயன்கட்டு கிளை-கரியாலை நாகபடுவான் இல. 3 பாடசாலை, நாச்சிக்குடா கிளை- முஸ்லிம் பாடசாலை, ஜெயபுரம் கிளை-பொது நோக்கு மண்டபம், குமிழமுனை கிளை-குமிழமுனை அ.த.க.பாடசாலை.

எனவே சகல கூட்டுறவு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொண்டு தங்கள் வாக்குகளை அளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.(2-84)

### விவசாய மக்களால் அனுப்பி வைக்கப்பட்ட

# வெள்ள நிவாரணப் பொருட்கள் கிளிநொச்சியில் கையளிப்பு



(கிளிநொச்சி)

இலங்கை மகாவலி அதிகார சபையின் "எச்" பிரிவின் அனுசரணையுடன் விவசாய மக்களால் கையளிக்கப்பட்ட வெள்ள நிவாரணப் பொருட்கள் நேற்று முன்தினம் கிளிநொச்சியை வந்தடைந்தது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக குறித்த வெள்ள நிவாரணம் விவசாயிகளால் மகாவலி அதிகார சபையினரின் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய உள்நாட்டலுவல்கள் அமைச்சரின் பணிப்புரைக்கமைய குறித்த வெள்ள நிவாரணப் பொருட்கள் சேகரிக்கப்பட்டு நேற்று முந்தி னம் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் கையளிக்கப்பட்டது. மகாவலி அதிகார சபை யின் பணிப்பாளர் மகேந்ர அபகேவர்த்தனவினால் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் குறித்த நிவாரண பொருட்கள்கையளிக்கப்பட்டன.

ஏழு வாகனங்களில்எடுத்து வரப்பட்ட குறித்த நிவாரண பொருட்களை வழங்கிய விவசாயிகளுக்கு அரசாங்க அதிபர் இதன்போது நன்றி தெரிவித்தார். (2)

# கலாசாரப் பேரவையின் வருடாந்த பொதுக்கூட்டம்

(பூநகரி)

பூநகரி பிரதேச கலாசாரப் பேரவையின் இவ்வாண்டுக்கான வருடாந்தப் பொதுக் கூட்டம் கலாசாரப் பேரவையின் தலைவரும் பூநகரி பிரதேச செயலருமான சி.ச.கிருஸ்ணேந்திரன் தலைமையில் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் இவ்வருடத்திற்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படவிருப்பதால்பேரவை உறுப்பினர்கள், கலைஞர்கள், படைப்பாளிகள் ஆகியோரை தவறாது கலந்துகொள்ளுமாறு அழைக்கப்பட்டிருப்பதுடன் கலாசார அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டிருக்கின்றது. (2-84)

# இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் மாவட்ட இளைஞர் ஆளுநர் சபை

(கண்டாவளை)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மாவட்ட இளைஞர் ஆளுநர் சபை அண்மையில் செஞ்சிலுவைச் சங்கத்தின் மாவட்ட இடைக்கால இளைஞர் சபையின் தலைவர் கே. லக்சுயன் தலைமையில் செஞ்சிலுவை சங்கத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் இளைஞர் சபையின் ஜனநாயகத் தலைவராக மீண்டும் லக்சுயனும் செயலாளராக நவநீதனும் பொருளாராக அனுசாவும் உபதலைவராக துவாரகனும் ஆறு நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சிக்கிளை செயலாளர் த.சேதுபதி மற்றும் கிளிநொச்சி கிளையின் கிளைநிறைவேற்று அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2-315)

# பாடசாலை பிரிவுப்போட்டி; பூநகரி மத்திய கல்லூரி தெரிவு

(பூநகரி)

கொழும்பில் அமைந்துள்ள தேசிய உற்பத்திதிறன் செயலகத்தால் நடத்தப்பட்ட தேசிய உற்பத்தி திறன் விருத்திக்கான 2018 போட்டித் தொடரில் பாடசாலைப் பிரிவுப் போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து விண்ணப்பித்த பாடசாலைகளில் கிளி/பூநகரி மத்திய கல்லூரி மட்டும் (Commendation) பெற்றுள்ளதாக பூநகரி பிரதேச செயலரின் ஊடகப் பிரிவின ரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (2-84)

# பாரதம்

## ஸ்டெர்லைட் ஆலை விவகாரம்

# நிரந்தரமாக மூட சட்டம் இயற்றப்பட வேண்டும்

### -வேல்முருகன் வலியுறுத்து-



(சென்னை)

ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட, சட்டப் பேரவையில் சட்டம் இயற்ற வேண்டுமென, தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் வேல்முருகன் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "தூத்துக்குடி தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் மூலம் ஸ்டெர்லைட் ஆலையை திறப்பதற்கு நிர்வாகத்தினர் முயற்சிக்கின்றனர். உச்சநீதிமன்றத்தில் பின்னடைவை சந்தித்திருந்தாலும் விரைவாக தமிழக அரசு நடைபெற்றுக்கொண்டுள்ள சட்டப் பேரவையில் இதற்கான சட்டத்தை இயற்றி, ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட, ஆவன செய்ய வேண்டும்" என அவர் வலியுறுத்தியுள்ளார்.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக கடந்த மே மாதம் நடந்த போராட்டத்தைத் தொடர்ந்து, ஆலையை மூட தமிழக அரசு உத்தரவிட்டது.

தமிழக அரசின் உத்தரவிற்கு எதிராக பசுமைத் தீர்ப்பாயத்தில், ஆலை நிர்வாகம் சார்பில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த பசுமைத் தீர்ப்பாயம், 3 வாரங்களுக்குள் ஆலையை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிட்டிருந்தது.

எனினும், பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவுக்கு எதிராக தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்திருந்தது.

இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. இதன்போது, பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவினை ஏற்றுக் கொண்ட உச்ச நீதிமன்றம், ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்க உத்தரவிட்டது.

அத்துடன், தேசிய பசுமை தீர்ப்பாயம் விதித்துள்ள நிபந்தனைகளுக்கு அமையவே, ஆலையை செயற்படுத்தப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

கடந்த மே மாதம் 22 ஆம் திகதி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக தூத்துக்குடியில் நடைபெற்ற மாபெரும் போராட்டத்தின் போது கலவரம் ஏற்பட்டதுடன், போராட்டம் நடத்திய 13 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இதைத்தொடர்ந்து தமிழக அரசு ஸ்டெர்லைட் ஆலைக்கு சீல்வைத்து மூடியமையும் குறிப்பிடத்தக்கது. (4-7)

## ஆப்கானில் பயங்கரவ...

## எட்டு பொலிஸார் உ...

(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாட்டின் தக்கார் மாகாணத்தில் நேற்று காவல் சாவடிகள் மீது தலிபான் பயங்கரவாதிகள் நடத்திய ஆவேச தாக்குதலில் 8 பொலிஸார் உட்பட 18 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் சுமார் 45 சதவீதம் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்திவரும் தலிபான் பயங்கரவாதிகள் ஏராளமான பொது மக்களை கொன்று குவித்து வருகின்றனர். அவர்களை வேட்டையாடும் நோக்கத்தில் இராணுவமும், விமானப்படையும் தாக்குதல் நடத்தி வருகிறது.

குறிப்பாக, நாட்டின் வடபகுதியில் உள்ள மாகாணங்களில் பயங்கரவாதிகளின் அட்டூழியம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், அந்நாட்டின் தக்கார் மாகாணத்துக்குட்பட்ட காஜாகர் மாவட்டத்தில் உள்ள கோர்ட்டேப்பா என்ற இடத்தில் பொலிஸாரின் சோதனைச்சாவடிகள் மீது தலிபான் பயங்கரவாதிகள் நேற்று அதிகாலை துப்பாக்கிகளால் சுட்டும் வெடிகுண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தினர்.

பொலிஸாரும் எதிர்த்தாக்குதல் நடத்தினர். இருதரப்பினருக்கும் இடையில் சிலமணி நேரம் நீடித்த துப்பாக்கிச் சமரில் 8 பொலிஸார் உயிரிழந்தனர். 10 பயங்கரவாதிகள்

## ட்ரம்பின் நிறவெறி செயல்களை எதிர்த்து நான் போராடுவேன்

### கமலா ஹாரீஸ் சவால்

(வோஷிங்டன்)

புலம்பெயர்ந்தவர்களை அழிக்க புறப்பட்டுள்ள ட்ரம்ப்பின் நிறவெறி செயல்களை எதிர்த்து போராடுவேன் என்று அமெரிக்க எம்.பியான இந்திய அமெரிக்க பெண் கமலா ஹாரீஸ் தெரிவித்துள்ளார்.

மெக்ஸிக்கோ எல்லையில் சுவர் எழுப்ப வேண்டும் என்பதில் ஜனாதிபதி ட்ரம்ப் உறுதியாக உள்ளதால் நிலைமை தொடர்ந்து சிக்கலாகியுள்ளது. எனினும் ட்ரம்ப் தனது பிடியை விடாமல், அமெரிக்க மக்கள், மெக்ஸிக்கோ எல்லைச் சுவர் கட்ட 5 பில்லியன் பணம் ஒதுக்கும்படி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிலையில் ஹாரீஸ்



அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது.

அமெரிக்க மக்கள் ஒரு சிறந்த தலைமையை எதிர்பார்த்தார்கள். ஆனால் இந்த ஜனாதிபதியின் கீழ் அவர்கள் குழப்பத்தில் தள்ளப்பட்டுள்ளனர்.

ட்ரம்ப்பை தவ றாக தேர்ந்தெடுத்த காரணத்தால், இன்று 8 இலட்சம் ஊழியர்களும் கூட்டாட்சி அரசின் அனைத்துவிதமான சேவைகளும் ஜனாதிபதியின் தற்பெருமை திட்டத்திற்காக பணயம் வைத்துக் கொண்டிருக்கிறோம்.

இந்தியாவிலிருந்தும் ஜமைக்காவிலிருந்தும் குடியேறியவர்களின் மகளான எனக்கு புலம்பெயர்ந்தவர்கள் பற்றிய ட்ரம்ப் நிர்வாகத்தின் கீழ் நடந்துவரும் அரசியல் கொள்கைகள் ஏற்படுத் தியுள்ள கண்ணோட்டம் எவ்வளவு மோசமானது என்பதை உணர்கிறேன்.

என் அம்மா பழுப்பு நிறத்துடன் இருப்பதால் இதில் அவரும் ஒரு இலக்காகி வருவதை நான் கோபத்துடன் பார்த்துக் கொண்டிருக்கிறேன். எனினும் சத்தியங்களை நாம் பற்றிக்கொண்டுள்ளோம்.

அமெரிக்காவிற்குள் குடியேறியவர்கள் மீது சட்டபூர்வ மற்றும் மனிதாபிமான பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான முயற்சிக ளில் நான் இறங்கியுள்ளேன்.

அவரது செயல்களை எதிர்த்து தொடர்ந்து போராடுவேன்.

மகிழ்ச்சியும் வளமுமான குழந்தைப்பருவத்தாலும் வளர்த்தெடுக்கப்படுவதற்காக ஆசிர்வதிக்கப்பட்டவள் நான். ஆனால் புலம்பெயர்ந்தோருக்கு ட்ரம்ப் செய்து வரும் துரோகம் என்னை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

குடியேற்றம் பற்றி நாம் விவாதிக்கும்போது, புலம்பெயர்ந்தவர்களை அவர்கள் வேறு நாடுகளில் பிறந்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக அழிக்க முயலும் ஜனாதிபதி உள்ளிட்ட பலம்வாய்ந்த சக்திகள் இங்கு உள்ளன என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை என்றுதான் நான் நினைக்கிறேன். இவ்வாறு கமலா ஹாரீஸ் தொலைக்காட்சி பேட்டியில் தெரிவித்தார். (4-7)

## வெள்ளையின மேலாதிக்கத்தில் கனடா செயற்படுகிறது

### சீனா குற்றச்சாட்டு

(பீஜிங்)

மேற்கத்தேய ஏகபோகம் மற்றும் வெள்ளையின மேலாதிக்கத்துடன் கனடா செயற்படுகின்றதென சீனா குற்றஞ்சாட்டியுள்ளது.

சீனாவில் இரு கனேடிய பிரஜைகள் தடுத்துவைக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களை விடுவிக்குமாறு கனடா இவ்வாறான மனப்பான்மையுடன் வலியுறுத்தல் விடுத்துவருவதாக சீன தூதுவர் ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆனால், சீனாவின் ஹூவாவி தொலைத்தொடர்பு நிறுவனத்தின் தலைமைய நிதி நிர்வாகி கைதுசெய்யப்பட்டமை எவ்வித அடிப்படையும் அற்றதென சீனா குறிப்பிட்டுள்ளது.

எனினும், அவரை விடுவிப்பது தொடர்பாக எவ்வித கரிசனையும் கொள்ளாமல் சீனாவில் உள்ளவர்களை மாத்திரம் விடுவிக்குமாறு கோருவதாக சீனா குற்றஞ்சாட்டியுள்ளது.

அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் விதித்த தடைகளை மீறி ஈரானுக்கு தொலைத்தொடர்பு கருவிகளை விற்பனை செய்ததாக ஹூவாவி தொலைத்தொடர்பு நிறுவன தலைமை நிதி அதிகாரி Meng Wanzhou கனடாவின் வாங்கூரில் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில், Meng Wanzhou அமெரிக்காவிற்கு நாடுகடத்தும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்புடுகிறது. அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபணமாகும் பட்சத்தில் ஒவ்வொரு குற்றத்திற்கும் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக தண்டனை வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இவரது கைது சம்பவத்தை தொடர்ந்து இரண்டு கனேடியர்கள் சீனாவில் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## ஆஸி.வெளிநாட்டு தூதரகங்களுக்கு தபாலில் அனுப்பப்பட்ட மர்மப்பொதிகள்



(கன்பரா)

அவுஸ்திரேலிய தலைநகர் கன்பரா மற்றும் மெல்பேர்னிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் உள்ளிட்ட சுமார் 20 இற்கும் மேற்பட்ட இடங்களுக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை சந்தேகத்துக்கிடமான மர்மப் பொதிகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனைத் தொடர்ந்து குறித்த கட்டடங்கள் உடனடியாக மூடப்பட்டதுடன், அங்கிருந்த உத்தியோகத்தர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மெல்பேர்னிலுள்ள அமெரிக்க, பிரித்தானிய தூதரகங்கள் உள்ளிட்ட ஐந்து வெளிநாட்டு தூதரகங்களுக்கு குறித்த மர்மப் பொதிகள் அனுப்பப்பட்டமை ஆரம்பத்தில் உறுதி செய்யப்பட்டிருந்தாலும், தற்போது ஏனைய சில தூதரகங்களுக்கு குறித்த மர்மப் பொதி அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

அத்துடன், கன்பராவிலுள்ள சில தூதரகங்களுக்கும் இவ்வாறான அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி, கிறீக், தென்கொரியா், நியூஸிலாந்து, இந்தியா உள்ளிட்ட சில தூதரங்களுக்கும் இந்த மர்மப் பொதிகள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

இதன்போது எவருக்கும் எவ்விதமான பாதிப்பும் ஏற்படவில்லை என தெரிவித்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (4-7)

## அமெரிக்காவில்... இந்தியப் பொ... ஜனாதிபதி டொ...



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் சுட்டுக்கொல்லப்பட்ட இந்திய பொலிஸ் அதிகாரி கார்பரல் சிங் 'தேசத்தின் கதாநாயகன்' என ஜனாதிபதி ட்ரம்ப் புகழாரம் சூட்டினார்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள நியூமன் நகரில் பொலிஸ் அதிகாரியாக பணியாற்றி வந்தவர் கார்பரல் சிங் (வயது 35).

# வெளிநாடு

## ...ரவாதிகள் தாக்குதல் ... உட்பட 18 பேர் பலி



கொல்லப்பட்டனர். பொலிஸார் தரப்பில் 6 பேரும் பயங்கரவாதிகளில் பத்துக்கும் அதிகமானவர்கள் இதில் காயமடைந்ததாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (4-7)

## வாஜ்பாய் வழியில் பா.ஜ.க.செயற்படும்

### பிரதமர் மோடி உறுதி



(சென்னை)

கூட்டணி விவகாரத்தில் வாஜ்பாய் வழியில் பா.ஜ.க. செயற்படும் என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி தமிழக பா.ஜ.க. நிர்வாகிகளுடன் காணொலி மூலம் கலந்துரையாடியுள்ளார்.

தர்மபுரி மற்றும் கடலூர் மாவட்ட பா.ஜ.க. நிர்வாகிகள் இதில் பங்கேற்று உரையாடியிருந்தனர். இதன்போது அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி விளக்கம் அளித்தார்.

அதன்படி தமிழக நிர்வாகி ஒருவர், "நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்நாட்டில் பா.ஜ.க. யாருடன் கூட்டணி அமைக்கும். தி.மு.க., அ.தி.மு.க., ரஜினி ஆகிய கட்சிகளுடன்கூட்டணி அமைய வாய்ப்பு உள்ளதா?" என கேள்வியெழுப்பியுள்ளார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் நரேந்திர மோடி, "தமிழ்நாட்டில் கூட்டணிக்கான வாசல் திறந்தே இருக்கிறது. பழைய கட்சிகளையும் வரவேற்க பா.ஜ.க. தயாராகவுள்ளது.

கூட்டணி விவகாரத்தில் வாஜ்பாய்வழியில்பா.ஜ.க. செயற்படும். 20 ஆண்டுகளுக்கு முன்பே கூட்டணியை வெற்றிகரமாக நடத்தியவர் வாஜ்பாய். தனிப்பெரும்பான்மையோடு வெற்றி பெற்றாலும் கூட்டணியோடு இணைந்தே பா.ஜ.க ஆட்சி அமைக்கும்" என தெரிவித்துள்ளார்.(4-7)

## ...வில் சுட்டுக்கொல்லப்பட்ட பொலிஸ் அதிகாரிக்கு டொனால்ட் ட்ரம்ப் புகழாரம்



இந்திய வம்சாவளியை சேர்ந்த இவர், கடந்த மாதம் 26ஆம் திகதி போக்குவரத்து சிக்னலில் நின்றுகொண்டிருந்தபோது, மெக்சிக்கோவை சேர்ந்த வாலிபர் ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறிய அந்த வாலிபரை கலிபோர்னியா பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

இந்திய வம்சாவளி பொலிஸ் அதிகாரி சுட்டுக்கொல்லப்பட்டதற்கு ஜனாதிபதி ட்ரம்ப் அனுதாபம் தெரிவித்தார். மேலும் கடந்த 4 ஆம் திகதி கார்பரல் சிங்கின் குடும்பத்தினர் மற்றும் அவருடன் பணியாற்றிய சக பொலிஸாரை தொலைபேசியில் தொடர்புகொண்டு அவர்களுக்கு ஆறுதல் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் தொலைக்காட்சி வாயிலாக நாட்டு மக்களிடையே உரையாற்றிய ஜனாதிபதி ட்ரம்ப், சுட்டுக் கொல்லப்பட்ட இந்திய பொலிஸ் அதிகாரி கார்பரல் சிங் 'தேசத்தின் கதாநாயகன்' என தெரிவித்து அவருக்கு புகழாரம் சூட்டினார். மேலும் அவரை காட்டுமிராண்டித்தனமாக சுட்டுக் கொலை செய்த மெக்சிகோ வாலிபரை 'ஏலியன்' என்றும் சாடினார். (4-7)

## எல்லைச் சுவர் பிரச்சினையால் வாக்குவாதம்; எதிர்க்கட்சிக் கூட்டத்திலிருந்து வெளியேறிய ட்ரம்ப்

(வோஷிங்டன்)

மெக்சிக்கோ எல்லைப் பகுதியில் தடுப்புச் சுவர் கட்டும் விவகாரத்தில் எதிர்க்கட்சி எம்.பிக்கள் கூட்டத்தில் இருந்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஆவேசமாக வெளியேறினார்.



அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக ஊடுருவும் வெளிநாட்டினரை தடுக்க மெக்சிக்கோ எல்லையில் சுவர்கட்ட ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முடிவு செய்துள்ளார். அதற்காக சுமார் 40 ஆயிரம் கோடி ரூபாய் (570 கோடி டொலர்) நிதி ஒதுக்கும்படி அமெரிக்க பாராளுமன்றத்திடம் ஒப்புதல் கேட்டார்.

அதற்கு எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சியின் எம்.பிக்கள் எதிர்ப்பு தெரிவித்து ஒப்புதல் வழங்கவில்லை. அதனால் ஆண்டு பட்ஜெட் பாராளுமன்றத்தில் நிறைவேறவில்லை. இதனால் சுமார் 20 நாட்களாக பாதி அரசு அலுவலகங்கள் செயற்படாமல் முடங்கி கிடக்கின்றன.

இந்த நிலையில் ஜனாதிபதி ட்ரம்ப் நேற்று முன்தினம் தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தினார்.

அவ்வுரையில் கொலைகளை பட்டியலிட்டார். இந்த நிலை தொடர்ந்தால் எனது ஜனாதிபதி அதிகாரத்தை பயன்படுத்தி நாட்டில் அவசர நிலையை பிரகடனம் செய்வேன். அதன் மூலம் மெக்சிக்கோ எல்லையில் தடுப்பு சுவர் கட்ட தேவைப்படும் நிதியை பாராளுமன்ற ஒப்புதல் இன்றி என்னால் பெற முடியும் என்றார்.

இதயத்துக்கும் ஆன்மாவுக்குமான முக்கிய பிரச்சினையாக இதை மதித்து எதிர்க்கட்சி எம்.பிக்கள் என்னை சந்தித்து பேச வேண்டும். மக்களிடம் பிரதிநிதிகளாக இருக்கும் அவர்கள் எதுவுமே செய்யாமல் இருப்பது நல்லதல்ல என தனது தொலைக்காட்சி உரையில் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அவரது இந்த பேச்சுக்கு கண்டனம் தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர்கள் எல்லை பிரச்சினையை மனிதாபிமான நெருக்கடியாக மாற்றி, மனித உரிமை மீறல் என பிறநாடுகள் குற்றம்சாட்டும் அளவுக்கு ஊதிப் பெரிதாக்கும் ட்ரம்ப் அரசின் முடிவுக்கு எதிர்த்தனர்.

இந்நிலையில், எதிர்கட்சியான ஜனநாயக கட்சியை சேர்ந்த பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவர்கள் ஆலோசனை கூட்டத்துக்கு ட்ரம்ப் ஏற்பாடு செய்தார்.. வெள்ளை மாளிகையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் சுமுக முடிவு எட்டப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் ஜனநாயக கட்சியை சேர்ந்த பாராளுமன்ற மேல்சபை தலைவர் நான்சி பெலோசி மற்றும் சிறுபான்மை குழுவை சேர்ந்த உறுப்பினர் சக்ஸ்குமர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தின்போது ட்ரம்ப் சில நிபந்தனைகளை விதித்தார். இதை நான்சி பெலோசி ஏற்க மறுத்தார். நிதி முடக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் உங்கள் கோரிக்கைக்கு நான் சம்மதம் தெரிவித்தால் தடுப்புச் சுவர் திட்டத்துக்கு ஒப்புதல் தர நீங்கள் முன்வருவீர்களா? என ட்ரம்ப் கேட்டதற்கு நான்சி பெலோசி 'முடியாது' என்று தெரிவித்தார்.

இதனால், ஆத்திரமடைந்த ட்ரம்ப் 'பை பை' என்று கூறிவிட்டு ஆவேசமாக கூட்டத்தில் இருந்து வெளியேறினார். பின்னர் இதுதொடர்பாக தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்ட ட்ரம்ப், 'நான்சி பெலோஸ்கி மற்றும் சக்ஸ்குமர் ஆகியோருடன் இன்று நடந்த ஆலோசனை கூட்டம் ஒட்டுமொத்த நேர விரயம் (total waste of time) என்று பதிவிட்டார்.(7-4)

## சீன பல்கலை. வளாகத்தினுள் பழைமையான கல்லறைகள்!



(பீஜிங்)

சீனாவிலுள்ள பல்கலைக்கழக வளாகம் ஒன்றில் பழைமையான கல்லறைகள் சில கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தென்சீனாவின் குவாங்டோங் மாகாண குவாங்ஷோ நகரில் அமைந்துள்ள சண்-யட்-சென் பல்கலைக்கழக வளாகத்தில் இவ்வாறு 13 பழைமையான கல்லறைகள் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அத்தோடு 37 பண்பாட்டு சின்னங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சீன மொழியில் சோங்ஷான் பல்கலைக்கழகம் என்று அறியப்படும் சண்-யாட்-சென் பல்கலைக்கழகம் சீனப் புரட்சியின் பெரும் தலைவர்களில் ஒருவரால் 1924ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

1950 மற்றும் 1980 களில் இரண்டு மாகாண அகழ்வுகளைத் தொடர்ந்து, வளாகத்தின் ஒரு பகுதியானது நிலத்தடி தொல்பொருளியல் நினைவுச் சின்னங்களைக் கொண்டிருப்பதாக நம்பப்பட்டது. அதன் காரணமாக நிர்மாணிப்பதற்கு முன்பாக குறித்த பகுதியில் ஒரு அகழ்வு தேவைப்பட்டது.

அதன்படி கடந்த நவம்பர் மாதம் அகழ்வுப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன. இதன்போதே கல்லறைகளும், அற்புதமான வரலாற்றுச் சின்னங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களின் தகவல்களின் பிரகாரம், சீன வரலாற்றில் மூன்று வெவ்வேறு காலங்களை இந்த கல்லறைகள் கொண்டிருப்பதாக கூறப்படுகிறது.

அதாவது கிழக்கு ஹான் வம்சம், மிங் வம்சம் மற்றும் கிம் வம்சம் ஆகிய மூன்று காலத்துக்கும் உரியவை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

## அமெரிக்காவுடனான தலிபான்களின் அமைதிப் பேச்சுவார்த்தை இரத்து

(டோகா)

அமெரிக்கா உடனான அமைதிப் பேச்சுவார்த்தையை தலிபான்கள் ரத்து செய்துவிட்டதாக தகவல்கள் தெரிவித்துள்ளன.

ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகளுக்கு எதிராக சண்டையிட்டு வரும் அமெரிக்கா, அங்கு அமைதியை ஏற்படுத்தும் விதமாக தலிபான்களுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தது. இதற்கு தலிபான்களும் சம்மதித்தனர். அமெரிக்க அதிகாரிகள் மற்றும் தலிபான்கள் இடையேயான அமைதிப் பேச்சுவார்த்தையை சவுதி அரேபியாவில் நடத்த முடிவு செய்யப்பட்டது.

ஆனால் தலிபான்களோ கட்டார் தலைநகர் டோகாவில்தான் அமைதிப் பேச்சுவார்த்தை நடக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். அமெரிக்கா அதனை ஏற்றுக்கொண்டது.

அதன்படி இருதரப்புக்கும் இடையேயான 2 நாள் பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் தொடங்க இருந்தது.

ஆனால் தலிபான்கள் இதில் பங்கேற்க முடியாது எனக்கூறி அமைதிப் பேச்சுவார்த்தையை இரத்துச் செய்து விட்டனர்.

அமைதிப் பேச்சுவார்த்தை தொடர்பான செயற்திட்டத்தில் தலிபான்களுக்கு உடன்பாடு இல்லாததால் அவர்கள் இந்த முடிவை எடுத்ததாக தகவல்கள் தெரிவித்துள்ளன.

அமைதிப் பேச்சுவார்த்தையில் ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் பங்கேற்க தலிபான்கள் எதிர்ப்பு தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

# பிரதமர் ரணிலை தமிழ்க் கூட்டமைப்பு அரசியல் ரீதியில் சிறைபிடித்துள்ளது

## பவித்ரா எம்.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் ரீதியில் சிறைபிடித்துள்ளது. அதன் காரணமாகவே பிரதமர் புதிய அரசியலமைப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு கூட்டமைப்பினருக்கு ஆதரவு வழங்கி வருகின்றார் என கூட்டு எதிர்க் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராச்சி குற்றம் சாட்டியுள்ளார்.



பொதுஜன பெரமுனவின் வெற்றி கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலே உறுதிப்படுத்தப்பட்டு விட்டது. 2020 ஆம் ஆண்டு ஒன்றிணைந்த எதிரணியினரே ஆட்சிப் பொறுப்பினை ஏற்பார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சி பொதுவேட்பாளர் ஒருவரை வாடகைக்கு வாங்கியே போட்டியிடும் என அவர் மேலும் தெரிவித்தார். பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில்கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## மாகாண சபையே முதலில்

# ஜனாதிபதித் தேர்தலை நடத்த எந்தவித அவசியமும் இல்லை

## ரமேஷ் பத்திரன எம்.பி.கூறுகிறார்



(கொழும்பு)

பாராளுமன்ற தேர்தலை தற்போது நடத்த எந்தவித அவசியமும் கிடையாது. ஜனாதிபதித் தேர்தலையும் இவ்வருடத்தில் நடத்துவதற்கு எவ்வித தேவைகளும் கிடையாது. இரண்டு தேர்தலுக்கும் பதவிக் காலம் காணப்படுகின்றது. ஆகவே முதலில் நடத்தப்பட வேண்டியது மாகாணசபை தேர்தலே தவிர பிற தேர்தல்கள் அல்ல என பாராளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# முதலமைச்சர்களை மீறி ஆளுநர்கள் செயற்பட முடியாது என்கிறார் இசுறு



(கொழும்பு)

முதலமைச்சர்களை மீறி ஆளுநர்களுக்கு செயற்பட முடியாது. இரண்டு பேரும் இணைந்து செயற்பட்டால்தான் மாகாண மக்களுக்கு சேவை செய்ய முடியும் என மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய தெரிவித்தார்.

மேல் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கும் அசாத் சாலியின் கடமையேற்பு நிகழ்வு நேற்று முன்தினம் ஆளுநர் பணிமனையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெவித்தார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு நாங்கள் ஆரம்பத்தில் எதிர்ப்புத் தெரிவித்தாலும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை அவசியம் என்பது உணரப்பட்டிருக்கின்றது.

நாட்டில் இடம்பெற்ற இன, மதவாத பிச்சினைகளின்போது ஜனாதிபதி சுயாதீனமாக செயற்பட்டு, அதற்கு தீர்மானம் எடுக்க முடியுமாக இருப்பது நிறைவேற்று அதிகாரம் இருக்கின்றமையிலாகும்.

மக்கள் விடுதலை முன்னணியே இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றது. மக்கள் விடுதலை முன்னணியால் ஒருபோதும் இந்த நிறைவேற்று ஜனாதிபதி பதவிக்கு வரமுடியாது. அதனால்தான் அவர்கள் எதிர்க்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஐன்ஸ்டீன்

ஒரு சின்னப் பையன். பார்ப்பவர்கள் எல்லாம் அவனை ஒரு "மண்டு" என்றுதான் சொல்லுவார்கள். அப்படித்தான் அவனும் இருந்தான்.

அதுமட்டுமில்லை! அவன் ரொம்ப வெட்கப்படுவான்! மற்றப் பையன்ளோடு சேர்ந்து விளையாடுவதற்கே அவனுக்கு ரொம்ப வெட்கம்! அதனால் அவன் வீட்டில் இருக்கும் கோழிக்குஞ்சுடன் தான் அவன் விளையாடிக்கொண்டிருப்பான்.

அவன் ஒருநாள் ஒரு வண்டியில் ஏறி போயிருக்கிறான். அவர் ரிக்கட்டும் மீதிப் பணமும் கொடுத்தார்... வாங்கி எண்ணிப் பார்க்கிறான்... பணம் குறைவது மாதிரி அவனுக்குப் படுகிறது!

உடனே நடத்துநரிடம் "என்ன சேர் பணம் குறைவாக இருக்கே" என்றான்! நடத்துநர் பணத்தை வாங்கி மறுபடியும் எண்ணிப் பாக்கிறார்! அது சரியாகவே இருக்கிறது! நடத்துநருக்கு எரிச்சல்!

"என்னப்பா இது! சரியாத்தானே இருக்கிறது... உனக்குக் கணக்குத் தெரியாதா என்ன? உன்னோடு பெரிய தொல்லையாகப் போச்சே!" என்று அலுத்துக்கொண்டார். சில்லறைக் காசைச் சரியாகக் கூட்டிப் பார்கத் தெரியாத அந்தச் சின்னப் பையன் பெயர் என்ன தெரியுமா?

ஆல்பர்ட் ஐன்ஸ்டீன். ஆமாம்... அந்தப் பையன் தான் வளர்ந்து கணித மேதையாக ஆனார்! பிற்காலத்தில் அவர் போட்ட கணக்கை உலகமே புரிந்து கொள்வதற்கு ரொம்பக் கஷ்டப்பட்டது. ஆல்பர்ட் ஐன்ஸ்டீனும் ஒரு புதிர்! அவர் கண்டுபிடித்த "ரிலேட்டிவிட்ரி" தத்துவமும் ஒரு புதிர்!

இப்படித்தான் எல்லாரும் சொல்லுவார்கள்! மனித அறிவுக்கு இதுவரைக்கும் எட்டாது இருந்த ஒரு பெரிய தத்துவம். அதை அவர் புரிந்துகொண்டார்! அவர் புரிந்துகொண்ட அளவுக்கு மற்றவர்களையும் புரிய வைப்பதற்கு அவரால் முடியவில்லை!

அதனாலே இந்தத் தத்துத்தைப் பற்றியே இது வரைக்கும் 900 புத்தகங்களுக்கு மேல் வந்திருக்கிறது! எத்தனை புத்தகம் வந்திருக்கிறது என்பது புரிகிறதே தவிர அதில் உள்ளதைப் புரிந்துகொண்டவர்கள் எத்தனை பேர் என்பது இன்னும் தெரியவில்லை!

"திடப்பொருள் எல்லாம் அழிந்து விடும்! ஆனால் அது மாதிரி காலமும் இடமும் அழியாது! நிலைத்து இருக்கும்" இது முன்னால் இருந்த பெரிய விஞ்ஞானிகள் எல்லாம் கண்டுபிடித்துச் சொன்னது!

ஆனால் ஐன்ஸ்டீன் என்ன சொன்னார் தெரியுமா? "திடப் பொருள் எல்லாம் அழிந்து விடும் என்றால் காலமும் இடமும் அழிந்தே தீரவேண்டும்" என்றார்! அதை நிரூபித்தும் காட்டினார்.

ஐன்ஸ்டீன் ஒருமுறை ரயிலில் போகும்போது அவருக்குப் பசி. ஏதாவது சாப்பிட்டால் நல்லது என்று தோன்றியது! அதனால் ரயில்வே சிற்றுண்டிக் கடைக்குப் போய் என்ன இருக்கு சாப்பிடுவதற்கு என்று கேட்டிருக்கிறார்!

அங்கே வேலை செய்துகொண்டிருந்த ஆள் எழுதியிருந்த பட்டியல் ஒன்றை எடுத்து இவரிடம் நீட்டியிருக்கிறான். அதைப் படித்துப் பாக்கலாம் என்று நினைத்து சட்டைப் பையில் கண்ணாடியைத் தேடியிருக்கிறார். கிடைக்கவில்லை. எங்கேயோ தவறவிட்டுவிட்டார். பட்டியலை அந்த வேலை ஆளிடமே கொடுத்து, "இதை நீயே படித்துக்காட்டுப்பா" என்று கேட்டிருக்கிறார்!

அதற்கு அந்த ஆள், "நானும் உங்களை மாதிரித் தான் சேர்! படிக்கத் தெரியாது!" என்றிருக்கிறான். அவருக்கு வந்த சிரிப்பில் பசிகூட மறந்து போய்விட்டதாம். பொதுவாக ஒரே விடயத்தில் ஆழ்ந்த சிந்தனை உள்ளவர்கள் மற்ற விடயத்தில் அதிகமாக அக்கறை காட்டுவதில்லை.

ஐன்ஸ்டீனைப் பற்றி இன்னொரு கதையும் சொல்லுவார்கள். இப்போது... எல்லோரும் குளிப்பதற்கு என்று ஒரு சோப்... சேவிங் செய்வதற்கு என்று ஒரு சோப்... இப்படித் தானே வைத்துக்கொள்வது வழக்கம்... இரண்டும் வெவ்வேறு விதம்!

ஆனால் ஐன்ஸ்டீன் இப்படித் தனித்தனியாக இரண்டு சோப் வைத்திருக்கவில்லையாம்! குளிக்கவும் சேவ் செய்யவும் ஒரே சோப்பைத்தான் உபயோகப் படுத்தினாராம்...

அதை பார்த்து விட்டு மற்றவர்கள் கேட்டிருக்கிறார்கள்! "ஏன் இப்படித் தனித்தனியாக இரண்டு சோப் வைத்துக்கொண்டால் என்ன?" என்று கேட்டிருக்கிறார்கள்! அதற்கு அவர், அப்படி வைத்துக்கொண்டால் என்னை Confuse செய்கிறது என்றாராம்...

இவர் தத்துவம் உலகத்தையே Confuse செய்திருக்கிறது... ஆனால் இவர் எங்கே குழம்பியிருக்கிறார் பார்த்தீர்களா? இவ்வளவு சொல்லிவிட்டு... நான் கடைசியாகச் சொல்லவரும் விடயம் என்ன தெரியுமா? பெரிய மேதைகள் எல்லாம் ஞாபக மறதிக்காறர்களாக இருக்கலாம்... ஆனால்... ஞாபக மறதி இருப்பவர்கள் எல்லாம் மேதைகள் என்று நினைத்துவிடக்கூடாது!

அப்படிப் பார்க்கப்போனால் என்னுடைய நண்பர்களில் பல பேர் மேதைகள்! என்னுடைய நண்பர் ஒருவர்... அவருக்கு ரொம்பவும் ஞாபக மறதி...இதற்காக ஒரு டாக்டரிடம் போனார்!

"டாக்டர்... எனக்கு எதையும் ஞாபகத்தில் வைத்திருக்க முடியவில்லை... கொஞ்ச நேரத்துக்குள்ளே மறந்து போய் விடுகிறேன்... நீங்கள் தான் ஏதாவது மருந்து கொடுத்து இதைச் சரி செய்ய வேண்டும்" என்றிருக்கிறார்!

"சரிங்க! உங்களுக்கு எத்தனை நாளாக இது இருக்கிறது" என்று டாக்டர் கேட்டிருக்கிறார். உடனே இவர் என்ன சொன்னா ர் தெரியுமா? "எது எத்தனை நாளாக இருக்கிறது என்று கேட்கிறீர்கள்?

# புத்தாண்டுப் பலன்கள் -2019



புத்திக்கூர்மையால் சவால்களை சமாளிக்கும் மீன இராசி வாசகர்களே!

பிறக்கப் போகும் புத்தாண்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விதத்தில் அமையப் போகின்றது. வருடத் தொடக்கத்தில் குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது. உங்கள் இராசியில் செவ்வாய் வீற்றிருக்கின்றார். குருவின் அருட்பார்வையால் குருமங்கள யோகம் உண்டாகின்றது. எனவே குடும்பத்தில் ஏராளமான சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்பு உண்டு. மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு பொன் கொழிக்கும் ஆண்டாக உங்களுக்கு அமையும்.

வளைந்து கொடுத்துப் போகும் மாதிபதி சந்திரன் அஷ்டமாதிபதி சுக்கிரன் ஆவார். ஒருசில சமயங்களில் மனக்குழப்பம் அதிகரிக்கும். ஆலோசனைகள் கைகொடுக்கும். இலாபஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கின்றார். எனவே தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். என்றாலும் கூட ஏற்றமும் இறக்கமும் வந்து கொண்டேயிருக்கும். கேது பலத்தால் வெளிநாட்டு யோகம் கைகூடினாலும் அங்கு நிரந்தரமாக வசிக்க முடியாமல் போகலாம்.

தொழில் ஸ்தானத்தில் மூன்று கிரகங்கள் முற்றுகையிட்டு இருக்கின்றன. அவை சனி, சூரியன், புதன் ஆகியவையாகும். இதில் புதனும் சனியும் கொஞ்சம் வலிமையிழந்து இருக்கின்றார்கள். புத ஆதித்ய யோகம் உருவாகும் நிலை உள்ளதால் கல்விக்காக நீங்கள் எடுத்த முயற்சி கைகூடும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு புதிய வாய்ப்புகள் தேடிவரும். பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் அமரும் வாய்ப்பு கிடைக்கும். இந்தப் புத்தாண்டில் 10 இல் குரு வரப் போவதால் பதவி மாற்றங்கள் உண்டு.

### ராகு-கேது பெயர்ச்சிக் காலம்

ஆண்டின் தொடக்கத்தில் கடகத்தில் ராகுவும் மகரத்தில் கேதுவும் சஞ்சரிக்கின்றார்கள். உங்கள் இராசிக்கு 5, 11 ஆகிய இடங்களில் சஞ்சரிக்கும் இந்த பாம்புக் கிரகங்கள் பெப்ரவரி 13 ஆம் ருந்து விலகி வந்து சுயதொழில் செய்யலாமா? என்று சிலர் சிந்திப்பர். அவர்களுக்கும் இது உகந்த நேரமாகும்.

### குருப்பெயர்ச்சிக் காலம்

ஒக்டோபர் 28 ஆம் திகதி குருப்பெயர்ச்சி நிகழவிருக்கின்றது. நவக்கிரகத்தில் சுபக்கிரகம் என்று சொல்லப்படுபவர் குருபகவான். அவர் உங்கள் இராசிநாதனாகவும் 10 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குகின்றார். அப்படிப்பட்ட குருபகவான் தொழில் ஸ்தானம் எனப்படும் 10 ஆம் இடத்திற்கு வருகின்றார். எனவே தொழில் வளர்ச்சி மிகமிகச் சிறப்பாக இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து கொண்டேயிருக்கும். குரு தன் வீட்டில் பலம் பெற்று இருக்கும் இந்த நேரத்தில் அரசு வேலைக்கு முயற்சி செய்தவர்களுக்கு அது கைகூடும்.

தனுசு இராசியில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை 2, 4, 6 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே வாக்கு,




பகைக் கிரகத்தின் பார்வைகள் இருக்கும்பொழுது உறவினர் பகை உருவாகும். அருகில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்வது தான் ஆதாயம் கிடைக்க வழியாக அமையும். கூட்டுத் தொழில் செய்பவர்கள் கூட்டாளிகளால் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும்.

5.6.2019 முதல் 29.6.2019 வரை இக்காலத்தில் திடீர், திடீர் என மாற்றங்களும், ஏற்றங்களும் வந்து சேரும். உங்கள் இராசிநாதன் குருவிற்கு சுக்கிரன் பகைக் கிரகமாகும். அவை இரண்டும் ஒன்றை ஒன்று பார்த்துக்கொள்ளும் பொழுது வியாபாரத்தில் அதிக முதலீடு செய்ய வேண்டாம். ஸ்தலயாத்திரைகளை மேற்கொள்வீர்கள். பெண் பிள்ளைகளின் வாழ்வில் ஏற்பட்ட பிரச்சினை அகலும். சஞ்சலம் தரும் செய்திகள் வந்து கொண்டேயிருக்கும்.

### வளர்ச்சி தரும் வழிபாடு

செவ்வாய் தோறும் விரதமிருந்து துர்க்கையை வழிபட்டு வாருங்கள். பட்டமங்கலம் தட்சிணாமூர்த்தி வழிபாடு உங்கள் வெற்றிக்கு வழிவகுத்துக்கொடுக்கும்.

### சனியின் வக்கிர காலம்

8.5.2019 முதல் 3.9.2019 வரை தனுசு இராசியில் பூராடம் நட்சத்திரக்காலில் சனி வக்கிரம் பெறுகின்றார். இந்த வக்கிர காலத்தை பொறுத்தவரை

## நாலில் ராகு வருகிறது, நல்ல மாற்றம் தெரிகிறது!

ஆற்றல் உங்களுக்கு உண்டு. தாராள மனமும், தயாள குணமும் கொண்டவர்கள் நீங்கள். இரகசியங்களைக் காப்பாற்றும் வல்லமை உங்களுக்கு குறைவாகவே இருக்கும். ஆரோக்கியத்தில் கூட கவனம் செலுத்தாமல் அடுத்தவரின் முன்னேற்றத்திலேயே அதிக அக்கறை காட்டுவீர்கள்.

### புத்தாண்டின் கிரக நிலை

புத்தாண்டின் கிரக நிலைகளைப் பார்க்கும்பொழுது சாதகமான அமைப்பிலேயே இருக்கிறது. வருடத் தொடக்கத்தில் தனாதிபதி செவ்வாய் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கின்றார். அவரை உங்கள் இராசிநாதன் குருபகவான் 9 ஆம் இடத்தில் இருந்து கொண்டு 5 ஆம் பார்வையால் பார்க்கின்றார். எனவே குருமங்கள யோகம் ஏற்படுகின்றது. 10 இல் சனி வீற்றிருந்து தொழிலை வளப்படுத்தப் போகின்றது. மேலும் 10 ஆம் இடத்தில் புதனும் இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகின்றார். எனவே கல்வி முயற்சி கைகூடும். கைநிறையப் பொருள் குவிக்கும் தொழில் அமையும். இதுவரை இருந்த கடன் சுமை தீர்ந்து மன நிம்மதி காண்பீர்கள்.

வருட ஆரம்பத்தில் குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதோடு மட்டுமல்லாமல் 3, 5 ஆகிய இடங்களையும் பார்க்கின்றார். எனவே கூடப்பிறந்தவர்களின் உதவி உங்களுக்கு கூடுதலாகக் கிடைக்கும். பணியாளர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். துணிந்து சில முடிவுகளை எடுத்துக் குடும்ப உறுப்பினர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்துவீர்கள். மக்கள் செல்வங்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை செலுத்துவீர்கள். பூர்வீகச் சொத்துக்களில் பாகப்பிரிவினை சுமுகமாக முடியும்.

அஷ்டமத்தில் சந்திரனோடு சுக்கிரன் இணைந்திருக்கின்றார். பஞ்ச

திகதி பின்னோக்கிச் சென்று 4 ஆம் இடத்தில் ராகுவும் 10 ஆம் இடத்தில் கேதுவுமாக சஞ்சரிக்கப் போகிறார்கள். இதன் விளைவாக அர்த்தாஷ்டம ராகுவின் ஆதிக்கம் உருவாகிறது. 'கேந்திரத்தில் ராகு நின்றால் கேட்டபடி உதவி கிடைக்கும். சேர்ந்தவருக்கும் யோகம் வரும். சிறுமாற்றம் வந்து சேரும்' என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது. அதன்படி பார்க்கும்பொழுது ராகு, புதன் வீட்டில் சஞ்சரிப்பதாலும் கேது குரு வீட்டில் இருப்பதாலும் இந்தப் பெயர்ச்சி இனிய பெயர்ச்சியாக அமையப்போகின்றது.

வீடு, இடம் வாங்கும் யோகம், வேற்று மனிதர்களின் ஒத்துழைப்பு, பாடுபட்டதற்கேற்ற பலன், படிப்பில் நல்ல முன்னேற்றம், தாய்வழி ஆதரவு, தடம் மாறிச்சென்ற உறவினர்கள் தானாக வருதல், விரும்பிய வண்ணம் வீடு மாற்றம், வேலைப்பளு குறைதல், குடும்பத்தில் சுபச்செய்தி வந்து சேருதல், குடியிருக்கும் வீட்டை விலைக்கு வாங்குதல், பாகப்பிரிவினைகளுக்கு ஏற்பாடு செய்தல், பல நல்ல சந்தர்ப்பங்கள் கைகூடுதல் போன்றவைகள் எல்லாம் இந்த ராகுவின் மாற்றத்தால் வரப்போகின்றது. வாகனம் வாங்கி மகிழும் யோகம் உண்டு.

10 ஆம் இடத்தில் கேதுவின் சஞ்சாரம் இருப்பது மிகுந்த நன்மை தரும். இப்பொழுது பெயர்ச்சியாகும் கேதுவால் புதிய பொறுப்புகளும் பதவிகளும் உங்களுக்கு வரலாம். முயற்சிகளில் வெற்றியும் முன்னேற்றமும் கூடும். ஒப்பந்தங்கள் அதிகரிக்கும். ஒரு தொழில் செய்வோர் மறுதொழில் செய்யும் வாய்ப்பும், இரு தொழில் செய்வோர் இடம் மாறிச் செல்லும் சூழ்நிலையும் உருவாகும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இட மாற்றம், ஊர் மாற்றம் தானாகவே வந்து சேரும். நிறைய வேலைப்பளு இருக்கின்றதே, உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கவில்லையே இதிலி

தனம், குடும்பம் என்று வர்ணிக்கப்படும் இரண்டாமிடம் புனிதமடைகின்றது. வாக்கு வளம் கூடும். சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள். கௌரவம், அந்தஸ்து உயரும். குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். குலதெய்வ வழிபாட்டை மேற்கொள்வீர்கள். தனரவு தாராளமாக வந்து சேரும். வீட்டை விரிவு செய்யும் முயற்சி கைகூடும். உத்தியோகத்தில் உயர்பதவி கிடைப்பதற்கான அறிகுறி தென்படும். உடல் ஆரோக்கியம் சீராகும்.

### குருவின் அதிசாரமும் வக்கிரமும்

ஆண்டின் தொடக்கத்தில் விருச்சிகத்தில் சஞ்சரிக்கும் குரு அதிசாரமாக மார்ச் 13 ஆம் திகதி தனுசு இராசிக்குச் செல்கின்றார். இடையில் வக்கிரமாகவும் இருக்கின்றார். எனவே குரு வலிமை இழந்து இருக்கும் இந்த நேரத்தில் கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. கூட்டாளிகள் நம்பிக் கைக்குரியவிதம் நடந்து கொள்வர். மனக்கலக்கம்அதிகரிக்கும். சேமிப்பு கரையும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் வெறுப்பிற்கு ஆளாக நேரிடும். வாங்கிய சொத்துக்களில் வில்லங்கங்களும், விவகாரங்களும் அதிகரிக்கும். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகமாக இருப்பதால் பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது. குரு பீடங்களுக்குச் சென்று குருவை வழிபட்டு வருவது நல்லது.

### கவனமுடன் செயல்பட வேண்டிய காலம்

7.5.2019 முதல் 24.6.2019 வரை மிதுனச் செவ்வாயை தனுசு சனி பார்க்கின்றது. இக்காலத்தில் குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்படும். கடமையாக முயற்சித்தால் கூட காரியங்கள் கைகூடுவது அரிது. கூலித் தொழிலில் இருந்து சுயதொழிலுக்கு மாறியவர்கள் தொழிலை விரிவு செய்ய முடியாமல் தடுமாற்றம் காண்பர்.

கொஞ்சம் கவனமுடன் இருக்க வேண்டிய நேரமாகக் கருத வேண்டும். உங்கள் இராசிக்கு 11, 12இற்கு அதிபதியானவர் சனிபகவான். விரயாதிபதி வக்கிரம் பெறுவது நன்மைதான் என்றாலும் இலாபாதிபதியாகவும் சனி இருப்பதால் தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்காது. ஆரோக்கியத் தொல்லை அகல மாற்று மருத்துவத்தை செய்வது நல்லது. உத்தியோகத்தில் நெருக்கடிகள் அதிகரிக்கும்.


### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

மீன இராசியில் பிறந்த பெண்களுக்கு வருடத்தில் தொடக்கம் வளர்ச்சியாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கும். முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கருத்து வேறுபாடுகள் மாறும். கடமையில் ஏற்பட்ட தொய்வு அகலும். பற்றாக்குறை மாறி பணவரவு திருப்தி தரும். குருமங்கள யோகத்தால் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். வீடு கட்டும் முயற்சி வெற்றி தரும். கணவன்-மனைவிக்குள் அந்நியோன்யமும், அன்பும் அதிகரிக்கும். பிள்ளைகளின் கனவுகளை நனவாக்குவீர்கள். பிள்ளைகளால் பெருமையும் வந்து சேரும். தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. உடன்பிறப்புகளின் இல்ல விழாக்களுக்கு ஒரு தொகை கொடுத்து உதவுவீர்கள். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு உத்தியோகத்திலும், பதவியிலும் சில பிரச்சினைகள் உருவாகி, மறையும். பணிபுரியும் பெண்கள் திடீர் என பதவி மாற்றம் காண்பர். நீண்ட தூரத்திற்கான மாறுதல் கிடைத்து மனக்கவலை அதிகரிக்கும். சிலருக்கு வி.ஆர்.எஸ். பெறும் வாய்ப்பு உண்டு. குலதெய்வ வழிபாடு, குரு தட்சிணாமூர்த்தி வழிபாடு, ராகு-கேது பிரீதியும் இனிய வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கும்.

ஜோதிடக் கலாமணி
- சிவல்புரி சிங்காரம் -

# இரணைமடு குளத்தால் வெள்ள அனர்த்தம்! உரிய விசாரணை முன்னெடுக்க வேண்டும்

## நாடாளுமன்றில் டக்ளஸ் எம்.பி.வலியுறுத்து



(கொழும்பு)

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 22 ஆம் திகதி கிளிநொச்சியில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் தொடர்பாக சில விடயங்களை, குறிப்பாக இவ் அனர்த்தம் ஏற்பட்டதற்குரிய காரணி மற்றும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக இச்சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

குறுகிய நேரத்தில் ஏற்பட்ட பெருமழையே இதற்கு காரணம் எனக் கூறி பொறுப்பு வாய்ந்த சில அதிகாரிகள் தப்பித்துக் கொள்ள முயல்கின்றனர். ஆனால், உண்மை நிலை அதுவல்ல என்றே தெரிய வருகின்றது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரசாயன ஆயுதங்கள் சமவாயம் தொடர்பான திருத்தச் சட்ட மூலம் தொடர்பான விவாதத்தில்கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், இரணைமடுக்குளம் 36 அடி வரை நீரை தேக்கக் கூடியதாக, அதாவது ஒரு இலட்சத்து இருபதாயிரம் ஏக்கர் அடி நீரைத் தேக்கி நிற்கக் கூடிய முறையில் புனரமைக்கப்பட்டு, கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் திறந்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதியால் வான் கதவுகள் திறக்கப்பட்ட அன்றைய தினமே இரணைமடுக்குளம் முழுமையாக நிரம்பிய நிலையிலேயே இருந்துள்ளது. அன்று வான் பாய்ந்தபின் வான் கதவுகள் மீண்டும் பழைய நிலைக்கு கொண்டுவரப்பட்டதாக அறிகின்றேன். இதன்போது சுமார் 9 அங்குலத்திலிருந்து ஒரு அடி வரையிலான நீர் படிப்படியாக வெளியேற்றப்பட்டுள்ளது எனத் தெரிய வருகின்றது.

இந்நிலையில், அன்றிலிருந்து 21 ஆம் திகதி மாலைவரை பெய்த மழை வீழ்ச்சி காரணமாக மீண்டும் குளத்தின் நீர்மட்டம் அதன் உச்ச எல்லையாகிய 36 அடியை அண்மித்திருந்துள்ளது என்றும்,

இதனைத் தொடர்ந்து 21 ஆம் திகதி இரவு குறுகிய நேரத்தில் பெய்த கனமழை காரணமாக குளத்தின் நீர் மட்டம் 40 அடியைத் தாண்டி உயர்ந்து, அணையையும் மேவி வழிந்தோடிக் கொண்டிருந்தது என்றும் தெரிய வருகின்றது.

அதன்பின் விழித்தெழுந்த அதிகாரிகள் அதிகாலை அளவில் அவசர அவசரமாக வான் கதவுகளை திறக்க முற்பட்டபோது அதிக நீர் நிரம்பியதன் அமுக்கம் காரணமாக மின்னியக்கியின் மூலமான வான் கதவுகள் இயங்க மறுத்துள்ளன.

இதனால் கைகளினால் அவற்றை திறந்துள்ளனர். சரியான முறையில் நீர் முகாமைத்துவம் செய்யப்படாது, அதாவது குறுகிய இடைவேளையில் வான் கதவுகளை படிப்படியாக திறந்து முகாமைத்துவம் செய்யப்படாமல் திடீரென, ஒரே நேரத்தில் வான் கதவுகள் திறந்ததன் விளைவால் பெருமளவான நீர் குறுகிய நேரத்தில் அதிவேகத்துடன் வான் பாய்ந்துள்ளது. இங்கு அவதானிக்க வேண்டியது என்னவெனில்,

இரணைமடுக் குளத்திற்கு பொறுப்பான அதிகாரிகள் ஜனாதிபதியால் இரணைமடுக்குளம் திறந்து வைக்கப்பட்ட பின்பு, அதாவது டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதியிலிருந்து, நீரின் மட்டத்தை சரியாக முகாமைத்துவம் செய்திருந்தால் இவ்வாறான பேரழிவை தடுத்திருக்கலாம்.

அழிவுகளின் பின் கிளிநொச்சி அரச அதிபரால் தயாரிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் கிளிநெச்சியில் மழை வெள்ளத்தினால் ஏற்பட்ட அனர்த்தத்திலும் பார்க்க வான் வேகமாகப் பாய்ந்ததனால் ஏற்பட்ட அனர்த்தமே அதிகமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சியைச் சேர்ந்த ஒரு தமிழ் அரசியல்வாதி குளத்தின் நீர் முகாமைத்துவத்தில் தலையிட்டு, தனது குறுகிய நோக்கம் கருதி வான் கதவுகளை திறந்துவிடவேண்டாம் என அழுத்தம் கொடுத்ததாக கதைகள் வெளியாகி வருகின்றன.

அரசாங்கம், அதுகால வரை 82 ஆயிரம் ஏக்கர் அடி நீர் சேகரித்துக்கொண்டிருந்த இரணைமடுக் குளத்தை, ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் ஒரு இலட்சத்து இருபதாயிரம் ஏக்கர் அடி நீரைச் சேகரிக்கும் நிலைக்கு கொண்டு வந்து, குறிப்பிட்ட ஒரு இலட்சத்து இருபதாயிரம் ஏக்கர் அடி நீர் சேகரிக்கப்பட்டதன் பின்னர் அதில் வெறும் 8 ஆயிரத்து 100 ஏக்கர் அடி நீரை வருடத்திற்கு யாழ்ப்பாணத்துக்கு குடிநீராக வழங்க இருந்த புனரமைப்பு திட்டத்தையும் இதே அரசியல்வாதி தான் வடக்கு மாகாணசபையுடன் இணைந்து நிறுத்திய பெருமைக்குரியவர்.

கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலையே இரணைமடுக்குளம் நிரம்பிய நிலையில் இருந்தும், தொடர்ந்தும் மழை பெய்து கொண்டிருந்த நிலையில் அதன் விளைவாக எந்நேரத்திலும் வான் கதவுகள் திறக்க வேண்டியிருந்தும் வான் பாயும் பகுதிகளில் வாழும் மக்களுக்கு முன்னெச்சரிக்கையினை கொடுக்கும்படியான அறிவித்தல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு குளத்தின் முகாமைத்துவத்திற்கு பொறுப்பானவர்கள் கொடுத்ததற்கான எவ்வித சான்றுகளும் இல்லை என்றே கூறப்படுகின்றது.

இதன் விளைவாகவே பலர் பாரியளவில் தமது உடைமைகள், ஆவணங்கள் மற்றும் கால்நடைகளையும் இழக்க நேரிட்டுள்ளது. ஒரு தனிநபர் மட்டும் 45 மாடுகளை இழந்ததாக அறிய வருகின்றது.

அதுமட்டுமல்ல, குளத்தின் நீர் நிர்வாகத்திற்கு பொறுப்பானர்கள் 21 ஆம் திகதி மாலை இரணைமடுக் குளமும் அதற்கு நீர் வழங்கும் ஏனைய குளங்களும் நிரம்பிய நிலையில், தொடர் மழை பெய்துகொண்டிருந்தும் அவசியமேற்பட்டால் வான் கதவுகளை திறக்க வேண்டிய முன்னேற்பாடுகள் எதனையும் மேற்கொள்ளாதிருந்ததன் விளைவே நீர்மட்டம் ஏறத்தாழ 40 அடி வரை சென்ற நிலையில் வான் கதவுகளை அதிகாலை அவசர அவசரமாக அதுவும் மின்சார வான் கதவுகள் அதிக நீர் கொள்ளளவினால் செயலிழந்த பின் கையினால் திறக்க நேரிட்டது.

குள நிர்வாகத்திற்கு பொறுப்பான உயர் அதிகாரிகள் எவரும் 22 ஆம் திகதி காலைவரை சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என அறிகின்றேன்.

இது தொடர்பாக பூரண விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என பிரதமர் கிளிநொச்சிக்கு வந்திருந்த போது நான் கேட்டிருந்தேன். அதற்கு அங்கு பிரசன்னமாகியிருந்த அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் இணக்கம் தெரிவித்திருந்தார்.

அத்துடன் அன்றைய கூட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணமாக ரூபா 10 ஆயிரம் வழங்குவதற்கு முடிவெடுக்கப்பட்ட போது அதனை ரூபா 25 ஆயிரமாக அதிகரிக்க வேண்டுமென கேட்டுக்கொண்டிருந்தேன். அதே கோரிக்கையினை மீண்டும் நான் இங்கு வலியுறுத்துகின் றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 'தமிழ் மாகாணத்திற்கு தமிழ் ஆளுநர் நியமனம் வரவேற்கத்தக்க அம்சம்'



(கரணவாய்)

சிவில் சமூக அமைப்புடன் இணைந்து முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட் கூரே வட மாகாண அபிவிருத்திற்காக முன்னெடுத்த அனைத்துத் திட்டங்களையும் புதிய ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் இணைந்து முன்னெடுக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் அதேவேளை தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை சரியாக விளங்கி தமிழ் மொழியில் செயற்படப் பொருத்தான ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குநர் கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஆளுநர்களை விலகிக் கொள்ளுமாறு விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் ரெஜினோல்ட் கூரே தம் பதவி இராஜினமா கடிதத்தை வழங்கினாலும் மீண்டும் வட மாகாணத்திற்கான ஆளுநர் பதவியை அவருக்கே வழங்க வேண்டும். அவர் வட மாகாண அபிவிருத்திக்காக பொறுப்புணர்வுடனும் துரிதமாகவும் செயற்பட்டவரென சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் உயர் பீட உறுப்பினர்களின் ஆலோசனைப் பிரகாரம் நாங்கள் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை கையளித்தது உண்மை தான். ஆனால் நாங்கள் காலையில் மகஜர் கையளிக்கின்றோம். மாலையில் புதிய ஆளுநர் நியமனம் நடைபெறுகின்றது.

உண்மையிலே பொருத்தப்பாடு இல்லாத ஒருவர் புதிய ஆளுநராக நியமிக்கப்படலாம் என்கின்ற அச்சம் இருந்தது.

ஏனென்றால் நாங்கள் சிவில் சமூக அமைப்பாக இருந்து செயற்படும் சிவன் அறக்கட்டளை உயர்பீடம் முன்னாள் ஆளுநரிடம் வட மாகாண கல்வி, சமூக, பொருளாதாரம் ஆகிய அபிவிருத்தி தொடர்பான விடயங்களையும் ஆலோசனைகளையும் முன்வைத்திருந்தோம். அதில் சிலவற்றை உள்வாங்கி அதனை முன்னெடுப்பதற்கு பங்களிப்பும் ஒத்துழைப்பும் நல்லாதரவும் அவர் வழங்கியவர். வட மாகாண கல்வி, சமூக, பொருளாதார மேம்பாட்டை அது தடைப்படாமல் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்கின்ற அவா எங்கள் மத்தியில் இருந்தது.

சமூகப் பற்றுறுதியுடன் செயற்படும் எந்தவொரு நபராக இருந்தாலும் தம் பிரதேசமக்களுக்காக சமூக நலன் சார்ந்து முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் யாவும் தடைப்பட்டுப் போய் விடுமோ என்ற ஐயம் எழாமல் இருக்க முடியாது. இப்படி சமூக நலன் சார்ந்து சிந்திப்பவர்கள் வேறு வகையில் சிந்திக்க மாட்டார்கள் என்று என்னால் அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட முடியும். எங்களுடைய தமிழ் சமூகத்தின் நலன் கருதியே செயற்பட்டோம். இதிலே மூடி மறைப்பதற்கு ஒன்றும் இல்லை.

நாங்கள் கடந்த காலங்களில் எவ்வகையிலான திட்டங்களை நோக்கி செயற்பட்டோமோ அத்தகைய வேலைத் திட்டங்களையும் பதிய ஆளுநருடன் சந்திப்பை ஏற்படுத்தி செயற்படவுள்ளோம். ஒன்று இல்லாமற் போகும் போது அதனை இன்னொன்று மூலம் ஈடு செய்யும் உபாயங்கள் தான் தம் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு சிறந்த உபாயம் என்பதை நிரூப்பிக்கின்ற வகையில் நாங்கள் செயற்படப் போகின்றோம்.

ஆகவே புதிய ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் சிவில் சமூக அமைப்புக்களின் ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் உள்வாங்கிக் கொண்டு அதற்கேற்ப செயலாற்றும் விடயங்கள் கணிசமானளவு உள்ளன. தமிழ் மாகாணத்திற்கு தமிழ் ஆளுநர் ஒருவர் நியமித்தமை என்பது வரவேற்கத்தக்க அம்சமாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கலாபூஷணம் விருது வழங்கல்

(கொழும்பு)

கலைத்துறையில் சிறந்த பணியாற்றும் கலைஞர்களுக்கு வருடந்தோறும் கலாபூஷணம் என்னும் அரச விருது வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், முஸ்லிம் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் என்பவற்றால்2018 ஆம்ஆண்டுக்கான கலாபூஷணம் விருது வழங்கும் வைபவம் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு தாமரைத்தடாக மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்து. இருப்பினும் தவிர்க்க முடியாத காரணத்தால் அந்நிகழ்வு பிற்போடப்பட்டிருந்தது.

மேற்படி நிகழ்வானது எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு தாமரைக் தடாக மண்டபத்தில் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பான கடிதங்கள் விருது பெறும் கலைஞர்களுக்குத் திணைக்களத்தால் தனித்தனியே அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்விடயம் தொடர்பாக மேலதிக விபரங்களைப் பெற விரும்பும் கலைஞர்கள் 011 255 2641 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பணிப்பாளர் உமாமகேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ)

# நியமிக்கப்பட்ட ஆளுநர்களில் இருவரின் பதவியில் மாற்றம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்ட 9 மாகாண ஆளுநர்களில் இருவரின் பதவியில் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

அந்தவகையில் ஊவா மாகாணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்ட கீர்த்தி தென்னக்கோன்தென்மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேராவின் தந்தையான மார்ஷல் பெரேரா ஊவா மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மூன்று மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்கள் கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்ட வேளை ஊவா மாகாணத்தின் ஆளுநராக கீர்த்தி தென்னக்கோன் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

142



> கிறிஸ்தவ மிஷனரிமாரின் முயற்சிகளினாலேயே தமிழ்ப் பிரதேசங்களில் தமிழர் பெரும்பாலும் கல்வி கற்றனர். யாழ்ப் பாண வெஸ்லியன் மிஷனைச் சேர்ந்த ஜேம்ஸ் லிஞ்சின் (James Lynch) கருத்தானது பாடசாலைகள் ஆலயச் சபைகளை நிறுவ உதவும் என்பதாகும். எல்லா மிஷன்களுமே உள்ளூர் மக்களை வெற்றிகரமான முறையில் மதம் மாற்றுவதற் குக் கல்வி அத்தியாவசியம் எனக் கருதியபோதும் இத்துறையிலிருந்தவர்களின் அனுபவம் கிறிஸ்தவத்தைப் பரப்புவதற்கு கல்வி இன்றியமையாதது என்பதை வலியுறுத்தியது

ஆயினும் அது உண்மையெனத் தெரிந்ததும் பெயரளவில் மட்டுமே கிறிஸ்தவர்களாக இருந்தவர்கள் பெரு வெள்ளம்போல் யாவற்றையும் தழுவி நிற்கும் விக்கிரக வழிபாட்டில் ஈடுபட்டு கோவில் கட்டுவதிலும் அதை அலங்கரிப்பதிலும் முன்னெப்போதுமே இந்த மாகாணத்தில் இல்லாதவாறு செயற்பட்டனர். இது இப்போதும் வெவ்வேறு முன்னேற்ற நிலைகளில் காணப்படுகின்றது. நாம் 1816 இல் வந்தபோது இவ்வாறுதான் நிலைமைகள் இருந்தன.

அரசாட்ணத்தின் விளக்கமும் அமெரிக்கன் சிலோன் மிஷன் போதகரின் அறிக்கையும் டச்சுக்காரர் ஆட்சியில் தமிழர் புரட்டஸ்தாந்துக் கிறிஸ்தவத்தைத் தழுவியது ஒரு மேலோட்டமான சங்கதியாக இருந்தது எனச் சொல்கின்றன.

மேலும் பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக்காலத்தில் தமிழ்ச் சமுதாயத்திலிருந்த ஒல்லாந்த சீர்திருத்தமடைந்த திருச்சபையும் அப்போது காணப்பட்ட சைவசமய மறுமலர்ச்சியும் மதம் பரப்புவதில் டச்சுக்காரரின் பெருந் தோல்வியை விளக்குகின்றன.

இதைத் தொடர்ந்த காலத்தில் குறிப்பிடும்படியான அளவுகளில் மதமாற்றத்தைப் புரட்டஸ்தாந்து மிஷன்களால் ஏற்படுத்த முடியாமையை இது ஓரளவு விளக்கக்கூடும்.

பிரித் தானிய ஆட்சியில் கிறிஸ்தவ மதமாற்றம் கட்டாயமில்லாதிருந்தமையே இந்து சமயம் தீபகற்பத்தில் மிகவும் தலையெடுக்கக் காரணமாக இருந்தது என்பதுடன் முன்னுரிமைகளையோ பதவிகளையோ அடைவதற்குக் கிறிஸ்தவ மதம் ஒரு முற்தேவையாகவும் இருக்கவில்லை.

கிறிஸ்தவம் அல்லாத நம்பிக்கைகளைப் பின்பற்றவும் அனுஷ்டிக்கவும் எவ்விதத் தடைகளும் இடப்படவில்லை என்பதுடன் யாவரும் தத்தம் மதங்களை தண்டனைக்குப் பயமின்றிப் பின்பற்றக்கூடிய சுதந்திரம் இருந்தது.

இந்நிலை உள்ளூர் மதங்களும் பாரம்பரியங்களும் மறுபடியும் மலர வழிசெய்யவே இந்த மதங்கள் பெரும் சமூக சக்திகளாகவும் மாறின.

பிரித்தானியர் ஆட்சியின் கீழ் இந்த மறுமலர்ச்சி நிகழக்கூடியதாகவிருந்தது முக்கியமாகும். ஏனெனில் யாழ்ப்பாண உள்ளூர் பாரம்பரியமும் மத சுதந்திரத்தை அனுமதித்த பிரித்தானிய அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த மிஷனரி முயற்சிகளும் வெளிவாரியான சவால்களுக்கும் செல்வாக்குகளுக்கும் உள்ளானபோது இரண்டுமே இணைந்து தொடர்ந்த விளைவுகளுக்குக் கூட்டுக் காரணங்களாகின.

## பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக்காலமும் தமிழரும் (கி.பி. 1796-கி.பி. 1850)

### தமிழரின் கல்வி

இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த தமிழரின் மத்தியில் இங்கிலாந்து, அமெரிக்க புரட்டஸ்தாந்து மிஷனரி இயக்கங்களினது செயற்பாடுகள் தமிழரை மத்திய காலத்திலிருந்து நவீன காலத்திற்கு இட்டுச் செல்லும் வகையிலான மாற்றங்களை ஆரம்பித்து வைத்தன.

புரட்டஸ்தாந்து மிஷனரிமார் இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்களுக்கு வந்தபோது நியாயபூர்வமானதும் விஞ்ஞான ரீதியிலான சிந்தனைகளையும் உடையவர்களாகவே இருந்தனர். உள்ளூர் மக்களில் அதன் தாக்கம் அளப்பரியதாக இருந்தது.

தமிழர் தமது உள்ளூர்ச் சூழலில் தமது பாரம்பரிய மதம், ஓலைச்சுவடிகளிலிருந்த எழுத்தாக்கங்கள் என்பனவற்றின் துணையுடன் அவற்றின் அடிப்படை விதிகளையும் பழங்கதைகளையும் மனப்பாடம் செய்தே தமது கல்வியைப் பெற்றிருந்தனர்.

இருந்தபோதிலும் எழுத்தை அடிப்படையாகக்கொண்ட வகுப்பறைகள் உள்ள கல்வியமைப்புக்கு அவர்கள் தம்மை இலகுவாகப் பழக்கப்படுத்திக் கொண்டனர். தமிழர் நவீன பகுப்பாய்வு முறையில் அமைந்த பாடங்களான புவியியல், வரலாறு, தூயகணிதம், மொழி, வானசாஸ்திரம், அட்சரகணிதம் என்பவற்றுடன் மருத்துவத் துறையையும் கூடக் கற்க ஆரம்பித்தனர்.

இது அவர்களுடைய கல்வியை மேம்படுத்தியதோடல்லாது நவீன உலகில் முன்னேறுவதற்கு அவர்களை ஆயத்தப்படுத்தியதுடன் அவர்கள் தம்மைப் பற்றிச் சிந்திப்பதற்கும் தமது திறமைகளை உணர்வதற்குமான பலத்தையும் துணிவையும் அளித்தது.

எந்தச் செயற்பாடுகள் சுதேசிகளைக் கிறிஸ்தவத்திற்கு மாற்றுவதற்காக முன்வைக்கப்பட்டனவோ அந்தச் செயற்பாடுகளே பிரித்தானிய ஆட்சி நிறுவப்பட்ட கையுடன் உள்ளூர் சைவப்பாரம்பரியத்தை மறுபடியும் மலர வைத்தன.

நாம் ஏற்கனவே கூறியவாறு கிறிஸ்தவ மிஷனரிமாரின் முயற்சிகளினாலேயே தமிழ்ப் பிரதேசங்களில் தமிழர் பெரும்பாலும் கல்வி கற்றனர். யாழ்ப்பாண வெஸ்லியன் மிஷனைச் சேர்ந்த ஜேம்ஸ் லிஞ்சின் (James Lynch) கருத்தானது பாடசாலைகள் ஆலயச் சபைகளை நிறுவ உதவும் என்பதாகும்.

எல்லா மிஷன்களுமே உள்ளூர் மக்களை வெற்றிகரமான முறையில் மதம் மாற்றுவதற்குக் கல்வி அத்தியாவசியம் எனக் கருதியபோதும் இத்துறையிலிருந்தவர்களின் அனுபவம் கிறிஸ்தவத்தைப் பரப்புவதற்கு கல்வி இன்றியமையாதது என்பதை வலியுறுத்தியது.

மிஷன்கள் யாவுமே விரைவில் முனைப்புடன் பாடசாலைகளை நிறுவ ஆரம்பித்தன. மத நோக்கங்களை அடைவதற்குக் கல்வி முய ற்சிகளே அதி முக்கியமெனக் காணப்பட்டதற்கு இது தெளிவான சான்றாகும்.

இச்செயற் பாடுகள் தமிழரில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி அவர்களைத் தமது பாரம்பரிய நம்பிக்கைகளையும் விழுமியங்களையும் மீள் மதிப்பீடு செய்யத் தூண்டின. இந்த வேளையில்தான் தமிழர் தமது மதப் பாரம்பரியத்தைப் பேண முன்வந்தனர்.

(தொடரும்)

# புகையிலைசார் உற்பத்திப்பொருட்களை தடை செய்தால் வழக்குத் தொடர்வோம்

## பிரதேச சபைக்கு கம்பனி எச்சரிக்கை

(சாவகச்சேரி )

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் புகைத்தல் மற்றும் புகையிலை சார் உற்பத்தி பொருட்களை தடை செய்தால் பிரதேசசபை மீது வழக்கு தொடருவோம் என புகையிலை சார் உற்பத்தி கம்பனி ஊடாக எச்சரிக்கை பத்திரிகை ஒன்று தமக்கு கிடைக்கப்பெற்றிருப்பதாக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்துள்ளார்.

பிரதேச சபையில் இடம் பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவர் "சாவகச்சேரி பிரதேசசபையின் மாட்டிறைச்சிக் கடையை மூடுவது தொடர்பில் உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட பிரேரணையை ஏற்காமைக்கு காரணம் என்ன? என கேள்வி எழுப்பிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதேசசபைகள் சட்டத்தின் அடிப்படையில் இயங்கி வருகின்றன. இவற்றுக்கு மத்திய அரசு ஒரு சட்டத்தை கொண்டு வர வேண்டும்.

ஏனைய சில சபைகளில் மாட்டிறைச்சிக் கடையை தடை செய்ய வேண்டும் என்ற பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், எமது சாவகச்சேரி பிரதேசசபையில் அந்த பிரேரணை தோற்கடிக்கப்பட்டுள்ளது. எமக்கு தனிமனித ரீதியாக மாட்டிறைச்சிக்கடையை மூட உடன்பாடு உள்ளது.

இருப்பினும் நாம் பசுவினைக் கொல்ல ஒருபோதும் அனுமதிப்பதில்லை. 24 மணி நேரம் காட்சிப்படுத்தப்பட்டு பொதுச்சுகாதாரப் பரிசோதகர் முன்னிலையில் வெட்டப்படும் ஆரோக்கியமான காளை மாடுகளே சாவகச்சேரி பிரதேசசபையின் மாட்டிறைச்சிக் கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றன.

இலங்கையில் உள்ள பொதுச்சட்டம் மாட்டிறைச்சி உண்பதைத் தடை செய்யவில்லை. இவை சமயம் சார்ந்த சம்பிரதாயமாகவே உள்ளன.

சாதாரண கஷ்ட நிலையில் உள்ள குடும்பங்களும் வேண்டக்கூடியதாகவுள்ள ஒரே இறைச்சி மாட்டிறைச்சி மாத்திரமே. நாவற்குழிப் பகுதியில் மாட்டிறைச்சிக் கடை ஒன்றைத் திறக்குமாறு எமக்கு பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

மாட்டிறைச்சிக் கடையை தடை செய்வதாயின் எமக்கு சட்டம் மற்றும் வருமானம் ஆகிய இரு பிரச்சினைகள் உள்ளன.

கணக்கீடு சம்பந்தமாக விளக்கமளிக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்படலாம். சாவகச்சேரி பிரதேசசபையில் அண்மையில் புகைத்தல் மற்றும் புகையிலை சார் உற்பத்திகளை தடை செய்வது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

குறித்த தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டு புகையிலை சார் உற்பத்தி பாவனைக்கு தடை விதித்தால் எம் மீது வழக்கு தொடரப்படும் என கம்பனி ஊடாக எமக்கு பத்திரிகை அனுப்பப்பட்டுள்ளது. பொதுச் சட்டங்களுக்கு கட்டுப்பட வேண்டிய அவசியம் இல்லை. இருப்பினும் மக்கள் நலன் சார்ந்தே சிந்திக்கிறோம்.

அத்துடன்சிலவிடயங்களை உடனடியாக நடைமுறைப்படுத்தவும் முடியாது. மெதுமெதுவாகத்தான் சிலவற்றை செய்ய முடியும் என மேலும் அவர் தெரிவித்தார். (இ-30)

# புதிய பேருந்து நிலையம் முன்பாக சகல அனுமதியுடனும் மதுபான நிலையம் அமைப்பு

## வவுனியா உதவி மதுவரி பொறுப்பதிகாரி தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

வவுனியா புதிய பேருந்து நிலையத்திற்கு முன்பாக அமைக்கப்பட்ட மதுபான விற்பனை நிலையம் ஏற்கனவே இயங்கிக் கொண்டிருந்த மதுபான விற்பனை நிலையம் மீள புதுப்பிக்கப்பட்டு கிராம சேவையாளர் உட்பட அனைவரின் அனுமதியுடனும் நகரசபை பொதுச் சுகாதாரப்பரிசோதகரின் பரிசோதனையின் பின்னரே திறந்து வைக்கப் பட்டுள்ளதாக வவுனியா உதவி மதுவரி பொறுப்பதிகாரி எஸ். அசோக திலகரட்ன தெரிவித்துள்ளார்.

வவுனியா புதிய பேருந்து நிலையத்திற்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள மதுபான விற்பனை நிலையம் தொடர்பாக அவரிடம் வினவிய போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு அருகில் கண்டி வீதியில் முதலாம் மாடியில் கடந்த 15 தொடக்கம் 20வருடமாக இயங்கி வந்த மதுபான நிலையம் தற்போது மீள புதுப்பிக்கப்பட்டு புதிய பேருந்து நிலையத்திற்கு முன்பாக முதலாவது மாடிக்கு மாற்றப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மதுபான விற்பனை நிலையத்தினை அப்பகுதியில் அமைப்பதற்குரிய அனைத்து சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் வியாபார நிலையத்தின் உரிமையாளரின் சம்மதக் கடிதம், வியாபார நிலையத்தின் வரைபடம், வியாபார நிலையத்தின் ஒப்பந்தக் கடிதம், பொலிஸ் நிலையத்தின் கடிதம், நகரசபையின் அனுமதி, பிரதேச செயலகம், மாவட்ட செயலகம் அனைத்துக்கடிதங்களும் எமக்கு கிடைத்த பின்னரே நாங்கள் ஒரு குழுவினரை அப்பகுதிக்கு அனுப்பி எமது விசாரணைகளின் பின்னரே எமது அனுமதியை வழங்கி வருகின்றோம்.

எனவே இந்த மதுபான விற்பனை நிலையம் சட்ட விரோதமானதோ அல்லது சட்டத்திற்கு எதிராகவோ அனுமதியளிக்கப்படவில்லை. தற்போது சிலரிடமிருந்து எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எனவே இதனையும் எமது குழுவினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். ஒரு மதுபான நிலையம் அமைப்பதற்கு எவ்வாறு அனுமதிக்கப்பட வேண்டும் என்ற சட்டத்திற்கு அமைவாக அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்விடயத்தில் எவ்வித சட்டத்திற்குப்புறம்பான நடவடிக்கைகளும் இடம்பெற்றிருக்கவில்லை. இப்பகுதியில் மதுபானம் விற்பனை செய்யப்படுவதற்கு மட்டுமே அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியிலிருந்து மது அருந்தினால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மேலும் தெரிவித்துள்ளார். (2-281)

# சு.க.பொதுச் செயலர் தயாசிறி பணிகளை நேற்று ஆரம்பித்தார்

## நேரில் சென்று வாழ்த்திய மைத்திரி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் புதியபொதுச்செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர நேற்று முற்பகல் தனதுபணிகளை ஆரம்பித்தார்.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் மகா சங்கத்தினரின் பிரித் பாராயணத்துடன் இந்நிகழ்வு இடம் பெற்றது. இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிதலைமையகத்திற்கு சென்ற அக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த நிகழ்வில் பங்கேற்றதுடன், புதிய பொதுச்செயலாளருக்கு தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார். (இ-7)



# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1612


### காயல்

புனிதமான உறவுக்கு விளக்கங்கள் தேவையில்லை... அன்பு ஒன்றே ஆதாரம்




### நிதுசா

வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது பிறரை மகிழ வைப்பதில் தான் இருக்கிறது



### அமுதா

தேவையற்ற பேச்சு உன் வளர்ச்சியைத் தடுக்கும்




### சைந்தவி

பயந்தவன் கை தட்டுகிறான் துணிந்தவன் கைதட்டு பெறுகிறான்



### கவின்

நண்பனாக இருங்கள், முடியவில்லை என்றால் எதிரியாக இருங்கள், துரோகியாக மட்டும் மாறாதீர்கள்



### விதுசா

பார்த்துக்கொண்டிருக்கும் உறவை விட காத்துக்கொண்டிருக்கும் உறவுக்குத்தான் பாசம் அதிகம்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# விபத்தில் மூளைச் சாவடையும் நோயாளிகளின் உடல் உறுப்புக்களை வேறு நோயாளிகளுக்கு பொருத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து



(கொழும்பு)

திடீர் விபத்துக்களின் போது மூளைச் சாவடையும் நோயாளிகளின் சிறுநீரகம் உள்ளிட்ட உடல் உறுப்புக்களை வேறு நோயாளிகளுக்கு பொருத்துவதற்கான செயற்றிட்டம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டது.

சுகாதாரம், போஷனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சுக்கும் இலங்கை விமானப் படைக்குமிடையில் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதுடன், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் சுகாதாரம், போஷனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளர் திருமதி வசந்தா பெரேரா ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

சிறுநீரக நோய்க்கான இறுதிச் சிகிச்சையாக தற்போது கண்டறியப்பட்டிருப்பது சிறுநீரக மாற்று சிகிச்சையும் இரத்த சுத்திகரிப்புமாகும். எனினும் பொருத்தமான மாற்று சிறுநீரகத்தை கண்டறிவது மிகவும் கடினமானதாகும். தற்போது குடும்பத்தில் உள்ள எவரேனும் ஒருவரது சிறுநீரகத்தை அல்லது நன்கொடை அளிக்கும் ஒருவரிடமிருந்து சிறுநீரகத்தை பெற்றுக் கொள்ளும் நடைமுறையே காணப்படுகின்றது. இதனால் சிறுநீரக மாற்று சிகிச்சையை வெகு சிலருக்கே மேற்கொள்ளக்கூடியதாக உள்ளது.

இதன் காரணமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கண்காணிப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் சிறுநீரக நோய்த் தடுப்பு ஜனாதிபதி செயலணியின் மூலம் சுகாதாரம், போஷனை சுதேச மருத்துவ அமைச்சுடன் இணைந்து திடீர் விபத்துக்களின் போது மூளைச் சாவடையும் நோயாளிகளின் சிறுநீரகத்தை சிறுநீரக நோயாளிகளுக்கு பொருத்தும் திட்டமொன்றை கண்டி பொது வைத்தியசாலையுடன் இணைந்து நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மூளைச் சாவுற்ற நோயாளிகளின் சிறுநீரகங்களை பொருத்துவதன் மூலம் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தில் தற்போது சிறுநீரகம், இதயம், ஈரல், கல்லீரல், கண் உள்ளிட்ட உடற் பாகங்களை பொருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாளொன்றுக்கு திடீர் விபத்துக்களின் காரணமாக ஐந்து, ஆறு பேர் உயிரிழப்பதுடன், உயிரிழந்தவர்களின் ஆரோக்கியமான உடல் உறுப்புக்கள் இவ்வாறு நோயாளிகளுக்கு பொருத்தும் திட்டம் இதன் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

திடீர் விபத்துக்களின் போது உயிரிழந்தவர்களின் உடல் உறுப்புக்களை குறுகிய காலத்திற்கே உயிர்த்தன்மையுடன் வைத்திருக்க முடியுமென்ற காரணத்தினால் மிக விரைவாக மாற்று சத்திர சிகிச்சை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலையீட்டினால் இந்த உறுப்புக்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு விமானப் படையினரின் உதவியைப் பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. தற்போது இதற்காக செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகள் ஜனாதிபதியால் தாபிக்கப்பட்டுள்ள தேசிய சிறுநீரக நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன், இத்திட்டத்தை எதிர்காலத்தில் வினைத்திறனாக முன்னெடுப்பதற்காக சுகாதாரம், போஷனை, சுதேச மருத்துவ அமைச்சிற்கும் இலங்கை விமானப் படைக்குமிடையில் இந்த புதிய புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

இதேநேரம் சிறுநீரக நோய் நிவாரண ஜனாதிபதி செயலணியின் நெறிப்படுத்தலில் தற்போது உடல் உள் உறுப்புக்களை அன்பளிப்பு செய்வதற்கு தெரிவிக்கப்பட்டுள்ள விருப்பங்களை, சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் தேசிய அடையாள அட்டையில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்மூலம் உறுப்புக்களை அன்பளிப்பு செய்யும் இந்த நற்பணிக்கு பங்களிப்பு செய்பவர்களின் இறுதிச் சடங்குகளுக்கு அரசாங்கத்தின் அனுசரணையை பெற்றுக்கொடுத்து அவர்களினால் மேற்கொள்ளப்படும் உன்னத பணியை பாராட்டுவதற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு வருகின்றன. திடீர் விபத்தினால் மூளைச் சாவடையும் போது அல்லது உறுப்புக்களை அன்பளிப்பு செய்வதற்கு விருப்பத்தை தெரிவிப்பதற்கு 081-222 6522 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் கண்டி பொது வைத்தியசாலை உறுப்பு மாற்று சிகிச்சை ஒருங்கிணைப்பு அலுவலகத்திற்கு விருப்பத்தை தெரிவிப்பதன் மூலம் இதற்கு பங்களிக்க முடியுமென்றும் சிறுநீரக நோய் நிவாரண ஜனாதிபதி செயலணி தெரிவித்துள்ளது.

அமைச்சர் ராஜித சேனாரத்ன, இராஜாங்க அமைச்சர் பைசல் காசிம், ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர்.செனவிரத்ன, சிறுநீரக நோய் நிவாரண ஜனாதிபதி செயலணியின் பணிப்பாளர் அசேல இத்தவெல, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜாசிங்க உள்ளிட்ட அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-7)

## வெளிநாட்டு சிகரெட், மதுபானம், அழகுசாதனப் பொருட்கள் மீட்பு



(கொழும்பு)

வெளிநாட்டு சிகரெட் தொகை, மதுபானம் மற்றும் அழகு சாதனப்பொருட்களை சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வர முயற்சித்த போது சுங்க அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை 6.00 மணியளவில் சென்னையிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த குடும்பத்திடமிருந்தே மேற்படி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

அவர்களின் பயணப் பொதியை சோதனையிட்ட போது அதிலிருந்து தேசிய ஒளடத ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் உறுதிப்படுத்தல் அற்ற அழகு சாதனப் பொருட்கள், மதுபான போத்தல்கள் 30 மற்றும் 25 சிகரெட் பெட்டிகள் என்பன சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட மதுபானம் மற்றும் சிகரெட் என்பன தேசிய ஒளடத ஆணைக்குழுவின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், அதனை நாட்டிற்குள் எடுத்து வர முற்பட்ட இலங்கை பிரஜைகளுக்கு எவ்வித தண்டப் பணங்களும் அறவிடப்படவில்லையெனவும் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-7)

## மாகாணத் தேர்தல் ஒத்திவைப்பு பவ்ரல் அதிருப்திக் கடிதம்

தொடர்ச்சியாக மாகாண சபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுவதற்கு அதிருப்தியைத் தெரிவித்து, பவ்ரல் அமைப்பு மீண்டுமொரு தடவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

இதுவரை 6 மாகாண சபைகளின் பதவிக் காலம் நிறைவடைந்துள்ளதுடன் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 மாகாண சபைகளின் பதவிக் காலம் நிறைவடையவுள்ளதாகவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே மக்கள் இறைமையான தேர்தல் உரிமையை பாதுகாக்கக் கூடிய நடவடிக்கைகளை முன்னெடுக்கும் செயற்பாடுகளை ஜனாதிபதியும் பிரதமரும் மேற்கொள்ள வேண்டுமென்றும் குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். (இ-7)



## மஹோற்சவ விஞ்ஞாபனம்

வல்வெட்டி ஸ்ரீ சித்தி விநாயக பூலட்சுமி சமேத நாராயண சுவாமி திருக்கோவில் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை 12 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும்.

இதில் கொடியேற்றம் நாளை முற்பகல் 11 மணியளவில் நடைபெறும். எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 24 ஆம் திகதி சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. (இ-5)

## இ.போ.ச.ஊழியர் மீது தாக்குதல்

இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ். ஊழியர் மீது நேற்று முன்தினம் மாலை 6.10 மணியளவில் துன்னாலைப் பகுதியில் வைத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, NA5201 இலக்கமுடைய இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தில் குறித்த ஊழியர் பயணம் செய்ததாகவும் துன்னாலைப் பகுதியை அண்மித்த வேளை இனந்தெரியாத நபர்களால் குறித்த பேருந்து வழிமறக்கப்பட்டு குறித்த ஊழியரை பேருந்தில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியே இழுத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (இ-10)

## உணவு நஞ்சடைந்தமையால் 30 ஆடுகள் பரிதாபமாகப் பலி

சிலாபம் - கினியம தோட்டத்தில் முப்பது ஆடுகள் உணவு நஞ்சடைந்தமை காரணமாக உயிரிழந்துள்ளதாக, பிங்கிரிய மிருக வைத்திய அதிகாரி பி.ஜி.ஏ.எஸ்.ரஷிகா தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் இந்த ஆடுகள் உயிரிழந்துள்ளதாகவும், இன்னும் சில ஆடுகள் உயிரிழக்கும் ஆபத்தான நிலையில் காணப்படுவதாகவும், அத்தோடு "எசிடொசியஸ்" எனப்படும் நோய் நிலைமைக்கு இவை உள்ளாகியுள்ளதாகவும், இதற்கு காரணம், குறித்த ஆடுகளுக்கு வழங்கப்பட்ட உணவில் காணப்பட்ட விசம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## சிறையில் 1299 மரண தண்டனை கைதிகள்

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் இருக்கும் கைதிகளில் கடந்த வருடம் டிசெம்பர் 31 ஆம் திகதிவரை நிரந்தரமாக மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் மற்றும் மரண தண்டனை விதிக்கப்பட்டு மேன் முறையீட்டு மனுத்தாக்கல் செய்துள்ள கைதிகள் என் 1299 பேர் இருக்கின்றனர் என நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளில் 1215 ஆண்களும் 84 பெண்களும் அடங்குகின்றனர். மேலும் மரண தண்டனை விதிக்கப்பட்ட 1299 கைதிகளில் 784 ஆண் கைதிகளும் 34 பெண் கைதிகளும் தங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் மரண தண்டனை தொடர்பில் மேன் முறையீடு செய்துள்ளனர்.

அதன் பிரகாரம் நிரந்தரமாக மரண தண்டனை விதிக்கப்பட்ட 476 கைதிகள் சிறைச்சாலைகளில் இருக்கின்றனர். அவர்களில் ஆண் கைதிகள் 426 பேரும் பெண் கைதிகள் 50பேரும் அடங்குவதாகவும் அந்த அமைச்சு அறிவித்துள்ளது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 160 | 120 | 200 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 70 | 60 | 60 | 80 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 80 | 200 | 300 |
| தக்காளி | 100 | 120 | 100 | 70 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 80 | 60 | 30 | 50 |
| கோவா | 120 | 80 | 100 | 70 | 100 |
| கரட் | 120 | 140 | 100 | 100 | 120 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 60 |
| புடோல் | 100 | 120 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 60 | 80 | 70 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 150 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 200 | 300 | 200 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 200 | 120 | 90 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 40 | 40 | 50 | 40 | 80 |
| பயற்றங்காய் | 150 | 200 | 140 | 150 | 140 |
| லீக்ஸ் | 70 | 140 | 140 | 120 | 120 |
| பீற்றூட் | 80 | 180 | 140 | 70 | 160 |
| கறிமிளகாய் | 250 | 200 | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 300 | — | 800 | — | 600 |
| போஞ்சி | 160 | 120 | 130 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 180 | 140 | 140 | 200 | 160 |
| கீரை - 1பிடி | 50 | 35 | 60 | 40 | 50 |
| தேசிக்காய் | 150 | 140 | 150 | 140 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 40 | 35 | 20-40 |
| இராசவள்ளி | 130 | 120 | 150 | 130 | 150 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 200 | 220 | 240 |
| முள்ளங்கி | 40 | 60 | 80 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 60 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 80 | 30 | 15 | 30 |
| ஈரப்பலா | 50 | 60 | 60 | 120 | 60 |




# செத்தவன் பிழைத்த மர்மம்



தெனாலிராமனை அழைத்து வந்த காவலரைப் பார்த்து "ராஜகுரு எங்கே?" என்று கேட்டார் மன்னர்.

"அவர் அடித்த அடியில் நகர முடியாமல் கிடக்கிறார்!" என்றனர் காவலர்கள்.

"அடப்பாவிகளா! அவரை ஏன் அடித்தீர்கள்? நான் அடிக்கச் சொன்னது இவனையல்லவா?"

"தோளிலிருப்பவனை நையப்புடையுங்கள் என்றீர்கள்! தோளில் இருந்தவர் அவர்தான்!" என்றனர் பயந்து கொண்டே. "தெனாலிராமா! எப்படி இந்த மாற்றம்?" என்று ஆத்திரத்தோடு கேட்டார் அரசர்.

"மன்னா! தாங்கள் சேவகர்களிடம் ஏதோ சொல்வது தெரிந்தது. ராஜகுரு என்னைச் சுமந்து வருவது தங்களுக்குப் பிடிக்கவில்லையோ என நினைத்தேன். அதனால் பிராயச்சித்தமாக நான் அவரை சுமந்து வந்தேன்..." என்று தெனாலி ராமன் இழுக்க, "ராஜகுருவைத் தண்டிக்கும்படி செய்த இவனைச் சிரச்சேதம் செய்யுங்கள்!" என்று சீறினார் அரசர்.

தெனாலிராமனை காவலர்கள் மயானத்துக்குக் கூட்டிச்சென்றனர். ராமன் காளியைத் துதித்துக் கொண்டே வந்தான். சேவகர்களில் ஒருவன், "வேலை கிடைத்ததென்று நிம்மதியாயிராமல் புத்தி கற்பிக்கிறேன் என்று கிளம்பி இப்படி உயிருக்கே உலை வைத்துக்கொண்டாயே! அப்படியென்ன ராஜ குருவிடம் பகை?" என்று கேட்டான்.

"அண்ணே! ராஜகுரு மோசம் பண்ணிவிட்டார்!" என்று நடந்ததைச் சொல்லி, "நீங்க இரக்கம் காட்டினா உயிர் பிழைப்பேன்!" என்று கூறியபடியே இடுப்பிலிருந்த பொன்முடிச்சை அவிழ்த்து ஆளுக்குப் பத்துப் பொன் கொடுத்தான்.

அவர்களும், "சரி, நாட்டைவிட்டே ஓடிவிடு!" எனக் கூறி ராமனை விடுவித்தனர். ஆனால், ராமன் ஊரை விட்டு ஓடாமல் வீட்டக்குள்ளேயே ஒளிந்து கொண்டான்.

சேவகர்கள் ஒரு புறாவைக் கொன்று அதன் இரத்தத்தைக் கத்தியில் தடவி ராமனைக் கொன்று விட்டதாக அரசரிடம் காண்பித்தனர்.

மறுநாள் ராமன் சொன்னபடி அவனது தாயாரும், மனைவி மங்கம்மாவும் பையனுடன் தலைவிரிகோலமாக சபைக்கு வந்தனர்.

"யார் நீங்கள்? உங்களுக்கு என்ன தீங்கு நேர்ந்தது? ஏன் அழுகிறீர்கள்?" என்று விசாரித்தார் மன்னர்.

"வேந்தே! நான் தெனாலிராமனின் தாய். இவள் அவன் மனைவி. இது ராமனின் பிள்ளை. ராஜகுருவை அடிக்கும்படி செய்தது குற்றம் தான். அதற்காகத் தலையை வாங்குவதா? பதிலுக்கு ராஜ குருவைவிட்டே ராமனை அடித்திருக்கலாம். சிறையில் தள்ளியிருக்கலாம். நாடு கடத்தியிருக்கலாம். தங்களையே தஞ்சமென்று வந்தவனைக் கொலை செய்வதா? நாங்கள் அநாதைகளாகி விட்டோம். இந்தச் சிறு பிள்ளையை எப்படி வளர்ப்போம்? அரசன் ஆண்டவனுக்குச் சமம் என்பர். தெய்வம் பாரபட்சமாய் நீதி வழங்குமா?" என்று முறையிட்டாள்.

அவர்களைப் பார்த்தபோது அரசரின் மனம் வேதனைப் பட்டது. "நீதி தவறிவிட்டோமே" எனப் புழுங்கினார். அதனால் சமாதானமாக, "ஏதோ ஆத்திரப்பட்டு விட்டேன். என்னை மன்னியுங்கள். ராமன் உயிரை மீட்டுத் தர முடியாதென்பது நிஜம் ஆனால், நீங்கள் இனி அநாதைகள் அல்ல! தாங்கள் என் தாய்! ராமனின் மனைவி என் சகோதரி. இந்தப் பையன் வளர்ந்து சம்பாதிக்கும் வரை படிக்கவும், நீங்கள் வாழவும் இந்த அரசு சகலவிதத்திலும் உதவும்!" என்று குரல் தழுதழுக்க வாக்களித்து, ஒரு பை நிறையத் தங்கநாணயங்களையும் கொடுத்தார்.

அவர்களும் அரைமனதோடு அதை வாங்கிக் கொள்வதாக நடித்தனர். இந்தச் செய்தி அந்தப்புர ராணிகள் காதிலும் விழுந்தது.

அவர்கள் ராயரிடம், "அந்தணனைக் கொலை செய்தால் பிரம்மஹத்தி பாவம் சூழும். பிராயச்சித்தம் பண்ண வேண்டும்!" எனக் கோரினர்.

புரோகிதர்களிடம் இதுபற்றிக் கலந்தாலோசித்தார் அரசர். பிறகு ராஜகுருவை அழைத்து, "ராமனின் ஆவி அவன் கொலையுண்ட மயானத்தில் அலையுமாம். அமாவாசை நள்ளிரவில் அங்கு பூஜை போட வேண்டும் என்று சாஸ்திரிகள் கூறுகிறார். உங்களால் அவனுக்குத் தண்டனை கிடைத்ததால் நீங்கள்தான் அதைச் செய்ய வேண்டுமாம்! போய் விட்டு வாருங்கள்!" என உத்தரவிட்டார்.

"அமாவாசை இருட்டில் பூஜையா' என்று ராஜகுருவுக்கு உதறலாக இருந்தது. ஆனாலும், என்ன செய்வது, அரச கட்டளையாயிற்றே! புறப்பட்டார்.

சுடுகாட்டில் ஒரு பெரிய ஆலமரம். மழை வந்தால் நெருப்பு அணைந்துவிடுமே. அதனால், அதனடியில் தீ வளர்த்து ஹோமம் நடத்தினர். ஹோமம் முடிந்ததும், "ராமனின் ஆவியே! சாந்தியடைந்து விடு!" என உரக்கக் கூவினர்.

"மாட்டேன்!" என்றபடி ஒரு கரிய உருவம் மரத்திலிருந்து குதிக்க, குதிகால் பிடரியில் படும்படி அனைவரும் ஓடினர். அரண்மனைக்குச் சென்றுதான் திரும்பிப் பார்த்தனர். ராமனின் ஆவியைக் காணோமென்றதும் பெருமூச்செறிந்தனர்.

அரசர் இதைக் கேட்டதும், "ராமனின் ஆவியை சாந்தி அடையச் செய்பவர்களுக்கு ஆயிரம் பொன் பரிசு!" எனப் பறையறையச் செய்தார்.

நீண்ட நரைத்த தாடியுடன் ஒரு சாமியார் வந்தார். தான் ராமனின் ஆவியைச் சாந்தப்படுத்துவதாகக் கூறினார்.

"எப்படிச் செய்வீர்கள்?" என்று மன்னர் கேட்க, "அவனுக்கு உயிர் கொடுப்பேன். ஆனால், ஒரு நிபந்தனை. அவன் பிழைத்து வந்த பிறகு பழைய விடயம் பற்றி யாரும் எதுவும் பேசக் கூடாது!" என்றார். அரசரின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

"ராமன் மீண்டும் பிழைத்து வந்தால் என் பாவம் தொலையும். மன உறுத்தலும் மறையும். எதுவும் பேசமாட்டோம்!" என வாக்களித்தார்.

"இறந்தவன் எழுந்து வருவதா? சுத்த ஹம்பக்!" என்றார் ராஜகுரு.

"நீங்கள் பேசாமலிருங்கள்! ஐயா! ராமன் எப்போது வருவான்?" என அரசர் ஆர்வத்தோடு கேட்டார்.

"இதோ, இப்போதே வந்துவிட்டான்!" என்று தாடியைப் பிய்த்தெறிந்தான் ராமன்.

அரசர் முதலில் திடுக்கிட்டாலும் பின் ராமனின் சமயோசித நடவடிக்கைகளைக் கண்டு மெச்சினார். வாக்களித்தபடி ஆயிரம் பொற்காசுகளைப் பரிசாகவும் அளித்தார். தன்னை விடுவித்த சேவகர்களைத் தண்டிக்கக்கூடாதென்று வேண்டினான் ராமன்.

அரசரும், "ராஜகுருவிடம் இனி துவேஷம் பாராட்டக்கூடாது!" என எச்சரித்தார்.

புத்திசாலி எந்த இக்கட்டிலிருந்தும் தப்பிவிடுவான் என்பதற்கு ராமனே சாட்சி!

## எதிரொலியின் பயன்கள்

ஒலியானது அலைகளாகப் பரவுதென்று எல்லாருக்கும் தெரியும். அவ்வாறு பரவும் ஒலி அலையானது ஏதாவது ஒன்றால் தடுக்கப்படும்போது, வந்த திசையிலேயே திருப்பி அனுப்பப்படுகிறது. அப்படி திரும்பும் ஒலி அலைகளைத்தான் எதிரொலி.

ஒலித்தெறிப்பின் விளைவாக ஏற்படும் எதிரொலி பல உபகரணங்களிலும் சாதனங்களிலும் பயன்படுத்தப்படுகின்றன. கடலில் கடலடிப்பாறைகளின் அமைவிடம், மீன் கூட்டம் உள்ள ஆழம், கடலின் ஆழம் என்பவற்றை அறிய எதிரொலிமானி (Echo sounder) பயன்படுத்தப்படுகின்றது. இது கழியொலியை கடலின் அடியில் செலுத்தி அது ஏற்படுத்தும் எதிரொலிக்கான நேரத்தைக் கொண்டு சோனர் (SONAR- SOund NAvigation and Ranging) முறையில் ஆழங்களை மதிப்பிடுகிறது.

மருத்துவ அலகிடலி உபகரணம் உடல் உள்ளுறுப்பு நோய்களை அறியப் பயன்படும் கழியொலி அலகிடலிகள் (Ultra Sound Scanners). கழியொலிகளை உட்செலுத்திப் பெறப்படும் எதிரொலி மூலம் செயற்படுகின்றது. இந்த எதிரொலியால் ஏகப்பட்ட உபயோகங்கள் இருக்கு. வானத்தில பறக்கும் விமானங்களைக் கண்டு பிடிக்க ரேடார் கருவி பயன்படுகிறது. காதால் கேட்க முடியாத ஒலி அலைகளைத் தான் விமானத்தை நோக்கி இந்த ரேடார் கருவி அனுப்புகிறது. அந்த ஒலி அலைகள் விமானத்தில் பட்டு எதிரொலித்து, மீண்டும் ரேடாருக்கு வருகிறது. அந்த எதிரொலி மூலமா விமானம் பறக்கும் தொலைவு மற்றும் திசையைக் கண்டு பிடிக்கலாம்.

## சோப்பு நுரை வெண்மையாக இருப்பது ஏன்?

சோப்புநுரை என்பது நுண்ணிய சோப்புக் குமிழ்களின் கூட்டமே. சோப்புக் குமிழ் என்பதோ சிறு அளவு காற்றை உள்ளடக்கி அமைந்திருக்கும் சோப்புக் கரைசலின் மெல்லிய படலம்.

சோப்புக் கரைசலின் பரப்பு இழுவிசையின் காரணமாக, அதன் படலம் நீண்டு பரவிட முடிகிறது.

எனவே ஒரு குறிப்பிட்ட கன அளவுள்ள நுரையினால் கவரப்படும் பரப்பு, அதே கன அளவுள்ள நீரினால் கவரப்படும் பரப்பைவிட மிகுதி எனலாம்.

சோப்பு நுரை இவ்வாறு பரவுவதன் காரணமாக அதில் ஏதேனும் சிறு அளவு வண்ணம் இருப்பினும் அது மங்கிப்போகிறது. மேலும் சோப்புப்படலம் ஒளி புகக்கூடியது. சோப்புக் குமிழ்களின் கூட்டமான நுரையை அடையும் ஒளி பல்வேறு திசைகளில் சிதறிப்பரவுவதால் நுரை வெண்மையாக மட்டுமே காட்சியளிக்கிறது.

பல்வேறு நிறம் கொண்ட சோப்புகளின் நுரைக்கும் கூட இந்த தத்துவம் பொருந்தும்.

எல்லோரும் நீதியை விரும்புகிறார்கள்...
ஆனால் அடுத்தவர் விடயத்தில் மட்டும்.

~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தர்மத்தை இழந்த வாழ்வு தொடர்ந்தால்...

இன்றைய நம் வாழ்வு என்பது அடிப்படை அம்சங்களை இழந்து போவதைக் காணமுடிகின்றது.

ஒரு காலத்தில் இருந்த சடங்குகளும் சம்பிரதாயங்களும் இன்று இல்லை என்பதாக நிலைமை மாறிவிட்டது. அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம்.

குறிப்பாக இன்றைய பொருளாதாரத்தின் தேவை காரணமாகக் கடினமாக உழைக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் நேரப்பற்றாக்குறை என்ற விடயம் அனைவரையும் ஆக்கிரமிக்கவே செய்கிறது.

தவிர, இயந்திரவாழ்வு என்ற சக்கரத்துக்குள் எங்களை நாங்களே விழுத்திக் கொண்டோம்.

கையடக்கத் தொலைபேசியை ஒரு அரை மணிநேரம் நிறுத்தி வைக்க முடியாத அளவில் மனப்பதற்றம் பலரையும் ஆட்கொண்டுள்ளது.

வீதிகளில் வாகனம் செலுத்தும்போதும் தங்களை மறந்து தொலைபேசி உரையாடலை செய்கின்ற போதைத்தனம் அதிகமாக ஏறிவிட்டது.

இதனால் விபத்துக்களும் உயிரிழப்புக்களும் என்ற துன்பம் சதா நடக்கிறது.

ஆன்மிக சிந்தனை அடியோடு இல்லாது விட்ட நிலையில், சண்டித்தனங்களும் சர்வாதிகாரப் போக்குகளுக்கும் குறைவில்லை.

சண்டித்தனம் உள்ளவர் பக்குவமானவர்களுடன் மோதத் தலைப்படுகின்றனர்.

உபத்திரவம் வேண்டாம் என்று ஒதுங்குகின்றவர்களைப் பலயீனமானவர்களாகக் கருதி அவர்களுக்குச் சதா தொல்லை கொடுக்கின்ற நிட்டூரம் நடந்து வருகிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், மனித வாழ்வை நெறிப்படுத்துகின்ற ஆன்மிகமும் ஆலய வழிபாடுகளும் பொருளாதாரத்தின் மையங்களாக மாறிவிட்ட துயரத்தை நினைக்கும்போது இதயம் கருகிக் கொள்ளும்.

அந்தளவுக்கு எதற்கும் பணம் என்பதாக ஆன்மிகச் சூழல் மாறிவிட்டது.

நிலைமை இதுவென்றால் இல்லை, அரச தனியார் நிறுவனங்களில் நிலவுகின்ற கருத்து முரண்பாடுகள், அரச பணியை செய்வது என் கடமையும் தர்மமுமாகும் என்ற நினைப்பு இல்லாமல், நான் அதிகாரி ஆகையால் நான் சொல்வதைத்தான் அனைவரும் ஏற்கவும் பின்பற்றவும் வேண்டும் என்ற கர்வத்தனங்க்ள் தலை உச்சியில் நின்று உலுப்புகின்றன.

இதற்கு மேலாக, சில அமைப்புகளும் தனிநபர்களும் குழுமங்களும் தத்தம் சொல்லுக்கு ஆடாதவர்களை விமர்சிக்கவும் இடமாற்றவும் திறமையானவர்களைத் திறமையற்றவர் என்று நாக்கூசாமல் கூறவும் தலைப்பட்டுள்ளனர்.

இதனால் அர்ப்பணிப்போடும் தர்ம சிந்தனையோடும் சேவை புரிகின்றவர்கள்; சேவை புரிந்தவர்கள் மனக்கவலையுடன் இருப்பதைக் காணமுடிகின்றது.

இவைதான் என்று மட்டும் கூறிவிட முடியாத அளவில், போதைப்பாவனை எங்கள் இனத்துக்கே ஈனம் செய்வது என்று கங்கணம் கட்டி நிற்கிறது.

ஆக, ஒட்டுமொத்தத்தில் தர்மம், இறைநம்பிக்கை, பாவபுண்ணியக் கருத்துக்கள் என அத்தனை அறக் கோட்பாடுகளும் செயலிழந்து எங்கள் வாழ்வை நிர்மூலமாக்குகின்றன.

இவை தொடர்பில் அனைவரும் கருத்தூக்கம் கொள்ளாவிட்டால், நிலைமை அதலபாதாளத்துக்குச் செல்வதை யாராலும் தடுக்க முடியாதென்றாகிவிடும்.

# வடக்கின் பிரச்சினைகளை தீர்க்கும் வாய்ப்பை மகிந்த அரசாங்கம் தட்டிக் கழித்தது –ஐ.தே.க.

(கொழும்பு)

வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கான பொன்னான வாய்ப்புகளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தட்டிக் கழித்துவிட்டதாக, ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துலலால் பண்டாரிகொட குற்றம் சாட்டியுள்ளார். பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் நேறறு முன்தினம் கூடிய பாராளுமன்ற அமர்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர், பிரிந்திருந்த இரு இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு பொன்னான வாய்ப்பு ஏற்பட்டது.

யுத்தம் யாரால் முடிக்கப்பட்டது என்பதை புறம்தள்ளி, யுத்தத்திற்கு பின்னர், தேசியம் என்ற ரீதியில் எவ்வாறு சவால்களுக்கு முகம் கொடுப்பது என்று சிந்தித்திருக்க வேண்டும்.

வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினைக் காணவும், அதற்கான அடித்தளத்தை இடவும் நல்ல சந்தர்ப்பம் கிட்டியிருந்தது.

இதனை நிறைவேற்ற தெற்கின் அரசாங்கத்திற்கு அதிகாரம் இருந்தது. நிறைவேற்று அதிகாரம் இருந்தது. மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசாங்கம் நிலையாக இருந்தது. மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் என்பன அவர்களின் கைகளிலேயே இருந்தன.

இவை எல்லாவற்றையும் விட, நாடு குறித்து சிந்தித்து தீர்மானம் எடுக்கும் நிலையில் மக்கள் இருந்தார்கள். அன்று தலைவர்கள் தயாராக இருந்திருந்தால், மக்களே பிரச்சினைகளைத் தீர்த்திருப்பார்கள். ஆனால் அரசாங்கம் அந்த வாய்பை எட்டி உதைத்தது.

நாட்டின் எதிர்காலத்திற்கான அரசியலமைப்பினை, குடும்பத்தின் எதிர்காலத்திற்காக மாற்றி, 17ஆம் திருத்தத்தை மீண்டும் திருத்தி 18ஐ கொண்டு வந்தனர்.

இந்நிலையில், தற்போதுள்ள தலைவர்களும் அடுத்த தேர்தலில் எவ்வாறு வெற்றி பெறலாம், எவ்வாறு ஆட்சியைக் கவிழ்க்கலாம் எனறு எண்ணாமல் மக்கள்குறித்து சிந்தித்து செயற்பட வேணடும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கூரே, நிலுக்கா நியமனங்களுக்கு ஐ.தே.க. எதிர்ப்பு

(கொழும்பு)

முன்னாள் ஆளுநர்களான ரெஜினோல்ட் கூரே, நிலுக்கா ஏக்கநாயக்காவிற்கு அரசகூட்டுத்தாபனங்களின் தலைவர் பதவியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கியுள்ளமைக்கு ஐக்கிய தேசிய கட்சி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

வடமாகாண முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயை தேசிய இரத்தினக் கல் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகாரசபையின் தலைவராக நியமித்துள்ளார்

முன்னாள் சப்ரகமுவ மாகாண ஆளுநரான நிலுக்கா ஏக்கநாயக்கவை அரச மரக்கூட்டுத்தாபனத்தின் தலைவராக நியமித்துள்ளார்.

ஜனாதிபதி அண்மையில் அரச கூட்டுத்தாபனங்களின் தலைவர்களாக நியமிக்கப்படுபவர்கள் பட்டப் படிப்பை பூர்த்தி செய்திருக்க வேண்டும் என அறிவுறுத்தல் விடுத்திருந்ததை சுட்டிக் காட்டியுள்ள ஐ.தே.க. வட்டாரங்கள் இரு ஆளுநர்களும் அந்த தகுதியை கொண்டிருக்கவில்லை என தெரிவித்துள்ளன.

அண்மையில் அனைத்து கூட்டுத்தாபனங்களினதும் தலைவர்களின்தகைமை தொடர்பில் ஆராய்வதற்காக தனது செயலாளர் தலைமையில் குழுவொன்றை நியமித்திருந்த ஜனாதிபதி, கூட்டுத்தாபனங்களின் தலைவர்களாக நியமிக்கப்படுபவர்கள் பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருக்க வேண்டும் என அறிவுறுத்தியிருந்தார் என்பதை ஐக்கிய தேசிய கட்சி வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன,

தனது நியமனங்களிற்கு ஜனாதிபதி வேறு விதிமுறைகளை பின்பற்றுகின்றார் என தெரிவித்துள்ள ஐக்கியதேசிய கட்சியின் பாராளுமன்ற உறுபபினர் ஒருவர் ஜனாதிபதி தனது உத்தரவையே மீறியுள்ளார. இது அரசியல் சந்தர்ப்பவாதம் எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருநது மாலை 6.30 மணி வரை யாழ்.பிரதேசத்தில வேலணைச் சந்தியிலிருந்து துறையூர் வரை, மடத்துவெளி வல்லான், ஆலடி சந்தி, புங்குடுதீவு, இறுப்பிட்டி, குறிகட்டுவான்,புங்குடுதீவு கடற்படை முகாம், மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை ஒரு பகுதி, சோளாவத்தை, மண்கும்பான் தேசிய நீர்வழங்கல் வடிகால் சபை,மண்டைதீவு இலங்கை கடற்படை முகாம், மண்கும்பான் கடற்படை முகாம், விக்னேஸ்வரா ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில கொக்கெலிய விலிருந்து ஓமந்தை வரை, சாந்தசோலை,Senok, Union alliance, Rajnet Factory, AMP Ceylon ஓமந்தை, ஓமந்தை தொழில்நுட்பக் கல்லூரி, லக்ஸபானா வீதி, தோணிக் கல், ஆண்டிய புளியங்குளம், புதுக்குளம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் நானாட்டான் பிரதேசம், ஓலைத்தொடுவாயிலிருந்து தலைமன்னார் வரை, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, Palmyra House, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் இராணுவ முகாம், மன்னார் வைத்தியசாலை, பரப்பாங்கண்டல், ஆண்டாங்குளம், வட்டக்கண்டல், குருவில், கண்ணாட்டி, பள்ளி வாசல்பிட்டி, பரப்புக்கடந் தான் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### எனக்கு இரக்கம் இல்லை என்று நீங்கள் அறிவீர்களா?

இரக்கம் என்பது அணுக்கத்தில் குறைபாடு உள்ளது என்பதை சுட்டுகிறது-இடைவெளி என்றால் நம்மை சேர்ந்தது என்பதில் குறைபாடு.

உங்களுக்கு மிகப்பிரியமான நெருங்கியமான மீது நீங்கள் இரக்கம் கொள்வதில்லை.ஈஈஎன்னுடைய குழந்தை மீது எனக்கு இரக்கம் உள்ளதுடுடு என்று பெறறோாகள சொலல ந ஙகள கேடடதிலலை.

என்னுடையவர்கள் என்று நீங்கள் யாரை நினைப்பதில்லையோ அவர்கள் மேல் மாத்திரமே நீங்கள் இரக்கம் கொள்கிறீர்கள்.கோபம்,மதிப்பீடு,அதிகாரம் இவற்றை சுட்டுகிறது இரக்கம் .

நீங்கள் இரக்கம் காட்ட வேண்டுமென்று கேட்கும் போது நீங்கள் உங்கள் நலனில் மாத்திரம் அக்கறை கொள்கிறீர்கள். காரணம் மற்றும் விளைவுகளின் சட்டத்திலிருந்து மன்னிப்பு பெற நீங்கள் விரும்புகிறீர்கள். அது தைரியம் மற்றும் போரண்மை குறைபாட்டைச் சுட்டுகிறது.

சில சமயங்களில் வளர்ச்சிக்கு தடையாக இருப்பது இரக்கம்.இரக்கம் உண்மையில் சற்று ஆறுதலையும் ஆதரவையும் தருகிறது.ஆனால் பெருமாறுதல் நிகழாவண்ணம் வலு குறைகிறது.இலைகள் மரத்திலிருந்து உதிராமல் இருக்க கருணை காட்ட வேண்டுமென்று கேட்டால் மரம் என்னவாகும்? (தொடரும்)

### ஒரு இலட்சம் ரூபாய்

## போலி நாணயத்தாள்களுடன் நெடுங்கேணியில் நபரொருவர் கைது

(முல்லைத்தீவு)

நெடுங்கேணி பொலிஸாரின் இரவு ரோந்து நடவடிக்கையின் போது நேற்று முன்தினமிரவு 11 மணியளவில் நெடுங்கேணி தபால் நிலையத்திற்கு முன்பாக வைத்து சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய நபர் ஒருவரை சோதனை செய்ய முற்பட்ட வேளை அவரிடமிருந்து ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான போலி நாணயத்தாள்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவரிடமிருந்து போலி நாணயத்தாள்களாக 5 ஆயிரம் ரூபாய் 18 தாள்களும் ஆயிரம ரூபாய் 10 தாள்களும் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர் தொடர்பான விசாரணைகளை நெடுங்கேணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எஸ்.டபிள்யூ. சாந்த பண்டார மேற்கொண்டதுடன் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு மேலதிக விசாரணைகளை வவுனியா மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ்.பி.தென்னக்கோன், வன்னிபிராந்திய பிரதிபொலிஸ் பொறுப்பதிகாரி அனுர அபய விக்கிரம ஆகியோர் மேற்கொள்ளவுள்ளதாக நெடுங்கேணி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### வீட்டுப் பூஜை அறையில் தெய்வங்களை வழிபடும் முறை?

சுப்ரபாதத்தை தினமும் காலை வேளையில் மட்டுமே கேட்க வேண்டும். அவ்வாறு கேட்க முடியாத நிலையில் மாலையில் கேட்பது அவ்வளவு உசிதமானதில்லை எனப்படுகிறது.

பகவானின மநதிரததை சொலலி பிரார ததிகக தெரிந்தவர்களுக்கு எப்போதும் எல்லாமே வெற்றிதான். காலையில் விழித்தவுடன் நாராயணனையும் இரவு தூங்கு முன் சிவபெருமானையும் நினைக்க வேண்டும்.

கஷ்டங்கள் நீங்க, நினைத்தது நடக்க எளிய வழி தீபம் ஏற்றுவதுதான் தீப ஒளி இருக்குமிடத்தில் தெய்வ அனுக்கிரகம் நிறைந்திருக்கும். வீட்டில் எங்கெல்லாம் முடியுமோ அஙகெலலாம தபம ஏறறி வைககலாம.

தீபத்தில் உள்ள எண்ணெய் தான் எரிய வேணடுமே தவிர திரி அல்ல. திரி எரிந்து கருகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும் எரிந்து கொண்டிருக்கும் தீபத்தை ஆண்கள் அணைக்கக் கூடாது. (முற்றும்)

# உடுப்பிட்டி யூத் அணியை வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தது றேஞ்சஸ்



உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் சுப்பர் 8 ஆட்டத்தில் றேஞ்சஸ் அணியை எதிர்த்து உடுப்பிட்டி யூத் விளையாட்டுக்கழகம் மோதியது.

இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதும் ஆட்டத்தின் 13 ஆவது நிமிடத்தில் ஈழவேந்தன் தனக்கு கிடைத்த பந்தினை மிக நீண்ட தூரத்தில் இருந்து உதைக்க கோலாக மாறியது.

சளைக்காது போராடிய உடுப்பிட்டி யூத் விளையாட்டுக்கழகத்திற்கு கிடைத்த தண்ட உதையினை கோலாக மாற்ற முடிவுக்கு வந்தது முதல் பாதியாட்டம். இரண்டாம் பாதியாட்ட ஆரம்பத்தில் இரு அணிகளும் மேலும் சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தியது.கோல் போடும் சந்தர்ப்பத்தை முன்கள வீரர்கள் தவறவிட்டனர்.

ஆட்டத்தின் 43ஆவது நிமிடத்தில் கைலாஸ் தனக்கு கிடைத்த பந்தினை நேர்த்தியான முறையில் கோலாக மாற்ற 2:1 என்ற கோல் கணக்கில முன்னிலை வகித்தது றேஞ்சஸ் அணி.மேலதிக மாற்றம் இன்றி ஆட்டம் முடிவடைய 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது றேஞ்சஸ் அணி .

றேஞ்சஸ் அணி சார்பாக ஈழவேந்தன், கைலாஸ் ஆகியோர் தலா ஒரு கோல்கள் பெற்றுக் கொடுத்தனர். போட்டியின் ஆட்ட நாயகனாக மாதுஜன் தெரிவு செய்யப்பட்டார். (க)

# 75 ஆவது ஆண்டு கால்பந்தாட்டம் குருநகர் பாடும்மீன் அணி வெற்றி



யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி, லீக்கின் ஏற்பாட்டில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் கடந்த 14 ஆம் திகதி முதல் ஆரம்பமாகிநடைபெற்றுவருகின்றது.

யாழ்ப்பாணம் லீக்கில், ஏ பிரிவு அணிகள் என ஒரு பிரிவும், பி பிரிவு அணிகள் என ஒரு பிரிவும் காணப்படுகின்றன. இவற்றுக்கு தனித்தனியாக சுற்றுப்போட்டியானது நடத்தப்படுகின்றது.

ஏ பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியொன்று கடந்த 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதியது. பாடும்மீன் அணி, 02:00 என்ற கோல்கள் கணக்கில் இலகுவாக வெற்றிபெற்றது.

பாடும்மீன் அணி சார்பாக கீதன் ஒரு கோலை அடித்ததுடன், மற்றைய கோல் சேம் சைட் கோலாக பதிவு செய்யப்பட்டது. (க-26)

# 75வது ஆண்டு கால்பந்தாட்டம் அச்செழு வளர்மதி அணி வெற்றி

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி, லீக்கின் ஏற்பாட்டில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் கடந்த 14 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

யாழ்ப்பாணம் லீக்கில், ஏ பிரிவு அணிகள் என ஒரு பிரிவும், பி பிரிவு அணிகள் என ஒரு பிரிவும் காணப்படுகின்றன.

இவற்றுக்கு தனித்தனியாக சுற்றுப்போட்டியானது நடத்தப்படுகின்றது.

பி பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியொன்று கடந்த 08 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில் அச்செழு வளர்மதி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அணி மோதியது. போட்டி நேரத்தில் இரண்டு அணிகளும் எவ்வித கோல்களையும் பதிவு செய்யவில்லை.

தொடர்ந்து வெற்றியாளரைத் தீர்மானிக்க நடத்தப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில், வளர்மதி அணி, 06:05 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. (க-26)

# இறுதியில் பாபா விளையாட்டுக்கழகம்



Top Eleven விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்திய மாபெரும் மென்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் அரை இறுதியில் அளவெட்டி வேத விநாயகர் விளையாட்டுக்கழகத்தை வெற்றி கொண்டு கல்வியங்காடு பாபா அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

அரை இறுதியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அளவெட்டி வேதவிநாயர் அணி 5:3 ஓவர் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

கல்வியங்காடு பாபா அணி சார்பாக சிறப்பாகப் பந்து வீசிய கனிஸ்ரன் மூன்று இல க்குகளை கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடு த்தாடிய கல்வியங்காடு பாபா அணி 5 ஓவர் நிறைவில் வெற்றி இலக்கை அடைந்தது. பாபா அணி சார்பாக மதுசன் அதிரடியாக ஆடி 36 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். (கு)

# சென்.நீக்கிலஸ் அணி வெற்றி

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி, லீக்கின் ஏற்பாட்டில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் கடந்த 14 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

யாழ்ப்பாணம் லீக்கில், ஏ பிரிவு அணிகள் என ஒரு பிரிவும், பி பிரிவு அணிகள் என ஒரு பிரிவும் காணப்படுகின்றன. இவற்றுக்கு தனித்தனியாக சுற்றுப்போட்டியானது நடத்தப்படுகின்றது.

ஏ பிரிவு அணிகளுக்கிடையிலான லீக் சுற்றுப்போட்டியொன்று கடந்த 7 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது.

இதில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணி மோதியது. நீக்கிலஸ் அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி, 03:00 என்ற கோல்கள் கணக்கில் றோயல் அணியை வென்றது.

நீக்கிலஸ் அணி சார்பாக, சுரேஸ், றேம்ஸன் மற்றும் பிலிப் ராஜ் ஆகியோர் தலா ஒரு கோலைப் பெற்றுக்கொடுத்தனர். (க-26)

# யாழ்.இந்துவுடனான போட்டியில் முன்னிலை பெற்றது மகாஜன

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்ட சங்கத்தால் நடத்தப்படும் 13 வயது அணிகளுக்கிடையிலான துடுப்பாட்ட போட்டியின் இரண்டாம் சுற்றில் யாழ். இந்துக் கல்லூரியுடன் மோதிய மகாஜன கல்லூரி அணி முதலாவது இனிங்ஸில் 47 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மகாஜன முதலில் களத்தடுப்பை தீர்மானிக்க யாழ்.இந்து துடுப்பெடுத்தாடியது. 43.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 112 ஓட்டங்களை பெற்றது. அதிக பட்சமாக அகிசன் 17, அபிதாப் 15, சுபர்ணன் 14 ஓட்டங்களை பெற்றனர்.

மகாஜன சார்பில் அபர்ணன் 3, ஜேம்சன் 2, கஜித் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மகாஜன 43.3 ஓவர்களில் 159 ஓட்டங்களுக்கு 9 .விக்கெட்டுக்களை இழந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. இதன் போது முதலாம் இனிங்ஸில் 47 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது மகாஜன கல்லூரி அணி. துடுப்பாட்டத்தில் சர்மிலன் 34, கோகுலநாத் 21, பவித்திரன் 19, வஜிகரன் 15, கஜித் 15 என ஓட்டங்களை பெற்றனர். யாழ்.இந்து அணி சார்பில் ஜெனிஸ்ரன் 6 இலக்குகளை வீழ்த்தினார்.

தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸிக்கிறகாக துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி 19 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 84 ஓட்டங்களை பெற ஆட்டநேரம் நிறைவிற்கு வந்தது. சுபர்ணன் 36 ஓட்டங்களை பெற்றார். மகாஜன சார்பில் அபர்ணன் 5 இலக்குகளை வீழ்த்தினார். (க)



## பயங்கரவாத சட்டம்...

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், நாடு என்ற வகையில் நாம் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், ஜனநாயகத்தை உறுதிப்படுத்தவும், அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். அதற்கு சர்வதேசத்தின் தலையீடு அவசியமில்லை.

நாட்டில் யுத்தம் நடைபெற்ற காலத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறையில் இருந்ததை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் இன்று யுத்தம் முடிவடைந்து 9 வருடங்கள் கடந்து விட்டன.

தற்போதும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டியதில்லை. ஆனால் அரசாங்கம் அதனை நீடித்து தன், அடக்கு முறைகளுக்கு பயன்படுத்துகிறது.

இந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பலர் விசாரணைகள் இன்றி வருடக்கணக்கில் சிறையில் வாழ்கின்றனர்.

அவர்கள் தங்கள் நிலைப்பாட்டை வெளிப்படுத்த நீதிமன்றங்களை நாடும் வாய்ப்பு இல்லை. பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ச்சியாக நீடிக்கப்பட, அவர்கள் 15 வருடங்களாக சிறையில் அடைபட்டுள்ளனர். இது நியாயமா?

குறைந்தது நீதிமன்றத்தின் ஊடாக தாம் குற்றவாளியா, நிரபராதியா என்று தெரிந்து கொள்ளவும் முடியாதுள்ளனர். அவர்கள் குற்றவாளி என்றால் தண்டனை வழங்குவது நியாயமானது. இது ஒன்றும் இல்லாமல் நிரபராதி ஒருவர் 10 வருடமாக சிறையில் இருப்பது சாதாரணமானதா?

பலர் 3 மாதம் சிறையில் இருக்க முடியாமல், போராட்டம் நடத்தும் நிலையில், அரசியல் கைதிகளின் நிலையை யோசித்துப் பாருங்கள்.

எனவே, பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும். ஆனால் அது ஐ.நா சபைக்கு ஏற்றாற் போல் அல்ல. அதற்காக, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கிவிட்டதாக ஐ.நாவிற்கு கூறி, சிறு சிறு மாற்றங்களைச் செய்து அதனை இன்னும் பலப்படுத்தி வேறு ஒரு சரத்தாக கொண்டு வரக்கூடாது எனத் தெரிவித்தார். (ம-3)

## மயங்கி விழு...

(வயது-52) என்ற குடும்பப்பெண்ணே மரணமானவராவார்.

மகளுடன் சந்தைக்கு சென்று பொருட்கள் வாங்கிவிட்டு வீட்டிற்கு திரும்பிய நிலையில் அவரின் உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்டதை அடுத்து பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது அவர் மரணமடைந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணையினை மேற்கொண்டு சடலத்தை யாழ் போதனாவைத்தியசாலைக்கு கொண்டு சென்று பிரேத பரிசோதனை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ம-60)

## காணாமல்...

கொள்வது தொடர்பில் ஏனைய ஆணையாளர்களுடன் கலந்துரையாடி தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் காணாமல் போனோர் அலுவலகத்தின் தவிசாளர் சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற பாராளுமன்ற அமர்வின் போது தமிழ் தேசியக் கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன், யாழ்ப்பாணம் மண்டைதீவில் இரு கிணறுகளில் 120 தமிழ் இளைஞர்களின் சடலங்கள் போடப்பட்டு, அவ்விரு கிணறுகளும் கொங்கிறீட்டினால் மூடப்பட்டுள்ளன.

உடனடியாக இக்கிணறுகள் தோண்டப்பட்டு அதற்குள் கொன்று போடப்பட்டுள்ள இளைஞர்களின் விபரங்கள் கண்டறியப்பட வேண்டும் எனக் கூறியிருந்தார்.

இது தொடர்பில் வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ம-3)

## இரு அரசியல் கைதிகளுக்கு...

நல்லன் சிவலிங்கம் (வயது 42 ), இராசதுரை ஜெகன் (வயது 38) ஆகியோர் 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டனர். விசாரணைகளின் பின்னர் 2013 ஆம் ஆண்டு இவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அன்றில் இருந்து இந்த வருடம் வரை வழக்கு நடைபெற்று வந்த நிலையில் சாட்சிகள் ஏதும் இல்லாமல் அவர்களின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் அடிப்படையாக கொண்டு 5 வருடங்கள் சிறைத்தண்டனை வழங்கி நேற்று அனுராதபுர நீதிமன்றால் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுவிக்கப்படுவார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் அண்மையில் தெரிவித்திருந்த செய்திக்குறிப்பை மேற்குறித்த கைதிகள் நீதிமன்றில் சமர்ப்பித்து கேட்டபோது சட்டமா அதிபர் திணைக்களத்தால் அந்த அறிவித்தல் வரவில்லை என தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே அவர்கள் தமது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தையும் வழங்கியுள்ளனர். இந்த நிலையில் அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது என உறவுகள் தெரிவித்துள்ளனர். (ம-9)

## போர்க் குற்ற...

மாதங்களில் பல ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்படுவதற்கு காரணமான 58ஆவது படைப்பிரிவின் கட்டளை தளபதி என்ற அடிப்படையில் சவேந்திர சில்வா விசாரணையை எதிர்கொள்ள வேண்டியவர் என ஐக்கிய நாடுகள் விசாரணை குழு தெரிவித்திருந்தது.

சவேந்திர சில்வா தலைமையிலான படைப்பிரிவு பெண்கள் குழந்தைகள் உட்பட பலர் சுட்டுக் கொல்லப்படுவதற்கும் நூற்றுக்கணக்கானவர்கள் காணாமல் போவதற்கும் சித்திரவதைகளுக்கும் காரணமானவர்.

2009 மே 18ஆம் திகதி வெள்ளைக் கொடியுடன் சரணடைதல் இடம் பெற்ற வேளை அப்பகுதியில் சவேந்திர சில்வா காணப்பட்டார். விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியல் தலைவர்களுடன் சில்வா கைகுலுக்குவதை நான் நேரில் பார்த்தேன் என ஒருவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டிற்கு ஒவ்வொரு முறை செல்லும்போது கைது செய்யப்படும் அபாயத்தை எதிர்நோக்கும் இராணுவ பிரதானியொருவரை இலங்கை தற்போது கொண்டுள்ளது . மேஜர் ஜெனரல் சில்வா குறித்த ஆவணமொன்றை நாங்கள் தயாரித்துள்ளோம். அதனை விரைவில் வெளியிடுவோம். சவேந்திர சில்வா மீது சர்வதேச குற்றச்சாட்டுகளை சுமத்துவதற்கு போதியளவு ஆதாரங்கள் உள்ளதாக நாங்கள் கருதுகின்றோம்.

அதிகம் தேடப்படும் இலங்கையர்களில் மிக முக்கியமானவர் இவர் என்பதில் சந்தேகமில்லை. எனினும் ஒரு தசாப்தகாலத்திற்கு பின்னர் விசாரணையை எதிர்கொள்ள வேண்டிய அவருக்கு துயரம் அளிக்கும் விதத்தில் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. 2009 யுத்தத்திலிருந்து தப்பி வெளிநாட்டுக்கு தப்பியோடிய பலர் சவேந்திர சில்வாவின் நியமனம் குறித்து அச்சம் வெளியிட்டுள்ளனர்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களிற்கு அவமரியாதை செய்யும் நியமனம். இது இலங்கையில் நல்லிணக்க முயற்சிகளையும் பாதிக்கின்றது. முழு நாட்டிற்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தியவரும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் நெருங்கிய சகாவுமான ஒருவரிற்கு பதவி உயர்வு வழங்குவது குறித்து ஜனாதிபதி சிறிசேன என்ன கருதுகின்றார் என்பது புரியவில்லை.

கடந்த சில வருடங்களில் சவேந்திர சில்வாவின் பதவி உயர்வினை உன்னிப்பாக கண்காணித்து ஆராய்ந்திருந்தால் இந்த பதவி உயர்வை தடுத்திருக்கலாம் என ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார். (ம-3)

## இந்தியாவிடம்...

சார்க் நாடுகளின் நாணய பண்டமாற்றின் ஊடாக இடம்பெறும் கொடுக்கல்வாங்கல்களுக்கு எவற்றையும் அடகுவைக்க வேண்டிய தேவையில்லை என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று பிரதமரின் விசேட உரை இடம்பெற்றது. இதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றிக்கொண்டிருந்த போது, விமல் வீரவன்ச எம்.பி, ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம-3)

## இறுதி யுத்தத்தில்...

குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு இடம்பெறுமாயின் அது சுயாதீனமாகவும் நேர்மையானதாகவும் அமையாதென சுட்டிக் காட்டிய சுமந்திரன், சர்வதேச பொறிமுறையே அவசியம் என வலியுறுத்தியுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை கூடிய பாராளுமன்ற அமர்வில், குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய சுமந்திரன் இவ்விடயத்தை வலியுறுத்தியுள்ளார். (ம-3)

## பாடசாலைச் சூழ...

படுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பணிப்புரை விடுத்தார்.

அதற்குத் தேவையான சட்ட திருத்தங்களை விரைவாக மேற்கொண்டு நடைமுறைப்படுத்துமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு தெரிவித்தார். (ம-3)

## ஆட்சிக் குழப்...

மேலும் குறிப்பிட்டார். நேற்றைய தினம் பாராளுமன்றில் உரையாற்றும்போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம-3)

## எட்டு இந்திய...

இரண்டு தடவைகளில் எட்டு இந்திய மீனவர்கள் நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கடந்த 7 ஆம் திகதி நான்கு மீனவர்களும் ஒரு படகும் மறுநாள் 8 ஆம் திகதி நான்கு மீனவர்களும் ஒரு படகும் 24 மணித்தியாலங்களுக்குள் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


யாழ்ப்பாணம் அரசியல் ஆர்வலர் குழாம் நடாத்தும்

கருத்துக்களால் களமாடுவோம்

அரசியல் கருத்தரங்கு



தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு ஜனநாயக வழிமுறைகளினூடாகத் தீர்வும் தமிழ்த் தலைமையின் வகிபாகமும்

சிவில் சமூக பிரதிநிதிகளின் வாதங்களுக்கு பதிலுரையாற்றுகின்றார்

பாராளுமன்ற உறுப்பினர்

மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன்

(ஜனாதிபதி சட்டத்தரணி)

காலம் : 12.01.2019 சனிக்கிழமை
நேரம் : பிற்பகல் 3.00 மணி
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

களத்தில்.........

அகவணக்கம் ஈகச்சுடரேற்றல்

வரவேற்புரை

உயர்திரு. சந்திரலிங்கம் சுகிர்தன்
(முன்னாள் உறுப்பினர், வடக்கு மாகாணசபை)

தலைமையுரை

உயர்திரு. சந்திரமௌலீசன் லலீசன்
(பிரதி அதிபர், ஆசிரியர் கலாசாலை – கோப்பாய்)

கருத்துரைகள்

பிரம்மஸ்ரீ. ப. மனோகரக்குருக்கள்
(பிரதம குரு, சிவன்கோவில் – வல்வெட்டித்துறை)

அதிவண. டானியல் தியாகராஜா
(பேராயர், தென்னிந்தியத்திருச்சபை – யாழ்ப்பாணம் அத்தியட்சாதீனம்)

கலாநிதி சுப்பிரமணியம் சிவகுமார்
(பொறியியல் பீடம் – பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்)

வைத்தியர் தங்கமுத்து சத்தியமூர்த்தி
(பணிப்பாளர், போதனா வைத்தியசாலை – யாழ்ப்பாணம்)

உயர்திரு. நடேசபிள்ளை வித்தியாதரன்
(மூத்த ஊடகவியலாளர்)

பதிலுரை

பாராளுமன்ற உறுப்பினர்
கௌரவ மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன்
(ஜனாதிபதி சட்டத்தரணி)

நன்றியுரை

உயர்திரு. சிவராஜா கஜன்
(அரசியல் ஆர்வலர்)

நிகழ்ச்சித் தொகுப்பு

சட்டத்தரணி. கேசவன் சயந்தன்
(முன்னாள் உறுப்பினர் – வடக்கு மாகாணசபை)

அனைவரும் வருக!

(C-5107)



வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1526 திகதி 2019/01/10
N Q U
வெற்றி இலக்கங்கள் 01 03 54 61 போனஸ் இலக்கம் 02

கொவிசெத
திகதி 2019.01.10
சீட்டிழுப்பு இலக்கம் 2000
L 25 53 67 69

மஹஜன சம்பத
திகதி 2019/01/10
சீட்டிழுப்பு இலக்கம் 3830
T 6 5 0 4 8 7

நீரோகா
திகதி 2019/01/10
சீட்டிழுப்பு இலக்கம் 497
கன்னி 23 43 49 51 24

**காண்டம் பார்த்தல்**

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:-076 835 1932, 021 223 2222

உரும்பிராய்.

(7107)

## பெற்றோல் மற்றும்...

இதன்மூலம் 92 ஒக்ரைன் பெற்றோலின் விலை 123 ரூபாயாகவும் 95 ஒக்ரைன் 142 ரூபாயாகவும் ஓட்டோ டீசலின் விலை 99 ரூபாயாகவும் சுப்பர் டீசலின் விலை 118 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படவுள்ளது. (ம-3)

## அரசியலமைப்பு...

புதிய அரசியலமைப்பை உருவாக்கும் வகையில் முழு பாராளுமன்றமே அரசியலமைப்புச் சபையாக 2017ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. அதற்கு அமைய புதிய அரசியலமைப்பை உருவாக்கும் நிபுணர்கள் குழுவின் வரைவை ஆராய இன்று அரசியலமைப்புச் சபை கூடுகிறது.

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரஸ்ரீ தலைமையில் கூடியது. இதனையடுத்து இடம்பெற்ற சபாநாயகர் அறிவிப்பின் போது, அரசிலமைப்பு சபை இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கூடுமென பிரதி சபாநாயகர் அறிவித்தார். (ம-3)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (7104)

FALC FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்சு

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.

V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 26.01.19 சனி 10 மணி

181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் : 28.01.19 3.30pm

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1

IELTS, SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

(B-5109)

PERSONAL & GROUP CLASSES

A/L 2019, 2020, 2021 Day Class

கணக்கீடு, பொருளியல்

புதிய பிரிவுகள் ஆரம்ப தேர்ச்சியில் இருந்து ஆரம்பம்

(Paper & mcq Class)

T.P:077 221 7883 | K.A. Sugee (C-5109)

இல.355/4, இருபாலை வீதி, கோண்டாவில்.

**Techno World**

வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

A/L தொழில்நுட்ப பிரிவு

A/L 2021 - திங்கட்கிழமை - வெள்ளிக்கிழமை

பகல் வகுப்புக்கள் 8.00 - 11.00am

A/L 2019 Day Class

திங்கட்கிழமை - வெள்ளிக்கிழமை

பகல் வகுப்புக்கள் 8.00 - 01.30pm

E.Tec/ B.Tec, SFT, ICT

பகல் வகுப்புக்கள் நடைபெறும் ஒரே ஒரு கல்வி நிறுவனம்.

புதிதாக அமைக்கப்பட்ட நவீன ஆய்வுகூட வசதிகளுடன்

தொடர்புகளுக்கு : 077 017 5346 (C-4610)

**வீடு வாடகைக்கு**

பலாலி வீதியில் பரமேஸ்வரா சந்தி பெற்றோல் நிரப்பு நிலையம் முன் 3 அறைகள் 3 கழிவறைகள் கொண்ட தளபாடமிடப்பட்ட வீடு குறுகிய காலத்துக்கு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 953 0496 (7112)

**குவைத் வேலைவாய்ப்பு**

மோட்டார் சைக்கிள் டிலிவரி ஆட்கள் (இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம் போதுமானது)

மோ. சைக்கிள் மெக்கானிக்

கார் சாரதி (மத்தியகிழக்கு சாரதி அனுமதிப்பத்திரம்)

உணவு, தங்குமிட வசதி, போக்குவரத்து, மருத்துவ ஏற்பாடுகள் கம்பனியினால் வழங்கப்படும்.

ஆரம்ப கட்டணம் இல்லை

பதிவுக் கட்டணம் ரூ.200

சம்பளம் ரூ. 71,640/-

077 00 38 215 021 221 9 221

Emerald Isle Manpower & Travel Services The Sri Lankan Recruitment Specialists License No. 2268

221-1/1 மின்சார நிலைய வீதி 2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

வடக்கின் 1வது & ஒரேயொரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் (C-5098)

**விசேட இறுதி கருத்தரங்குகள்**

வட மாகாண அலுவலகப் பணியாளர்

சனி, ஞாயிறு உட்பட 9.30 - 2.30 (30 மணித்தியால வகுப்புக்கள் நடைபெறும்)

அதிபர் சேவை தரம் - 3

ஞாயிறு (13/01) 9.00 - 3.00

அடுத்த வாரம் முதல் சனி, ஞாயிறு 9.00 - 3.00

076 688 3394

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவு (யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

**விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு

UK- 550 /=Kg

கனடா-900 /=Kg

ஜேர்மனி- 700 /=Kg

நெதர்லாந்து-700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS (C-4942)

**JV Language Centre**

Deutsch

புதிய வகுப்புகள் ஆரம்பம், மந்திகை in சிலையடி கிளிநொச்சி. சாவகச்சேரி.

T.Nanthan

077 078 2022, 076 689 0473 (C-5064)

# மரண அறிவித்தல்



பிறப்பு : 1950.08.28 - இறப்பு : 2019.01.10

## நாகலிங்கம் சுப்பிரமணியம்

(இ.போ.ச ஓய்வுபெற்ற ஊழியர்)

காரைநகரினை பிறப்பிடமாகவும், பண்ணாகத்தினை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (10.01.2019) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - பாக்கியம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற கந்தசாமி - வள்ளியாச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், தேவமலர் அவர்களின் பாசமிகு கணவரும், சாந்தரூபன் (லண்டன்), சுபரூபன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், யசோதா அவர்களின் அன்பு மாமனாரும், அபிசயனின் (அபி) பாசமிகு பேரனும், இராசரத்தினம், அன்னலட்சுமி, இராசலட்சுமி, விஜயலட்சுமி, தனலட்சுமி, பாக்கியலட்சுமி, அமரர் சற்குணராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சீனிவாசகம் (அமரர்), பொன்னம்மா (அமரர்), கிருஷ்ண மூர்த்தி (இ.போ.ச ஓய்வுபெற்றவர்), சறோஜா (பேபி), ஆறுமுகசாமி (அமரர்), பேரின்பநாதன் (பிரான்ஸ்), தேவராசா (நோர்வே), தேவராணி, இராசரத்தினம், சிவகடாட்சம், சக்திவேல், சிவபாலன், தபேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

பண்ணாகம், சுழிபுரம்

0217901936, 00447710554142

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.